# புதிய ஜனநாயகம்

15-30 நவ. '85

1

ரூ. 1



எத்தியோப்பியாவில் மட்டுமல்ல...



இந்தியாவிலும்தான்...

பட்டினிச் சாவுகள்

# உழைக்கும் மக்களின் புரட்சிப் புயல்

வாழ்க்கை இனியும் சகித்துக்கொள்ள முடியாததாகி விட்டது. சிலுவையில் மரண தண்டனை பெற்றவன் வதைக்கப்பட்டு தனது சவப்பெட்டியைத் தானே சுமந்து செல்வதுபோல வாழ்க்கையே சுமையாகி விட்டது. 'செத்தால்தான் நிம்மதி' என்று பலர் சொல்லுமளவிற்கு வாழ்க்கை நைந்துப் போய் விட்டது.

எங்கும் அநியாயத்தின் ஆட்சி! அக்கிரமக்காரர்களின் அட்டகாசம்!! ஆம்; இதுவே இன்றைய ஒழுங்கு!

ரசிய, அமெரிக்க வல்லரசுகள் நமது நாட்டை தங்கு தடையின்றி வேட்டையாடுகின்றன; அவர்களின் தாசர்களான தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப் பிரபுக்களின் சுரண்டலும் அடக்குமுறையும் தேசத் துரோகமும் அளவு கடந்து போய்க் கொண்டிருக்கின்றன! இவர்களின் அடக்குமுறை எந்திரமான அரசும் அதிகார வர்க்கமும் அன்றாடம் ஊதிப் பெருகி, ஒரு கோடிக்கால் பூதம்போல இந்த சமுதாயத்தின் சர்வாங்கத்தையும் நெரித்து திணறடித்துக் கொண்டிருக்கிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள் இன்னும் பிற உழைக்கும் மக்கள் அரசு எந்திரத்தின் பல் சக்கரங்களிடையே கரும்பு பிழிவதுபோல பிழியப் படுகிறார்கள்.

தேசிய இனங்களின் மீது புதுப்புது முறைகளில் மேலும் மேலும் அடக்கு முறைகள்! பெண்களின் மீதான கொடுமைகளின் கோரத் தாண்டவத்திற்கு எல்லையேயில்லாமல் போய்விட்டது! 'தாழ்த்தப்பட்ட' மக்கள், பழங்குடியினரின் மீது இழைக்கப்படும் அக்கிரமங்களுக்கு அளவேயில்லை.

பெருகிவரும் மக்களின் கோபங்களையும் போராட்டங்களையும் நசுக்கியெறிய பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற புதிய புதிய கொலை ஆயுதங்களை தரித்து வருகின்றது அரசு. அதன் இரத்தம் குடிக்கும் வெறி நாளுக்கு நாள் ஆவேசமடைந்து கொண்டிருக்கிறது.

1975-ம் ஆண்டு அவசர நிலை போன்று ஒரு பாசிச சர்வாதிகாரத்தைத் திணிக்க பாசிச ராஜீவ் கும்பல் வேகமுடன் தயாரிப்புகளைச் செய்து வருகின்றது.

இவ்வாறு நமது அன்பிற்குரிய நாடும் மக்களும் மிகப் பெரிய ஓர் அபாயத்தை இன்றைய கட்டத்தில் எதிர் கொண்டுள்ளோம்!

இந்த நெருக்கடியான கால கட்டத்தில், எதிர்த் தரப்பிலுள்ள வோட்டு அரசியல் கட்சிகள் என்ன செய்து கொண்டுள்ளன?

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட கிழவன் திண்ணையில் படுத்துக் கொண்டு புலம்பிக்கொண்டிருப்பானே, அதைப் போல இந்த வோட்டுப் பொறுக்கிக் கட்சிகள் அனைத்தும் புலம்பிக் கொண்டும் முனகிக் கொண்டும் தான் திரிந்து வருகின்றன. ஒரு சமயம் இவைகள் மக்களிடம் சென்று மன்றாடுகின்றன; இன்னொரு சமயம் அவர்களை வெறுப்புடன் பார்த்து சபித்துக் கொட்டுகின்றன. அதே சமயத்தில் மக்களின் முதுகு மீது சவாரி செய்ய வாய்ப்பை ஆவலுடன் தேடிக்கொண்டுமிருக்கின்றன; போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட இந்தக் கட்சிகள் எவையும் மக்களின் போராட்டத்திற்கு தலைமை தாங்க வக்கற்றவை.

தொழிற்சங்கங்கள் எப்படி உள்ளன?

தரகு முதலாளிகள், அதிகார வர்க்கத்தினருடைய கையாட்களாக தொழிற்சங்க தலைவர்கள்; வோட்டுப் பொறுக்கிக் கட்சிகளுடைய தொழிற்சங்க தலைவர்களாகட்டும், அல்லது அரசியலே கூடாது என்று சொல்கின்ற 'உத்தம' தொழிற்சங்கத் தலைவர்களாகட்டும் அனைவரும் இப்படித்தான்! சாதிகளின் பெயரில், வோட்டுக் கட்சிகளின் பெயரில், தொழில் உட்பிரிவு அடிப்படையில் என்று எண்ணற்ற சங்கங்களை உருவாக்கி தொழிலாளர்களை இவர்கள் கூறுபோட்டு ஜமீன் நடத்துகிறார்கள்; தொழிலாளியிடத்தில் அவனது சொந்த வாழ்க்கையை சொகுசாக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆசை காட்டியும் சரியான போராட்டத்தைத் தொடுத்தால் குடும்பமே நடுத் தெருவிற்கு வந்து விடும் என்று மிரட்டி பீதியடையச் செய்தும் பொருளாதார, உடனடிக் கோரிக்கைகளை மட்டும் முன் வைத்து, பேடித்தனமான போராட்டங்களை திரும்பத் திரும்ப நடத்தி தொழிலாளர்களின் இயல்பான போராட்ட குணத்தை மழுங்கடித்து ஒரு சுயநலப் பிராணியாக அவனை மெல்ல மெல்ல சீரழித்து வருகிறார்கள்; இந்த மூலதனமில்லா முதலாளிகளால் தொழிலாளர்களின் அரசியல் போராட்டத்திற்குத் தலைமை தாங்க முடியவே முடியாது.

நமது நாட்டின் முதுகெலும்பாகிய விவசாயிகளுக்கான போராட்ட அமைப்புகள் ஒன்றுகூட வலுவாக இல்லை. ஒரு காலத்தில் துள்ளிக் கொண்டிருந்த நாராயணசாமி தலைமையிலான மேல்தட்டு நடுத்தர விவசாயிகள், பணக்கார விவசாயிகள், நிலப்பிரபுக்களின் சங்கங்கள் போன்றவை கூட இன்று சோர்ந்து, சிதறிப் போய்விட்டன. கூலி ஏழை விவசாயிகளின் சங்கங்கள் என்று பெயர் சூட்டிக் கொண்டுள்ள போலிக் கம்யூனிஸ்டுகளின் அமைப்புகளும் கூட அநாதைப் பிள்ளைகள் போல அழுது கொண்டு தான் இருக்கின்றன. வேறு ஒன்றையும் இவைகள் சாதிக்க முடிவதில்லை.

வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்ட பாரம்பரியத்தைக் கொண்ட மாணவர்களுடைய அமைப்புகளும் இந்த நிலையில்தான் உள்ளன; மாணவர்களோ டிஸ்கோ கலாச்சாரத்தில் வீழ்த்தப்பட்டுள்ளனர்.

இப்படி ஓட்டுப் பிச்சை எடுக்கும் கட்சிகள், சந்தா பொறுக்கித் தின்கின்ற சங்கங்கள் அனைத்தும் மக்களின் போராட்ட அமைப்புகளாக இருக்க லாயக்கற்றுப் போய் விட்டன. அரசாங்கப் பதவிகள் — கௌரங்கள் என்ற எச்சில் துண்டுகளுக்காகவும் சொத்து, சுகம் என்ற ஆடம்பரங்களுக்காகவும் விவசாயிகளை, தொழிலாளிகளை இன்னும் பிற உழைக்கும் மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தும் சூதாடிகளாக மாறி விட்டன.

இந்நிலையில் மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்தனையை தனது நடைமுறைக்கான வழிகாட்டியாக கொண்டுள்ள 'புதிய ஜனநாயகம்' —

பரந்துபட்ட மக்களை அரசியல் விழிப்புணர்வு கொள்ளச் செய்யும்! அவர்களை புரட்சிகர அரசியலால் ஆயுத பாணியாக்கும்! புரட்சிப் போரில் ஈடுபடச் செய்யும்!

மக்களிடையே எதிரிகள் பரப்பியுள்ள விரக்தி, அவநம்பிக்கையைப் போக்கி ஆயிரமாயிரம் போராளிகள் போராடி வருகின்றனர்; மென்மேலும் வருவர் என்ற நம்பிக்கையை இந்த இதழ் ஊட்டும்!

'இழப்புகளின்றி வெற்றியில்லை; இரத்தம் சிந்தாமல் போராட்டமில்லை; போராட்டமின்றி வாழ்க்கை இல்லை' என்பதை உழைக்கும் மக்களின் சிந்தனையில் பதிய வைக்க 'புதிய ஜனநாயகம்' பணியாற்றும்!

நிலவுகின்ற அரசியல் சட்ட வரம்பிற்கு நாடாளு மன்றப் பன்றித் தொழுவத்திற்கும் அப்பாலும் அதற்கு மாற்றாகவும் ஓர் ஆட்சி முறை, அமைப்பு முறை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி அதற்காகப் போராட மக்களை அணி திரட்டும்!

அனைத்து அதிகாரங்களும் உழைக்கும் மக்கள் கமிட்டிக்கே!

அனைத்து மக்களுக்கும் ஆயுதமேந்தும் உரிமை!

அனைத்து அதிகார மட்டங்களுக்கும் தேர்ந்தெடுக்கவும் திருப்பியழைக்கவும் உரிமை!

என்ற தாரக மந்திரங்களைக் கொண்ட ஆட்சி முறை— சட்டமியற்றும் அங்கமே, அதை அமுல்படுத்தும் அங்கமாகவுமுள்ள ஓர் ஆட்சி முறை — என்ற இந்த 'புதிய ஜனநாயக' மாற்று ஆட்சி முறையை புரட்சியின் மூலம் நிறுவுவதற்கு 'புதிய ஜனநாயக' இதழ் பாடுபடும்.

— ஆசிரியர் குழு,
புதிய ஜனநாயகம்.

புதிய ஜனநாயகம்

1

15-30 நவம்பர் '85

தனி இதழ் ரூ. 1
ஆண்டுச் சந்தா ரூ. 24

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
எஸ். மதியழகன்
26, ஜெயலட்சுமிபுரம்
2-வது தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை-600 034.

# தியாகச் செஞ்சுடர்களுக்கு ...

உலகம் முழுவதும்
பாட்டாளி வர்க்கப்
புரட்சிகர லட்சியத்திற்காகவும்
ஒடுக்கப்பட்ட மக்களின்
விடுதலை முன்னேற்றத்திற்காகவும்
பல்வேறு தியாகங்களைப் புரிந்துள்ள
எல்லாத் தியாகச் சுடர்களுக்கும்,
இந்தியத் தாய்த் திருநாட்டின்
விடுதலைக்காகவும்
உழைக்கும் மக்களின்
நல்வாழ்விற்காகவும்
மார்க்சிய-லெனினிய-மாவோ
சிந்தனையின் ஒளியில்
புதிய ஜனநாயகப் புரட்சிப் போரில்
தங்களது இன்னுயிரை ஈந்த
எல்லாத் தியாக தீபங்களுக்கும்,
அவர்களது உதிரத்தால் சிவந்த
புரட்சிப் பாதையில்
எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி
உறுதியாகப் போராடுவோம்
என சூளுரைத்து,
எம் நெஞ்சமெல்லாம் நிறைந்த
வீரத் தியாகிகளுக்கு
இந்தச் சிவப்புமலரை,
'புதிய ஜனநாயக'த்தைக்
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

# காரியக் கோமாளிகள்

அலங்கார வளைவுகள், அலங்கார கோபுரம், மலர் கிரீடம், வண்ண விளக்கு, ஆளுயர போஸ்டர், லாரிகளில் தொண்டர்கள் என்று பிரமிப்பூட்டினர். எம்.ஜி.ஆரின் உண்மையான வாரிசு யார் என்பதை வெளிக்காட்டும் வகையில் போஸ்டர்களும், தத்தமது கோஷ்டி பத்திரிக்கைகளில் ஒருவரையொருவர் சாடுதலும், சவால்களும் தொடர்ந்தன.

அ.தி.மு.க.வில் அமைச்சர் வீரப்பன் கோஷ்டிக்கும் ஜெயலலிதா கோஷ்டிக்கும் இடையிலான மோதல் சமீப காலங்களில் பகிரங்கமாக நடக்க ஆரம்பித்துள்ளது. தேர்தலுக்குப்பின் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மந்தமான அரசியல் நிலைமையில் இந்த கோஷ்டி தகராறுகள் பரபரப்பான அரசியலாக பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்யப்பட்டது.

இதே நேரத்தில் வங்கிகளில் ரூ. 60 லட்சம் மோசடி செய்து காவலில் வைக்கப்பட்டுள்ள ராபின் மெயின் என்பவனுக்கும் அமைச்சர் காளிமுத்துவுக்கும் தொடர்பு இருப்பது அம்பலப்பட்டு பகிரங்கமாக வெளிப்பட்டது. இதனையே சாதகமாகக் கொண்டு காளிமுத்து—வீரப்பன் கோஷ்டியை ஜெயலலிதா கோஷ்டியினர் மிரட்டிப் பணிய வைக்க முயற்சிக்கின்றனர். மறுபுறம், டெல்லியை எதிர்த்து சவடால் பேசும் காளிமுத்துவுக்கு வாய்ப்பூட்டு போட இ. காங்கிரசார் முயற்சிக்கின்றனர்.

ஜெயலலிதாவின் அரசியல் மறுபிரவேசத்தையடுத்து கோஷ்டி தகராறுகள் இன்று உச்சகட்டத்தை அடைந்துள்ளன. கோஷ்டி தகராறுகள் இவ்வளவு பகிரங்கமாக நடந்தபோதிலும் கூட எம்.ஜி.ஆரால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். தனது அதிகார பலத்தை இழந்துவிட்டார். தமிழகத்தின் இன்றைய ஆட்சியும்சரி கட்சியும் சரி புறம்போக்கு நிலத்தை அவரவர் ஆக்கிரமித்துக் கொண்டு காட்டு தர்பார் நடத்தும் நிலைமையில் தான் உள்ளது.

கோஷ்டி தகராறுகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மந்திரி சபை கூட்டத்தைக் கூட்டிய எம்.ஜி. ஆர். தான் ராஜினாமா செய்யப் போவதாக பயமுறுத்தினார் பீதியடைந்த மந்திரிகள் அனைவரும் ராஜினாமா கடிதம் எழுதிக் கொடுத்து எம்.ஜி.ஆர். என்ன முடிவு எடுத்தாலும் கட்டுப்படுவதாக கூறி தற்காலிகமாக கோஷ்டி தகராறைநிறுத்தியுள்ளனர்.

ஜெயலிதாவுக்குப் பதவியளிப்பும் வீரப்பனுக்குத் தகுதி குறைப்பும் என திடீரென அறிவித்து ஆச்சரியமேற்படுத்திய எம்.ஜி.ஆர். அதிலிருந்து மக்கள் மீள்வதற்குள் தான் ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்து பிரமிப்பூட்டினார். சுருக்கமாகக் கூறினால் பொதுமக்களின் கவனம் கோஷ்டி தகராறுகளின் பக்கம் போகாமல் தன்னிடமே நிலையாக வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டுள்ளது.

எனவேதான் ஒரு மந்திரவாதியைப் போல ஆச்சரியமேற்படுத்தக் கூடிய காரியங்களைத் தொடர்ச்சியாக அவர் செய்துகொண்டிருக்கிறார். எம்.ஜி.ஆர். ஒரு கோமாளியா அல்லது ராஜதந்திரியா என்று மக்கள் குழம்பி ஒரு முடிவுக்கு வருவதற்குள் அடுத்த பிரமிப்பூட்டும் காட்சி ஆரம்பமாகிவிடுகிறது.

கோஷ்டி தகராறைத் தீர்க்க எம்.ஜி.ஆர். எடுத்துள்ள முடிவு விவேகமானதோ, ராஜதந்திர ரீதியானதோ அல்ல. எல்லா சர்வாதிகாரிகளையும் போலவே எம்.ஜி.ஆர், மிரட்டிப் பணிய வைக்கும் வேலையைத்தான் செய்கிறார். ஜெயலலிதாவுக்கு மீண்டும் பதவியளித்து, வீரப்பனின் இலாகாவைப் பறித்து வீரப்பன் கோஷ்டியை பயமுறுத்தி பணிய வைக்க முயற்சித்தார். ஆனாலும் கோஷ்டி தகராறு தீராமல் வலுக்கவே தான் ராஜினாமா செய்யப் போவதாக மிரட்டினார். கட்சிக்குள்ளேயே இத்தகைய சர்வாதிகார நிலை என்றால் அவரது ஆட்சியில் ஜனநாயகத்தைப் பற்றி பேச வேண்டியதில்லை.

கட்சியிலுள்ள கோஷ்டி தகராறுகளைத் தீர்க்க பாசிச இந்திரா கையாண்ட அதே முறையைத்தான் எம்.ஜி.ஆரும் கையாள்கிறார். கோஷ்டி தகராறுகளைத் தீர்க்க எல்லா கோஷ்டியினருக்கும் ஏதாவது ஒரு பதவி எனும் எலும்புத் துண்டை பாசிச இநதிரா வீசி வந்தார். தன்னிச்சையாக முடிவு செய்து யாரேனும் ஒருவரைத் தலைவராக சர்வாதிகாரமாக நியமிப்பார்.

> பிழைப்புவாதமே இக்கோஷ்டிகளின் அரசியல். பதவி சுகம் காண்பதே லட்சியத் திட்டம். வாய்ச்சவடால் அடித்து மக்களை ஏய்ப்பதே நடைமுறை வேலை.

இதே வழியைத்தான் எம்.ஜி.ஆரும் கையாள்கிறார். பாசிஸ்டுகள் எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் சிந்திக்கிறார்கள்;செயல்படுகிறார்கள். 'உலக நாடுகளின் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்த உலக மகா தலைவி' பாசிச இந்திராவினாலேயே உட்கட்சி கோஷ்டி தகராறுகளைத் தீர்க்க முடியாதபோது எம.ஜி.ஆர். எம்மாத்திரம்?

நாடாளுமன்ற சாக்கடையில் மூழ்கித் திளைக்கும் எல்லா ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகளிலும் கோஷ்டி சண்டைகள் நீடிக்கவே செய்கின்றன. முன்பு ஜனதா என்ற அவியல் கட்சி கோஷ்டி சண்டையாலேயே ஆட்சியை இழந்து அனாதையாயிற்று. மக்கள், ஐக்கியப்பட[illegible] நிலையான கட்சியையே விரும்[illegible]கின்றனர் என்ற எதிர் மறை அனு[illegible]வத்தை இன்று எல்லா ஓட்டுக் கட[illegible] களுமே ஓரளவு உணர்ந்துள்ளன. [illegible] களுக்குள் கோஷ்டி சண்டை இல்ல[illegible] என்று காட்டவே எல்லா ஓட்டுக் கட்[illegible] களும் முயற்சிக்கின்றன.

என்னதான் கோஷ்டி தகராறு முற்றினாலும் 'தலைவரின் கரத்தை வலுப்படுததுவோம்' என்றுதான் எல்லா கோஷ்டிகளும் கோரஸ் பாடுகின்றன. வெளிப்படையாக நடந்து வரும் இந்த கோஷ்டி தகராறுகள் மக்களிடம் தமது கட்சி நம்பிக்கை இழக்கும் நிலையை அடையுமுன் அவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்; தாங்கள் ஐக்கியப்பட்ட ஒரே கட்சி எனும் மாயையை மக்கள் முன் நிறுத்த வேண்டும் — இதுதான் எல்லா ஓட்டுக் கட்சிக்குள்ளும் நிலவும் எழுதப்படாத ஓர் ஒப்பந்தம்!

ஆனாலும் ஓட்டுக் கட்சிகளுக்குள் கோஷ்டி தகராறுகள் முற்றாக ஒழிந்தபாடில்லை. அவை தற்காலிகமாகத் தீர்க்கப்பட்டு மீண்டும் மூர்க்கத்தனமாகவே கிளம்புகின்றன. அ.தி.மு.க; இ. காங்கிரஸ் கட்சிகளில் கோஷ்டி தகராறுகள் இன்று பகிரங்கமாகவே நடக்கிறது. சிறிது காலத்திற்கு முன் தமிழக ஜனதாவில் கோஷ்டி தகராறு முற்றி கைகலப்புவரை சென்றது. ஆந்திரத்து எம்.ஜி.ஆர். ராமராவின் கட்சியிலும் சமீப காலமாக கோ[illegible] தகராறு முற்றி வருகிறது. ஓட்[illegible] சீட்டு கட்சிகளுக்குள் ஓயாத இ[illegible] கோஷ்டி தகராறுகளுக்குக் காரண[illegible] என்ன?

முதலாவதாக, இந்த ஓட்டுச்சீட்டு கட்சிக்குள் ஒத்த கண்ணோட்டம் இல்லை. அதாவது குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் கட்சியின் கொள்கைப்படி என்ன நிலைப்பாடு எடுப்பது என்பதில் ஒத்த புரிதல் இல்லாமல் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

இரண்டாவதாக, பதவி சுகம் கண்ட இந்த பிழைப்புவாத ஊழல் பெருச்சாளிகள் அரசாங்க சன்மானங்களை மேலும் பரவலாக்கி கொள்ளையடிக்கவும், இதில் தனக்கு கூடுதல் பங்கு கிடைக்க வேண்டுமெனவும் போராடுகின்றன. மூன்றாவதாக, ஜனநாயகமற்ற, கட்டுப்பாடற்ற தனிமனித சர்வாதிகாரப் போக்குகள் இக்கட்சிகளில் நிலவுகின்றன. இதனாலேயே எல்லா ஓட்டுச் சீட்டு கட்சிகளிலும் கோஷ்டி சண்டைகள் பெருத்த அளவில் நடை

பெறுகின்றன.

அ.தி.மு.க.வில் மோதிக் கொள்ளும் இரு கோஷ்டிகளில் ஜெயலலிதா விவேகமானவர், டெல்லியில் செல்வாக்கு உள்ளவர், கட்டுப்பாடுணர்வு மிக்கவர், எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர், சமீபத்திய நாடாளுமன்ற கூட்டத் தொடரில் காங்கிரசை சாடி திராவிட பாரம்பரியத்தைக் காத்தவர், முன்னாள் நடிகை என்ற முறையில் மக்களிடம் செல்வாக்கு உள்ளவர்; எனவேதான் எம்.ஜி.ஆர் அவரை துணை முதல்வராகவும் தனது வாரிசாகவும் தேர்ந்தெடுப்பார் எனத் தெரிகிறது; இது சரியான முடிவுதான் — இவ்வாறு காங்கிரஸ் ஆதரவு ஏடுகளும், பார்ப்பனீய பத்திரிக்கைகளும் ஜெயலலிதாவை துதிபாடி எழுதுகின்றன. ஜெயலலிதாவை மிகைப்படுத்தி வரும் இத்தகவல்கள், காங்கிரசார் அவரைக் கருவியாக பயன்படுத்துவதை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன.

வேறு சிலர் ஜெயலலிதாவுக்கு எதிராக நிற்கும் வீரப்பன் கோஷ்டியினர் தன்மானமுள்ளவர்கள், திராவிட இயக்கம் தமிழகத்தில் மங்கி மறைந்துவிடாமல் காப்பவர்கள், வடவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) தமிழகத்தை அடகுவைக்க விரும்பாதவர்கள் என்று நியாயம் பேசுகிறார்கள்.

உண்மையில் வீரப்பனுக்கோ அவரது கோஷ்டிக்கோ, திருநாவுக்கரசு கூறுவது போல இந்த 'சைபர்' மந்திரிகளிடம் தன்மானம், சுயமரியாதை என்பது எள்ளின் முனையளவும் இல்லை. ஜெயலலிதா மீண்டும் பதவியளிக்கப்பட்டு எம். ஜி. ஆரால் சர்வாதிகாரமாக நியமிக்கப்பட்டதை கைகட்டி வாய்பொத்தி ஏற்றுக் கொள்ளும் கொத்தடிமைகளே இவர்கள்.

திராவிட பாரம்பரியத்தியிலிருந்து வந்த 'வீரப்ப ஆழ்வார்' அறநிலையத் துறை மந்திரியான பிறகு தமிழகத்தில் சங்கராச்சாரிகளும், சநாதனிகளும், பங்காரு பண்டாரங்களும் புதுப் பொலிவுடன் உலா வருவதும், சுயமரியாதையின்றி இப்பண்டாரங்களின் காலில் விழும் மந்திரிகளும் என தமிழக ஆத்திக வரலாற்றில் பெரும் 'புரட்சியே' நடந்துள்ளது.

மாநில சுயாட்சி என மார்தட்டிக் கொள்ளும் இவர்கள் கருநாடகத்திடமிருந்து காவிரி நீரைப் பெற முடியாமல் தஞ்சை விவசாயிகளைத் தவிக்க விட்டனர். இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்ற இந்த தன்மான வீரர்கள் பாசிச ராஜீவ் அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து வாயே திறக்கவில்லை.

ஈழத் தமிழர் பிரச்சினையில் இனமானமிக்க இந்த அடலேறுகள் இதுவரை எந்தவொரு தெளிவான நிலைப்பாடுமன்றி வெற்று வாய் சவடால் அடித்ததன்றி வேறென்ன செய்தார்கள்? அன்று வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்ற இந்த மாண்புகள் இன்று மார்வாடிகளுக்கு மாலையணிவித்து மண்டியிட்டல்லவா கிடக்கிறார்கள்.

சுருக்கமாகக் கூறினால் இரு கோஷ்டிகளுக்கும் தெளிவான கொள்கையோ திட்டமோ இல்லை. பிழைப்புவாதமே இக்கோஷ்டிகளின் அரசியல். பதவி சுகம் காண்பதே லட்சிய திட்டம். வாய் சவடால் அடித்து மக்களை ஏய்ப்பதே நடைமுறை வேலை. நிலைமை இவ்வாறிருக்க அ.தி.மு.க. கோஷ்டிகளுக்குள் முற்போக்கு, பிற்போக்கு என தரம் பிரித்து பார்ப்பது வடிகட்டிய முட்டாள்தனமேயன்றி வேறில்லை.

அம்பலத்திற்கு வந்துவிட்ட இந்த அ.தி மு.க. கோஷ்டி தகராறை செய்திப் பத்திரிக்கைகள் முதன்மைப் படுத்தி விறுவிறுப்பூட்டுகின்றன. ஊகங்களையும் அனுமானங்களையும் 'கிசுகிசு' செய்திகளையும் வெளியிட்டு ஆவலைத் தூண்டி நடுத்தரவர்க்கத்தின் உணர்வுகளுக்குத் தீனி போட்டு காசாக்குகின்றன.

நடைபெற்று வரும் கோஷ்டி தகராறுகள் நகைக்கத் தக்கதோ அல்லது வெறுமனே ஆவலைத் தூண்டும் அற்ப விவகாரமோ அல்ல; கண்டு கொள்ளாமல் கௌரவமாக விலகி நிற்க வேண்டிய விஷயமுமல்ல. மாறாக இது உழைக்கும் மககளின் நலனைப் பாதிக்கக் கூடிய பாரதூரமான விஷயமாகும். ஏனெனில் இந்த பிழைப்புவாத அரசியல் கோஷ்டிகளில எது வெற்றி பெற்றாலும் அது உழைக்கும் மக்களுக்கு எந்த நன்மையும் செய்துவிடப் போவதில்லை. உழைக்கும மக்கள் மீது அம்மணமான அடக்குமுறையைச் செலுத்தும் பாசிச கும்பலாகவே பரிணமிக்கப் போகின்றன.

> நடைபெற்றுவரும் கோஷ்டி தகராறுகள் நகைக்கத்தக்கதோ அல்லது வெறுமனே ஆவலைத் தூண்டும் அற்ப விவகாரமோ அல்ல; கண்டு கொள்ளாமல் கௌரவமாக விலகி நிற்க வேண்டிய விஷயமுமல்ல. மாறாக, இது உழைக்கும் மக்களின் நலனைப் பாதிக்கக் கூடிய பாரதூரமான விஷயமாகும்.

முன்பு தி.மு.க.விலிருந்து அ.தி.மு.க. பிரிந்தபோதுகூட அதை கோமாளி கட்சி, நடிகர் கட்சி என எள்ளிநகையாடினர் நடுத்தர வர்க்கத்தினர். நாட்டை ஆள்வதற்கு அனுபவமோ, பாரம்பரியமோ இல்லாதவர்கள் என அற்பமாகக் கருதினர். ஆனால் இந்த கோமாளிக் கடசியும் ஆட்சியும் கொலை வெறி பிடித்த பாசிச ஆட்சியாகவும் கட்சியாகவும் உருவெடுத்தது. பாசிச இந்திரா மற்றும் ராஜீவ் கும்பலின் பாதந்தாங்கியாகத் திகழ்கிறது.

மேலும் பாசிச இந்திரா கும்பலும் சரி, ராஜீவ் கும்பலும் சரி இத்தகைய பிழைப்புவாத, காரியவாத கோஷ்டி எங்கு உருவெடுத்தாலும் அதனை வளர்த்து ஆளாக்கி தனது விசுவாச நாயாக மாற்றியமைத்துக் கொள்கிறது. என். டி. ராமராவுக்கு எதிராக பாஸ்கரராவ் கோஷ்டி உருவான போது பாசிச இந்திரா அதனைப் பயன்படுத்திக் கொண்டது நாடறிந்த உண்மை. இதே நோக்கத்திலிருந்துதான் இன்று இ.காங்கிரஸ் ஜெயலலிதா கோஷ்டியை திரைமறைவிலிருந்து ஆதரிக்கிறது; ஆட்டுவிக்கிறது.

தமிழகத்தின் களங்கங்களான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தமது பிழைப்பு வாத அரசியலுக்கு தனி மனித கவர்ச்சியை, துதிபாடலையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. எம்.ஜி.ஆர். என்ற தனிநபரைத் தெய்வமாக பூஜிக்கும் நிலையில் வெறியூட்டப்பட்ட நிலையில இன்று பாமர மக்கள் மாற்றப்பட்டுள்ளனர். எல்லா ஓட்டுக் கட்சிகளும் இந்த இழி நிலையை எதிர்க்கத் திராணியற்று முடங்கிப் போயுள்ளனர். நடந்து முடிந்த தேர்தலின் போதுகூட எம்.ஜி.ஆரையோ, இந்திராவையோ சாடிப் பேசக் கூடாதென்ற எழுதாத ஒப்பந்தத்தை எல்லா ஓட்டுக் கட்சிகளுமே ஏற்றுக் கொண்டன.

அன்று எம்.ஜி.ஆர் உடல் நலம் பெற வேண்டுமென தீக்குளித்தனர் அக்கட்சி தொண்டர்களில் சிலர். இன்றோ எம் ஜி.ஆர். ராஜினாமா செய்யக் கூடாதென கோட்டை முன் தீக்குளித்தார் தொண்டர் ஒருவர். இன்னொருவர் [illegible] அடி உயரத்திலிருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொண்டார். இதுதான் தியாகம், சுயமரியாதை என விளம்பரப்படுத்தப்பட்டு இனனும் பலர் மடிவதும், இறந்தவர்க்கு அக்கட்சி சார்பில் நிதியளிப்பு விழாவும் நடத்தப்பட்டு, மேலும் எம்.ஜி.ஆர். என்ற தனிநபர் மீதான வெறியூட்டலும் தொடர்கதையாக நீளத்தான் போகிறது.

எம்.ஜி.ஆரின் தனிநபர் கவர்ச்சி, செல்வாக்கு ஆகியவற்றுக்கு நகர்ப்புற உதிரிப் பாட்டாளிவர்க்கமும், மிக முக்கியமாக கிராமப்புற விவசாயி வர்க்கமும் சமுக அடிப்படையாக உள்ளது. விவசாயிகளிடையே நிலவும் நிலப்புரபுத்துவ கலாச்சாரமே எம் ஜி. ஆரை தங்களது பிரதிநிதியாகவும், அதே சமயம் தங்களது எஜமானனாகவும், தெய்வமாகவும் கருதத் தூண்டுகிறது.

எனவே தனிமனித கவர்ச்சி அரசியலுக்கு அடிப்படையாக விளங்கும் நிலப்பிரபுத்துவத்தை நிர்மூலமாக்க வேண்டும். கிராமப்புற விவசாயிகளிடம் பாசிச எம்.ஜி.ஆரின் உண்மைச் சொரூபத்தை திரைகிழித்துக் காட்ட வேண்டும். நாளை ஓர் பாசிச கும்பலாகப் பரிணமிப்பதற்கான அடிப்படைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பிழைப்புவாத அரசியல் சக்திகளை உழைக்கும மக்கள் புறந்தள்ள வேண்டும்; புறக்கணிக்க வேண்டும். ●

● பாலன்

# இது இயற்கையின் சீற்றமல்ல...

ஒரிஸ்ஸா மாநிலத்தில் காலகண்டி மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. பல பகுதிகளில் குடிநீர் கிடைப்பதே கடினமாக உள்ளது. கிராமவாசிகள் உண்பதற்கு ஏதுமின்றி மண்ணைத் தோண்டி செடிகளின் வேர்களைச் சேகரித்து ஊற வைத்து உண்ணுகின்றனர். இச்செடிகள் பெரும்பாலும் நச்சுச் செடிகளாக இருப்பதனால் இதுவரை பலர் வாந்தி எடுத்த பின்பு இறந்துள்ளனர். பலரின் கண்கள் குருடாகப் போய் விட்டன.

கிராமத்துத் தாய்மார்கள், தாங்கள் 'முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து பெற்ற' தமதருமைக் குழந்தைகளை இனிமேலும் தங்களால் காப்பாற்ற முடியாதென்பதால் ஒரிரு சேலைகளுக்காகவும், ஐந்து, பத்து ரூபாய்களுக்காகவும் அனாதை இல்லங்களுக்கும், பணக்காரர்களிடம் அடிமைச் சேவகம் செய்யவும் விற்கின்றனர். கிராம மக்கள் அனைவருமே வறுமையினாலும், பட்டினியினாலும் கண்கள் குழி விழுந்து, முகத்தில் [illegible] லும்புகள் துருத்திக் கொண்டு நிற்க, மனித எலும்புக் கூடுகளாய் உலாவருகின்றனர்.

ஜூலை மாத இறுதிக்குள் குறைந்தது 100 பேராவது இறந்திருக்கலாம் என்று செய்திகள் கூறுகின்றன. மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கினர், ஏறத்தாழ பதின்மூன்று இலட்சம் பேர், கடந்த மூன்று வருடங்களாக வறட்சியினால் வதங்கி வாடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் காலகண்டி மாவட்டத்திற்கு வறட்சி ஒன்றும் புதிதல்ல. இம்மாவட்டத்தின் பெரும்பகுதி மழை மறைவுப் பிரதேசமாயிருப்பதால் இம்மாவட்டத்து மக்கள் வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே வறட்சியினால் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். 1897, 1902, 1919, 1930, 1966 போன்ற ஆண்டுகள் இங்குள்ள மக்களை வறட்சியில் வாட்டி எடுத்திருக்கின்றன. பல ஆயிரக் கணக்கானோரின் உயிரை விழுங்கியிருக்கின்றன.

இது சென்ற ஆகஸ்டு மாத நடுவில் பத்திரிக்கைகளில் வெளி வந்த செய்தி.

*

ஒரிஸ்ஸா மாநிலத்தின் தென் பகுதியில் 'Y' வடிவத்தில் அமைந்துள்ள கோரபுட் மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது உண்பதற்கு ஏதுமில்லாததால் அம்மாவட்டத்திலுள்ள பழங்குடியினர் உட்பட பலர் இறந்த அழுகிய மிருகங்களின் மாமிசத்தை வேகவைத்தும், நச்சுச் செடிகளின் வேர்களை ஊற வைத்தும் சாப்பிடுகின்றனர். ஜூலை 19ம்தேதி லிமாடா கிராமத்தில் புளியம் விதைகளையும், மாங்கொட்டையையும் ஊறவைத்து உண்ட சிறிது நேரத்தில் ஒரு பழங்குடியினக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் பெம்போ மஞ்சியும், ஒகி மஞ்சியும் மாண்டனர். சற்று நேரங்கழித்து அவர்களுடன் சேர்ந்து அதே உணவை உட்கொண்ட இன்னொரு சகோதரன் ஹாலா மஞ்சியும், சகோதரி அஸ்டமனா மஞ்சியும இறந்தனர். அக்குடும்பத்தில் இப்போது உயிருடன் மிஞ்சிய ஒரே நபரான சத்ரு தாங்கள் இத்தகைய உணவையே கடந்த இரண்டு மாதங்களாக உண்டு வருவதாகக் கூறினார்.

அதே மாவட்டத்தில் ஜெய்பூருக்கு அருகிலுள்ள மாலிகுடா கிராமத்தில் நீரின்றி, அசுத்த நீரை அருந்தியதால் 18 பேர் செத்துள்ளனர். ஒரு குழாய் கூட அக்கிராமத்தில் இல்லாததால் அக்கிராமத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒரு ஓடையில் பாயும் சாக்கடை நீரையே கிராமத்து மக்கள் குடிக்க வேண்டி உள்ளது. இப்படித் தண்ணீர் பிரச்னையால் மட்டும் வருடத்திற்குச் சுமார் 600 லிருந்து 1000 பேர் வரை சாவதாக உள்ளூர் பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் ஹரி சந்திர பிக்ஷி (வெட்கமின்றி) கூறுகிறார். கடந்த ஏப்ரலிலிருந்து மட்டும் சுமார் 189பேர் செத்துள்ளதாக மருத்துவ அதிகாரி டாக்டர் ஜைடோ, தனது பதிவேட்டிலிருந்து கணக்குக் காட்டுகிறார்.

பல கிராமங்களுக்கு ஊற வைத்த புளியும், வேக வைத்த செத்த மிருகங்களின் உடலுமே மாமூல் உணவாகி விட்டது. இவையும் கிடைக்காத போது மண்ணைத் தோண்டி, வேர்களைப் பிடுங்கி, ஊறவைத்து உண்ணுகின்றனர். இதன் விளைவு வயிற்றுப் போக்கு, வாந்தி பேதி, காலரா, சாவு எனத் தொடர்கிறது. ஜூலை மாதத்தில் புகோன் என்னும் கிராமத்தில் 11 பேர் செத்துள்ளனர். செப்டம்பரில் மாந்தரே என்னும் கிராமத்தில் 5 பேர் மாண்டுள்ளனர். இந்த வருடம் வயிற்றுப் போக்கினால் மட்டும் குறைந்தது ஆயிரம் பேர் இறந்து விட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த மாவட்ட மக்கள் கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ந்து வறட்சியின் பிடியில் சிக்கித் திணறுகின்றனர். பசி, குடிநீர் இல்லாமை— இவையிரண்டும் இம்மக்களை சொல்லொணாத் துயரில் ஆழ்த்தியுள்ளன. ஆனால் மாநில அரசோ கிராம குடிநீர் வசதிக்காக 32.84 கோடி ரூபாய் இதுவரைசெலவிட்டிருப்பதாகக் கணக்குக் காட்டுகிறது. ஆனால் மாநில கவர்னர் பி.என். பாண்டே கோரபுட் மாவட்டத்தைச் சுற்றிப் பார்க்கும் போது ஒரு குழாய் கிணறுகூடபொருத்தப்பட வில்லையாம்.

—ஒரிஸ்ஸா மாநிலத்தின் கோரபுட் மாவட்டத்தின் கோர நிலைமை பற்றி இப்போது வந்துள்ள செய்தி இது.

*

பருவமழை தவறியதால் மீண்டும் மகாராஷ்டிரா மாநிலத்தின் பெரும்பான்மையான புறநகர்ப் பகுதிகளில் உள்ள மக்கள் தண்ணீரின்றி திண்டாடுகின்றனர். நீருக்காக அவர்கள் பல மைல்கள் தூரம் அலைய வேண்டியுள்ளது. ஆற்றுப்படுக்கைளுக்குச் சென்று, அவற்றில் துளைகள் இட்டு, அதில் டம்ளர், டம்ளராக' ஊறும் சேறு கலந்த சிறிதளவு நீரைப்பிடித்து வருவதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர். மாநிலத்தின் பெரும்பான்மையான பகுதிகளின் நிலைமை இத்தகையதே.

மகாராஷ்டிராவின் மொத்தம் 300 தாலுகாக்களில் 87ல் கடுமையான உணவுப் பஞ்சமும், குடிநீர் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. எனினும் நிலைமையின் தீவிரத் தன்மையை மாநில முதலமைச்சரோ, அவரது அரசோ உணர்ந்ததாகத் தெரியவில்லை. 1972ல் ஏற்பட்ட கடுமையான வறட்சியைச் சரிகட்ட ரூ 400 கோடி தேவைப்பட்டது. ஆனால் இன்று குறைந்தது அதைப்போல் இருமடங்கு தொகை தேவைப்படலாம். 1947ல் சுமார் 4000 கிராமங்களுக்கேத் தண்ணீர் பஞ்சம் இருந்தது. ஆனால் 79—80 களில் இது 11000 ஆக உயர்ந்தது. ஆனால் இன்று ஏறத்தாழ 25000 கிராமங்களில் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என மாநில வருவாய்த்துறை மந்திரியே அறிவிக்கிறார். (என்னே, 'சுதந்திர' இந்தியாவின் சாதனை).

— மழையின்மையால் வாடும் மகாராஷ்டிரா பற்றி கிடைத்துள்ள தகவல்கள் இவை.

*

செப்டம்பர் மாத இறுதியில் பெய்த மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால் உத்திரப் பிரதேசத்தில் இதுவரை சுமார் 689 பேர் இறந்துள்ளனர் சுல்தான்பூர், கான்பூர், ரேபரேலி, பிரதாப் கார், பால்லியா உட்பட சுமார் 80 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 24000 கிராமங்களில் உள்ள மக்கள் இவ்வெள்ளத்தால் நிராதரவான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பலர் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் எனக் கூறுகின்றனர்; இருப்பினும் சரியான எண்ணிக்கைத் தெரியவில்லை.

கோமதி, சாய், கங்கை, கோக்ரா போன்ற நதிகளில் தண்ணீர் அபாய மட்டத்திற்கு மேல் பல மீட்டர் உயரத்தில் ஓடுகிறது. பல்லாயிரக் கணக்கான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 3107 கால் நடைகள் செத்துள்ளதாக அரசுத் தகவல் கூறு

கிறது. ஏறத்தாழ 1.69 கோடி மக்கள் இவ்வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். 4.30 லட்சம் விடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. 20.78 லட்சம் ஹெக்டேர் பயிர் செய்யப்பட்ட நிலங்கள் உட்பட மொத்தம் 33.90 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் வெள்ளம் தேங்கியுள்ளது. நிவாரணப் பணிகளுக்காக அரசு 17.73 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

*

பீகாரில் சகாரியா, கிழக்கு சம்பரான், பெருசராய் உட்பட 18 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. கோசி, அத்வாரா நதிகள், பகமதி, பூரி, கண்டாக் போன்ற ஆறுகளில் நீர் அபாய மட்டத்திற்கு மேல் பாய்கிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர். மேற்கு கோசி ஆற்றின் கரை 4 கி. மீ. தூரம் அரிக்கப்பட்டு கிராமங்கள் அடித்துச் செல்லப்படுகின்றன. கிழக்கு சம்பரான் மாவட்டத்தில் கண்டாக் நதியின் கரை அரேராஜ் பகுதியில் அரிக்கப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக அம்மாவட்ட நீதிபதி கூறியுள்ளார். பகவான் பூருக்கு அருகிலுள்ள கலியா கிராமத்தில் ஆற்று நீர் புகுந்து பஞ்சாயத்துக்கள் நீரில் முழுவதுமாக மூழ்கியுள்ளன. அங்கு மட்டும் சுமார் 46,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*

ஒரிஸ்ஸா மாநிலத்தில் அடித்த புயலினாலும், அதைத் தொடர்ந்து பெய்த மழையினாலும் அம்மாநிலத்தின் நான்கு மாவட்டங்களில் 6000 கிராமங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. குறைந்தது 30 பேர் இறந்துள்ளதாக அதிகாரபூர்வமான தகவல்கள் அறிவிக்கின்றன. ஆனால் செத்தவர் எண்ணிக்கை நூற்றுக்கும் மேலிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்த வெள்ளத்தால் குறைந்தது 40 லட்சம் மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர். கட்டாக் மாவட்டத்தில் புயல் கரையை கடக்கும்போது ஆயிரக்கணக்கான வீடுகள் பிய்த்தெறியப்பட்டன. கட்டாக் மாவட்டத்தில் 3016 கிராமங்களும், பலசோர் மாவட்டத்தில் 1448 கிராமங்களும் அதிகமாக சேதமடைந்துள்ளன. இவற்றில் 504 கிராமங்கள் முற்றிலும் வெள்ளத்தால் மூழ்கடிக்கப் பட்டதாக அரசே தகவல் அளிக்கிறது. சேதத்துக்குள்ளான கட்டாக், பலசோர், மயூர்பஞ்ச், கிராஞ்ச் ஆகிய மாவட்டங்களில், பலசோர் மாவட்டத்தில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. வைதாணி, பூதபாலன், சபர்நரேசா போன்ற ஆறுகளில் நீர் அதிக அளவில் பாய்கிறது. பலசோர் மாவட்டத்தில் மட்டும் 316 கரை உடைப்புக்களும், 618 சாலை உடைப்புக்களும் ஏறபட்டுள்ளன. மயூர்பஞ்ச் மாவட்டத்தில் 50,000 பேருக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவை தவிர மே.வங்கத்தின் பல பகுதிகளும் புயல், மழையால் வெகுவாக சேதமடைந்துள்ளன.

—உப்பிரதேசம், பீகார், ஒரிஸ்ஸா மாநிலங்கள் வெள்ளத் போன்றதால் பாதிக்கப்பட்டது பற்றிய நெஞ்சை உலுக்கும் செய்திகளே மேற்குறிப்பிட்டவை.

*

கடந்த சில மாதங்களில் நமது இந்தியத் திருநாட்டின் பல பகுதிகள் வறட்சியாலும், வெள்ளத்தாலும் எப்படி அசாதாரணமாக பாதிக்கப்பட்டுள்ளன என்பதற்கு ஒரு சில சான்றுகளே மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள். இருபுறமும் இடிவாங்கும் மத்தளத்தைப் போன்று, ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார அடக்குமுறைகளை தாங்கிக் கொள்வதுடன் 'இயற்கையின் சீற்றமான' வறட்சி, வெளளம் முதலியவற்றையும் பரந்துபட்ட மக்கள் தாங்கிக் கொள்ள வேண்டி உள்ளது.

ஒருபுறம் கடுமையான வறட்சியால் சாவு; இன்னொருபுறம் பயங்கரமான வெள்ளத்தால் அழிவு; வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களே பருவகாலம் மாறும் போது வெள்ளத்தால் அவதிக்குள்ளாகும் கொடுமை. இப்படி 'வெள்ளத்தால் அழிவதும், வெந்தணலால் வேவதும்' இந்திய மக்களின் வாழ்க்கை நியதியாகி விட்டது.

நூற்றுக்கணக்கானோர் வெள்ளத்தால் அடித்துச் சொல்லப் படுதல், ஆயிரக்கணக்கானோர் வறட்சியால் செத்து மடிதல், பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்குதல், லட்சக் கணக்கில் வீடுகள் நாசமாதல், கோடிக்கணக்கில் உழைக்கும் மக்கள் நிராதரவற்ற நிலையில் வீதிகளில் நெட்டித் தள்ளப்படுதல் — இத்தகைய நிகழ்ச்சிகள் எதுவுமே தமிழ்ப் பத்திரிக்கை உலகைப் பாதித்தாகவே தெரியவில்லை. கமலஹாசன் — சரிகா உறவுபற்றி தமிழ் வாசகர்கள் மத்தியில் ஒரு பொது விவாதம் கிளம்பும் அளவுக்கு செய்தி வெளியிட்ட பத்திரிக்கைகள் இம்மாதிரி இயற்கையின சீற்றங்களால் மக்கள் மாண்டு விழும்போது மௌனம் சாதிக்கின்றன.



ஒரே வாரத்தில் தமது இரண்டு குழந்தைகளையும் பட்டினிச் சாவுக்குப் பலிகொடுத்த தேபா மஜ்கியும் அவரது மனைவி கமலாவும்.

ஒரு சில பத்திரிக்கைகள் மட்டும் 'கிரிக்கெட் கமெண்ட்ரி' சொல்வது போல 12 சாவு, 28 காயம் என்று புள்ளி விபரங்கள் தருகின்றன. அதுவும் இவைகள் தரும் தகவல்கள் அதிகார வர்க்கத்திடமிருந்து பெறும் பொய்ப் புள்ளி விபரங்களே. உண்மை நிலைமைகளை இவை பெரும்பாலும் மறைத்தே வெளியிடுகின்றன.


இத்தகு வெள்ளம், வறட்சி போன்றவை ஏற்படும் போது அரசாங்கம் என்ன செய்கிறது? வறட்சி, வறட்சியால் மக்கள் சாவு போன்ற செய்திகள் பத்திரிக்கைகளில் வந்தாலும், அரசாங்கமும். அதிகார வர்க்கமும் இவை பொய்ச் செய்திகள் என்று பேட்டியளிக்கின்றனர். குஜராத்தில் மக்கள் நச்சு விதைகளையும், அசுத்த நீரையும் குடித்து மாண்டபோது 'அவர்கள் ஏன் அவற்றைஉட்கொள்ள வேண்டும்' என்று பெரிய மனிதத்தனமாக கேள்வி கேட்டனர். உண்பதற்கு உணவும், அருந்துவதற்கு நல்ல குடிநீரும் அவர்களுக்குக் கிடைத்திருந்தால் அவர்கள் நஞ்சை உண்டு மாய்ந்து போக அவசியமே இல்லை.

செய்திகள் பெரிய அளவில் மக்களிடம் பரவினால் மட்டும் அப்போதைக்குச் சமாளிக்க சில பொய்த் திட்டங்களை அறிவிக்கின்றனர் பெரும்பாலும் இத்திட்டங்களை நிறைவேற்றப்படுவதில்லை ஒருசில செயல்முறைக்குவந்தாலும் இவற்றால் பயன்பெறுவது காண்டிராக்டர்களும், அதிகார வர்க்கமும், அதிகார வர்க்க முதலாளிகளுமே இத்திட்டங்கள் தேவைப்படும் மக்களை சென்றடைவதேயில்லை.

பெரு வெள்ளம் போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்படும் போது ஒ[illegible] வேட்டி—துண்டு அல்லது சேலை, 6 கிலோ அரிசி, 5 லிட்டர் மண்ணெண்ணெய், பள்ளிக்கூடங்களிலோ, பஞ்சாயத்து அல்லது நகராட்சிக் கட்டிடங்களிலோ சில நாள் தங்க வசதி — இவையே பாதிக்கப்பட்டோர் பெறுபவை. வெள்ளச் சேதம் பற்றி விபரங்கள் அறிய ஒரு கமிட்டி அறிவிக்கப்படும் இக்குழுவினர் பாதிக்கப்பட்ட இடங்களை ஜாலியாக மக்கள் வரிப்பணத்தில் சுற்றிப் பார்வையிட்டு விட்டு ஒரு அறிக்கையை அரசிடம் சமர்ப்பிப்பர். பின்னர் அந்த அறிக்கையின் கதி என்ன ஆகும் என்று யாரும் அறியமாட்டார்கள்.

இவைதான் ஒவ்வொரு முறை வெள்ளம் வரும்போதும் நடக்கும் சடங்குகள் ஆனால் வறட்சியும், வெள்ளமும் நம்மக்களுக்கு வாடிக்கை நிகழ்ச்சிகள். குஜராத், உ.பி. பீகார், மே.வங்கம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் வருடந் தவறாது வெள்ளம் வருவதும்,பல்லாயிரக்கணக்கானோர் மாள்வதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும இவற்றைப் போக்க ஒரு நிரந்தரத் திட்டம் இன்னும் வகுக்கப் படவேயில்லை.

பெரும்பான்மை மக்களோ இவையனைத்தும் "இயற்கையின் சீற்றம்; அரசாங்கம்தான் என்ன செய்ய முடியும்?" என்றே நினைக்கின்றனர்.




# வாக்குறுதிகளைத் தின்று பசி ஆறுமோ?

"நமது நாட்டின் மக்கள் உண்ணும் சத்துணவு மிகவும் குறைவு உள்ளூர்த் தேவைக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும். எனவே சந்தை விலைக்கும் குறைவாக நலிவுற்றோருக்கு உணவு தானியம் வழங்கும் திட்டமொன்றை விரைவிலேயே அரசு வெளியிடும். சந்தை விலைக்கும் குறைவான விலையில் கோதுமை ஏற்றுமதி செய்வதில்லை என்று ஏற்கனவே இந்தியா முடிவு செய்துவிட்டது." திருவாளர் பரிசுத்தம் பாசிச ராஜீவ் பத்திரிகையாளர் கூட்டத்தில் செய்த அறிவிப்பு இது.

இந்தச் செய்தி வெளியான அதே நாளில் வேறொரு செய்தி வந்தது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டமுடிவில் ஆண்டு ஒன்றுக்கு 3532 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளைபொருட்களை ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம். இப்பொழுதே 1450 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதாம்.

இவை விவசாய உற்பத்தி கமிஷனர்கள் மாநாட்டு முடிவுகள்.

ஜனநாயக சோசலிசம் பேசி ஏமாற்றினார் ராஜீவின் தாத்தா! 'வறுமையை ஒழிப்போம்' என்று முழங்கி மோசடி செய்தார் ராஜீவின் ஆத்தா! மலிவு விலை அரிசி தருவதாக பாசிச ராஜீவ் சொன்ன அதே நாளில் முரண்பட்ட முடிவுகள் பாரீர். பித்தலாட்டப் பாரம்பரியம் வேறென்ன செய்யும்! ●

இவை அடிப்படையிலேயே தவறான கருத்தாகும்.

இன்று மனிதன் அடைந்துள்ள விஞ்ஞான சாதனைகள் அனைத்தும் மனித உழைப்பின் விளைபொருளே. அன்றிலிருந்து இன்று வரை மனிதன் இயற்கையை எதிர்த்து தனது போராட்டங்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கிறான். அவனுக்கு இதில் கிடைத்துள்ள வெற்றிகளின் மூலம் இயற்கையைத் தனது விருப்பத்திற்கேற்றவாறு மாற்றியமைத்து அதனைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகிறான். மனித உழைப்பு சக்தி இவ்வுலகத்தைப் பிரம்மாண்டமான முறையில் மாற்றியமைத்திருக்கிறது. ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான மக்களை வெள்ளத்தால் அடித்துச் செல்லும் காட்டாறுகள் எல்லாம் மனித சக்தியின் முன் மண்டியிட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2½ லட்சம் மக்களை அடித்துச் சென்று கொண்டிருந்தது சீனாவின் மஞ்சள் ஆறு. ஆனால் இலட்சக்கணக்கான மக்களின் உழைப்பு அவ்வாற்றைப் பலகிளைகளாகப் பிரித்து அதன் பாதையையே மாற்றியமைத்தது. வருடந்தோறும் நடக்கும் சேதம் தடுக்கப்பட்டதுடன் பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அடைந்தன இப்படி மனித உழைப்பின் ஆக்க பூர்வமான பாத்திரத்தை, விஞ்ஞான சாதனைகளை சமுதாயத்தின் நன்மைக்குப் பயனபடுத்த முடியும்; பயன்படுத்தவும் வேண்டும். வெள்ளம் இயற்கையின் சீற்றமேயானாலும் குறைந்த பட்சம் சேதங்களையாவது குறைக்க முடியும்.

இந்த வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டோரில் பெரும்பான்மையினர் பரந்துபட்ட உழைக்கும் மக்களே. கிராமங்களில் உள்ள கூலி, ஏழை விவசாயிகளும், நகர்ப்புறத்தில் தொழிலாளிகளும், உதிரித் தொழிலாளிகளும், நடுத்தரவர்க்கமுமே வறட்சியால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவர்களால் தாங்கள் பெறும் குறைந்த கூலியை, சம்பளத்தை வைத்துக் கொண்டு உணவு, தங்குமிடம் முதலியவற்றையும், தண்ணீர் வசதியையும் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

இவர்களுடைய வீடுகள்தான் வெள்ளததால் இடிகின்றன; கால்நடைகள் அடித்துச் செல்லப்படுகின்றன. வெள்ளம், வறட்சியால் நிலப்பிரபுக்களின் நிலங்களுக்கோ, முதலாளிகளுக்கோ சேதம் ஏற்பட்டாலும் பயிர் பாதுகாப்பு இன்சூரன்சு, கடன்தொகை, மானியம் போன்றவற்றால் அவர்களின் இழப்பு ஈடுசெய்யப்படுகிறது. ஆனால் உழைக்கும் மக்களால் இது சாத்தியமில்லை. ஆக வறட்சி, வெள்ளம் முதலியவற்றால் பரந்துபட்ட உழைக்கும் மக்கள் பாதிக்கப்படுவதென்பது அவர்கள்மீது செலுத்தப்படும் வர்க்க சர்வாதிகாரத்தையே காட்டுகிறது.

வறட்சி, வெள்ளம் இரண்டுமே தீர்க்கப்படமுடியாத பிரச்னைகளல்ல. வடஇந்திய நதிகளையும், தென்னிந்திய நதிகளையும் இணைப்பதன் மூலம் வெள்ளச் சேதத்தையும் தடுக்க முடியும்; வறட்சியான இடங்களை செழிப்பான விளைநிலங்களாக மாற்றவும் முடியும். நதிகளை இணைக்கின்ற இந்தப் பணியின் பரிமாணம் பிரம்மாண்டமானாலும் அதைச் செய்வது ஒன்றும் அவ்வளவு கடினமல்ல. கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊர் பஞ்சாயத்தும் அடுத்த ஊர் எல்லை வரை கால்வாய் வெட்டிக் கொடுக்க வேண்டியது என்று முடிவு செய்தால் இந்துமாக் கடலையே, இமயமலைக்கு கொண்டு செல்கிற அளவுக்கு கால்வாய்வெட்டும் சக்தி நம்மிடமுள்ளது.

உண்டு, கொழுத்து, உறங்கும் இராணுவத்தையும் இத் திட்டத்தில் இறக்கினால் வெகு விரைவாகவும், வெகு எளிதாகவும் இத்திட்டத்தை முடிக்கலாம். இப்படி நதிகளை இணைப்பதன் மூலமும், வடிகால் வசதிகளைத் திட்டமிட்டு திறம்பட பயன்படுத்துவதன் மூலமும் இந்திய மக்களை வறட்சி, வெள்ளம் முதலியவற்றின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுக்க முடியும்.

எனினும் இவற்றையெல்லாம் இந்திய அரசு செய்வப் போவதில்லை. ஏனெனில் அது இந்திய மக்களின் அரசாயில்லை. அது இந்திய மக்களின் நலன்களுக்கு எதிராகவும், தரகு அதிகாரவர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களின் நலங்காக்கும் அரசாகவும் இருக்கிறது.

பரந்துபட்ட மக்கள் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடத்தும் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் மூலம் அமைக்கப்படும் புதிய ஜனநாயக அரசே இத்திட்டங்களை ஏற்றுச் செயல்படுத்த முடியும். அன்றே நம் மக்களைப் பீடித்துள்ள வறட்சி, வெள்ளமென்னும் கொடிய நோய்களுக்கு முடிவுகட்டப்படும். ●

**புதிய ஜவுளிக் கொள்கை**

# தொழிலாளர் மீதான தாக்குதல்

* பாண்டிச்சேரி ஆங்கிலோ—பிரெஞ்சு ரோடியர் மில் மூடிக் கிடக்கிறது. தொழிலாளர்கள் தெருவிலே நிற்கிறார்கள். தொழிலாளர்களின் வாழ்க்கை ஓட்டுப் பொறுக்கிகளின் தேர்தல் விளையாட்டாகிப் போனது.

* சென்னை பின்னி ஆலைத் தொழிலாளர்களில் பத்தாயிரம் பேர் வேலையிழந்து வீட்டுக்கு விரட்டப்பட்டனர். எஞ்சியுள்ள தொழிலாளர்களை வளைத்துப் போட இழிகேடான நாய்ச் சண்டையில் தொழிற்சங்கவாதிகள் ஈடுபட்டுள்ளனர். மற்றபடி வேலை பறிபோன தொழிலாளர்களின் வாழ்வோ இருண்டுபோய்விட்டது.

* ஆலை முதலாளிகளும், தொழிற்சங்கவாதி தத்தா சாமந்த்தும் விரித்த வலையில் வீழ்ந்து இரண்டாண்டு போராட்டத்திற்குப் பிறகு பம்பாய்த் தொழிலாளர்கள் லட்சம் பேர் சிதறடிக்கப்பட்டு அவர்கள் வாழ்வே சின்னாபின்னமாகிப் போய்விட்டது.

* பம்பாய்—பிவாண்டியில் வகுப்புக் கலவரத்தைத் தூண்டி நூற்றுக் கணக்கான தொழிலாளர்களை காவு கொண்டனர் மதவெறியினர். விசைத்தறியை நம்பி வாழ்ந்த பல ஆயிரம் தொழிலாளர்கள் பிழைக்கும் வழியிழந்து நிற்கின்றனர்.

* அகமதாபாத்தில் நாற்பதாயிரம் தொழிலாளர்கள் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்ட செய்தி, இட ஒதுக்கீடு கலவரங்கள் எழுப்பிய கூச்சலில் முழுகிப் போனது.

ஆக, ஆறு மாதங்களுக்கு முந்தைய கணக்கின்படி நாடு முழுவதும் 92574 தொழிலாளர்கள் வேலை செய்து வந்த 70 ஆலைகள் மூடிக் கிடக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு ஒரு தடவை சுழற்சி முறையில் வரும் நெருக்கடிகளுக்குள் சிக்கித் தவிக்கும் நெசவுத் தொழில் தற்போது நிரந்தரமான நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. உழைக்க மனத்தில் உறுதிருந்தும், உடம்பில் வலுவிருந்தும் தொழிலாளர்களைப் பிச்சைக்காரர்களாக்கித் தெருவில் நிறுத்தி விடுகின்றன இந்த நெருக்கடிகள்.

நிரந்தரமாகிப் போன நெசவுத் தொழில் நெருக்கடிகளைத் தீர்க்க 'புதிய ஜவுளிக் கொள்கை' ஒன்றை அறிவித்துள்ளது மத்திய அரசு. நெசவுத் நெருக்கடியினால் சிறுகச் சிறுகசாகும் தொழிலாளர்களை ஒரேயடியாகக்கொன்றுவிடுவதுதான் இந்த 'புதிய ஜவுளிக் கொள்கை.' ஆனால் இந்த நச்சு மருந்து தேன் தடவித் தரப்படுகிறது, வார்த்தைகளால்.

> இது ஏதோ நெசவுத் தொழிலாளர்களை மட்டும் பாதிக்கக் கூடியது; நமக்குச் சம்பந்தம் இல்லை என்று நாட்டின் உழைக்கும் மக்கள் ஒதுங்கியிருக்க முடியாது.

'பொருளாதார வளர்ச்சிக்குப் புதிய ஜவுளிக் கொள்கை', 'உற்பத்தி திறனை உயர்த்துவது', 'நவீனமயப் படுத்துவது', 'மலிவான விலையில் உற்பத்தி செய்து சாமானிய மக்களுக்கும் உதவுவது'; - கேட்பதற்கு நன்றாகத்தான் உள்ளது. ஆனால் இந்த வார்த்தைகளுக்குள்ளே புதைத்து வைக்கப்பட்டுள்ள தேச விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

புதிய கொள்கை அறிவிப்புப் பிரகடனத்தின் ஒவ்வொரு பத்தியும் சாமானிய மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று உறுதி கூறுகிறது. ஆனால் அது எப்படி இருக்கும்? நெசவுத் தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் பெரு முதலைகளும் ஏகபோகக் குடும்பங்களும் ஏகோபித்த குரலில் 'புதிய ஜவுளிக் கொள்கை'யை வரவேற்றிருப்பதே இதைக் காட்டுகிறது!

பொதுமக்களுக்கு மலிவு விலையில் துணி கிடைப்பதற்கு இந்த கொள்கை சொல்லும் வழி என்ன? தொழிலைப் போட்டிச் சந்தைக்குத் திறந்து விடுவதுதான். "பொருளாதார ரீதியில் சாதகமாக இல்லையென்றால் தொழிலாளர்களின் நலன்களை பாதிக்கவில்லையென்றால் ஆலைகளை மூடி விடுவதுதான்" என்கிறது கொள்கை. தொழிலாளர்களின் நலன்கள் என்கிற வார்த்தையைக் கோர்த்திருந்தாலும் பொருளாதார ரீதியில் சாதகமாக உள்ளதா என்பதை முதலாளியும் வங்கிகளும் தானே தீர்மானிக்கின்றனர்.

ஏற்கனவே தனியார் துறையில் 200 ஆலைகளும் தேசிய நெசவாலை கழகத்தில் 22 ஆலைகளும் நலிவுற்றவையாக அறிவிக்கப்பட்டு விட்டன. "தேசிய நெசவாலை கழக மில்களில் உபரித் தொழிலர்ளர்கள் இருப்பதுதான் முக்கியப் பிரச்சனை. தொழிலாளர் எண்ணிக்கையை உடனே குறைக்க வேண்டும். அடுத்த ஐந்தாண்டுகளில் 38000 தொழிலாளர்கள் வேலையிழப்பர்" என்று மந்திரி அறிவித்துள்ளார். இதுதான் தொழிலாளர் நலன்கள் பாதிக்காதவாறு செயல்படுவதன் லட்சணம்!

நெசவுத் தொழில் நலிவுறுவதற்கான உண்மையான காரணங்களைக் கண்டறிந்து களைவதில் ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லை. நாட்டில் 6 கோடிப்பேர் ஈடுபட்டுள்ள ஆண்டுக்கு 350 கோடி ரூபாய் வரியாக சுருட்டிக் கொள்ளும் நெசவுத் தொழிலை பல ஆண்டுகளாகப் புறக்கணித்ததன் விளைவு; கொள்ளை லாபமடிக்கும் தொழில் மூலதனத்தை மாற்றிக் கொண்ட ஏகபோக முதலாளிகளின் தந்திரம்; உற்பத்தித் திறனில் பாதியளவு மட்டுமே பயன்படுத்துமாறு விதிக்கப்பட்டுள்ள தடை—இவையே காரணம்.

நவீனமயமாக்கும் கொள்கை நெசவுத் தொழிலாளர்கள் மீது மற்றுமொரு தாக்குதலாகும். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மூலம் இரு முறைக் கடன், நாட்டிலேயே கிடைக்கும் இயந்திரங்களையும் கூட இறக்குமதி செய்து கொள்ள அனுமதி ஆகிய சலுகைகள் வழங்கப்படுகிறது. இயந்திரங்களை இறக்குமதி செய்ய அந்நியச் செலாவணிக்காக அந்நியக் கடன்களை எழுப்புவது, ஏற்றுமதியை அதிகரிப்பது—அதற்காக அந்த வட்டி செலுத்தவோ, நேரடி மூலதனமிட தொழில் கூட்டிலும் இறங்குவது புதிய கொள்கையின் முக்கிய அம்சம்.

நவீனமயமாக்குவதே தொழில் நெருக்கடியைத் தீர்த்து வ[illegible] மலிவு விலையில் துணி கொடுத்து விடுமா? அப்படி ஒன்றும் இல்லை என்று ஆய்வுகள் அறைந்து கூறி விட்டன. அதிவேகமாக ஓடும் தறி, தொடர் சாயமிடும் முறை போன்ற பல்வேறு தானியங்கும் இயந்திரங்கள்; அதிகபட்ச இயந்திர உற்பத்தித் திறன்; குறைந்தபட்ச தொழிலாளர் உழைப்பு—இவை போன்ற தொழில்நுட்ப பொருளாதார சாதக அம்சங்கள் அனைத்தையும் விரிவாக ஆய்வு செய்தாகிவிட்டது. நூலிழையின் விலை மிக உயர்ந்ததாக இருக்கும் வரை நவீனமயமாக்குவது பொருளாதார ரீதியில் சாதகமாக இருக்காது.

அதிவேகமாக ஓடும் தறிகள், தானே சரிசெய்து கொள்ளும் (வைண்டிங்) சுருள் இயந்திரங்கள், கம்ப்யூட்டர் இயக்கிக் கட்டுப்படுத்தும் இயந்திரங்கள் ஆகியவற்றைப் புகுத்தியதால் அமெரிக்காவிலேயே 1949—57 ஆகிய எட்டாண்டுகளில் 28% அதாவது 3,40,000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இந்தியாவில் நவீனமயமாக்குதல் ஏற்கனவே 50,000 தொழிலாளர்களை வேலையிழக்கச் செய்துவிட்டது.

மில்களை நவீனப்படுத்த ஏற்கனவே 275 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. செயற்கை இழைகளுக்கு 131 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. ஏராளமான வரிச்சலுகை வழங்கி செயற்கை இழை விலைக் குறைப்பு செய்தனர். இன்னும் கோடி கோடியாகக் கொட்டப்

படும். ஏனெனில் 'புதிய ஜவுளிக் கொள்கை' செயற்கை நூலிழை மற்றும் துணி வகைகளைத்தான் அதிக அளவில் உற்பத்தி செய்யக் கோருகிறது.

பருத்தித் துணி நூல் சார்ந்த தொழில்கள் அனைத்துக்கும் பேரிடி கொடுத்துள்ளது புதிய ஜவுளிக் கொள்கை. ஏற்கனவே 46 கோடி ரூபாய் மதிப்புள்ள நூல் தேங்கியுள்ளது. பருத்தி ஆலைகளுக்கு 70 சதவீத பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளை இது கடுமையாகப் பாதிக்கும். விலை வீழ்ச்சி சிறு விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கிவிடும். ஏற்கனவே உபரி தானிய தேக்கம் இருப்பதால் வேறு பயிருக்கு மாறிக்கொள்வது சாத்தியமில்லை. குறைந்தது மீட்டர் 40 ரூபாய் விலைக்கு விற்கப்படும் செயற்கை இழை துணி நாட்டின் பெரும்பான்மையான மக்களின் வாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டது.

விவசாயத்திற்கு அடுத்து நாட்டின் மிகப் பெரிய பழம்பெரும் தொழில் நெசவுத் தொழில். 20 சதவீத மக்கள் இதையே நம்பி வாழ்கின்றனர். இவ்வளவு பேர் வாழ்க்கையையும் நாசமாக்கி விடுவதுதான் 'புதிய ஜவுளிக் கொள்கை!'

ஒரு கோடிப் பேருக்கு மேல் உழைக்கும் 32 இலட்சம் கைத்தறிகள் நாட்டின் மொத்த துணி உற்பத்தியில் 40 சதவீதம் செய்கிறது. ஏற்கனவே நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள துணி தேங்கிக் கிடக்கிறது. கைத்தறி முதலாளிகள் ஒரே தீர்மானமாக தாவு[illegible]கள்: "விசைத் தறிக்கு மாறி வ[illegible]கிறோம்; கடன் கொடுத்து உதவுங்கள்." மத்திய மாநில அரசுகளுக்கு அவர்கள் விடும் இந்த வேண்டுகோளுக்கு "கையில் காசு இருந்தால் விசைத்தறிக்கு மாறட்டும்" என மத்திய துணை மந்திரி வெடுக்கென கூறிவிட்டார். வயிற்றைக் கழுவுவதற்காக அற்பக் கூலிக்கு 12 மணி நேரம் உழைக்கும் கைத்தறித் தொழிலாளர்களுக்கு அந்த வக்குமில்லாமல் செய்துவிடும் புதிய ஜவுளிக்கொள்கை. "நாங்கள் பிச்சைக்காரர்களல்ல; தொழில் நெருக்கடியினால் வேலையிழந்த கைத்தறித் தொழிலாளர்கள்; எங்களுக்கு உதவுங்கள்" என்று 60ஆம் ஆண்டுகளில் வீதி வீதியாய் குடுமபம் குடும்பமாய் அலைந்தார்களே அந்தக் கதி மீண்டும் வந்துவிடும்.

1951-ல் நாட்டில் 24,000 விசைத்திறிகளே இருந்தன. மூன்று பத்தாண்டுகளில் அவை எட்டு லட்சமாக வளர்ந்து நாட்டின் துணி உற்பத்தியில் 43% பங்கு வகிக்கிறது. ஏறக்குறைய 50 லட்சம் பேர் விசைத்தறித் தொழில் புரிகின்றனர். பருத்தி நூல் விலை 45% கூடிவிட்டது. செயற்கை இழை விலை வரிச்சலுகையினால் குறைந்துவிட்டது; உண்மைதான். ஆனால் நவீன ஆலைகளுடன் போட்டி போட முடியாமல் இவையும் நொடித்துப் போவது நிச்சயமாகி விட்டது. 2.5 லட்சம் தறிகள் உள்ள பம்பாய்—பிவாண்டியில் விசைத்தறிகள் ஏற்கனவே துருவேறிக் கிடக்கின்றன.

சுதேசித் தொழில், பாரம்பரியத் தொழில், காந்தீயத் தொழில், அகிம்சையின் சின்னம் என்று அரசின் செல்லப் பிள்ளையாக ஆதரிக்கப்பட்ட கதர்த் தொழிலின் நிலைமையும் நீடிக்குமா என்று தெரியாது. ஓய்வு நேர வேலை என்று கிராமப்புற மக்களின் உழைப்பு உறிஞ்சப்படுகிறது. அதிகார வர்க்கத்தினரும், காந்தீயத் தொண்டர்களும் ஆதிக்கம் செலுத்தவும், காந்தீய கவர்ச்சி காட்டி ஒட்டுப் பொறுக்கவும் இன்னும் கொஞ்ச காலம் மக்கள் வரிப்பணம் இந்தத் தொழிலில் கொட்டப்படலாம்.

நாட்டிலுள்ள 30,000 பனியன் தொழில் நிறுவனங்களில் 3,00,000 பேர் வேலை செய்கின்றனர். இப்பிரிவும் செயற்கை இழைக்கும், நவீனப் படுத்துதலுக்கும் மாற வேண்டியுள்ளதால் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. 2000 யூனிட்டுகளில் 20,000 பேர் வேலை செய்யும் திருப்பூரில் ஏற்கனவே இந்த நெருக்கடியின் வீச்சுத் தெரிகிறது.

போலிக் கம்யூனிஸ்டுகளின் பல ஆண்டு தொழிற்சங்கவாதநடைமுறை தொழிலாளர்களைப் பிழைப்பு வாத படுகுழிக்குள் தள்ளிவிட்டது. தொழிற்சங்கப் பிழைப்புவாதத்தில் போலிக் கம்யூனிஸ்டுகளையும் மிஞ்சிவிட்ட பம்பாய்—தத்தா சாமந்த், சென்னை குசேலர், கோவை ஜனதா—ஹெச். எம். எஸ். தலைவர்கள் மற்றும் அகமதாபாத் தொழிற்சங்கத் தலைவர்களே நெசவுத் தொழிலாளர்களிடம் செல்வாக்குப் பெற்றவர்கள். இவர்களும் சரி, போலிக் கம்யூனிஸ்டு தொழிற்சங்க வாதிகளும் சரி பாசிச இந்திராவால் காயடிக்கப்பட்டு விட்டனர். எனவே எந்த இயக்கமும் நடத்தி பாசிச ராஜீவின் 'புதிய ஜவுளிக் கொள்கை'யை எதிர்த்து முறியடிக்கும் திராணி அவர்களுக்கில்லை. பெயரளவிற்கான எதிர்ப்பு மட்டுமே தெரிவிக்கின்றனர்.

'இது ஏதோ நெசவுத் தொழிலாளர்களை மட்டுமே பாதிக்கக்கூடியது, நமக்குச் சம்பந்தம் இல்லை' என்று நாட்டின் உழைக்கும் மக்கள் ஒதுங்கியிருக்க முடியாது.

உழைக்கும் மக்களின் உண்மை ஊதியம் வீழ்ந்துக் கொண்டு இருக்கிறது. அதனால் வாங்கும் சக்தியை இழந்து வருகின்றனர். செயற்கையிழை துணிகளை வாங்கி உடுத்த அவர்களது வருமானம் இடம் தராது. பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளையும் பாதிக்கும்.

இத்தாலிய மருமகன் பாசிச ராஜீவிற்கு இந்திய நிலைமைகளைக் கண்டாலே அருவெறுப்பாக இருக்கிறது. நமக்குந்தான். ஆனால் அவர் புகுந்த வீட்டின் அந்தஸ்துக்கு ஏற்ப அதே பாணியில் தேசத்தைக் கொண்டு செல்ல விரும்புகிறார்.

நாமோ, புரட்சிகரமான புதிய ஜனநாயகத்துக் கொண்டு செல்ல விரும்புகிறோம்.

ஏகாதிபத்திய பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளின் கொள்ளைக்கு நாட்டின் கதவை அகலத் திறந்துவிடவும், தரகு அதிகார முதலாளிகளின் வளர்ச்சிக்கு உகந்த நவீனப்படுத்துதலை கொண்டு வருகிறார் பாசிச ராஜீவ்.

நாமோ, தேசிய முதலாளித்துவ வளர்ச்சிக்கு உகந்ததாக அதே சமயம் உழைக்கும் மக்களின் அதிகாரக் கட்டுப்பாட்டிற்குள் அடங்குவதாக நவீன மயப்படுத்த விரும்புகிறோம்.

ராஜீவின் கொள்கையோ தேச விரோதமானது.

நம்முடைய கொள்கையோ ஏகாதிபத்திய விரோதமானது. இந்த ரீதியான ஜவுளிக் கொள்கைதான் நெசவுத் தொழில் நெருக்கடியை நிரந்தரமாகத் தீர்க்கும். ●

● பகத்சிங்



பஞ்சுத் துகள்கள் மூச்சுக் குழலை அடைத்தாலும் இப்படிக் குடும்பமாக நெசவுத் தொழிலில் ஈடுபடும் இந்த உழைப்பாளி பெண்களைப் போன்றே பல லட்சக்கணக்கானவர்கள் ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையால் வேலை இழப்பர்.

# இது இன்னும் நீடிக்கலாமா?



மிட்டா மிராசுகளும், முதலாளிகளும் கொள்ளையடிக்கும்போது கோபமடைகிறோம்.

வட்டிக் கடைக்காரர்களும், வியாபாரிகளும் மோசடி செய்யும் போது ஆத்திரப்படுகிறோம்.

சாதி, மத, இன வெறியர்கள் மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டு மனித ரத்தம் குடிக்கும்போது உள்ளங் கொதிப்படைகிறோம்.

ஆபாச, அராஜக வன்முறை கலாச்சாரக் கேடுகளால் மாணவர்கள் இளைஞர்கள் சீரழியும்போது வேதனைப்படுகிறோம்.

இவையாவும் நியாயமானதே! போலிக் கம்யூனிஸ்டுகளும், முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளும் கூட இவற்றுக்கெதிராக எப்போதாவது குரல் எழுப்புகின்றனர்.

ஆனால் சிரத்தையுடனும், ஆழமாகவும் தொகுப்பாகவும் பார்க்கத் தவறுவதால் பரந்துபட்ட மக்களில் பலரும் தம் கண்ணுக்கு முன்னமேயே நடக்கும் சில உண்மைகளை அறிவதில்லை. சிலர் தெரிந்ததும் சும்மா இருக்கின்றனர்.

முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளும் போலிக் கம்யூனிஸ்டுகளும் வேண்டுமென்றே இந்த உண்மைகளை மூடி மறைக்கின்றனர். பிரச்சினைகளைத் திசை திருப்பி அவற்றை அறியாதவாறு செய்கின்றனர்.

இதை நீங்கள் பார்க்கவில்லையா? எந்தவொரு தனிநபர், குழு, வர்க்கத்தையும் விட மிகப்பெரிய மோசடி, கொலை, கொள்ளை, சாதி மத—இனவெறி சமூகக் கலாச்சார சீரழிவு நிறுவனமே அரசுதான்.

நீதி ஒழுங்கு, அமைதி ஆகியவற்றை நிர்வகிப்பதாகக் கூறிக்கொள்ளும் அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள் அடங்கிய அரசுதான் அவற்றுக்கு நேரெதிரான மிகப் பெரும் நிறுவனம்.

அரசின் அன்றாட செயல்பாடுகளைப் பாருங்கள். இந்த உண்மைகள் துலாம்பரமாக விளங்கும்.

## அரசு-தனிப்பெரும் சுரண்டல் நிறுவனம்

- அரசு, பஸ்—லாரி போக்குவரத்துக் கழகங்கள் நடத்துகிறது. பல தவணைகளில் தன் விருப்பம் போல் கட்டணங்களை உயர்த்திக் கொள்கிறது.
- அரசு, ரயில், தபால்-தந்தி நிறுவனங்களை நடத்துகிறது. ஆண்டுதோறும் கட்டணங்களை உயர்த்திக் கொள்கிறது.
- அரசு,மின் வாரியம் நடத்துகிறது. மீட்டர் வாடகை மற்றும் மின் கட்டணங்களை எதேச்சையாக ஏற்றிக் கொள்கிறது.
- இரும்பு, எஃகு, நிலக்கரி, இராசயன உரம், மருந்து, மின்னணு, தொலைபேசி, தொலைக்காட்சி, புகைப்படச் சுருள், பால், ரொட்டி—இப்படிப்பட்ட சகல துறைகளிலும் உற்பத்தி செய்வதோடு, ஏகபோகமாக இருந்து கொள்ளையடிக்கிறது. 'பொதுத் துறை', 'அரசுடமை', 'தேச உடைமை' என்று சொல்லுகிறது; இதனால் மக்களுக்கும் நன்மை இல்லை; இந் நிறுவனங்களில் வேலைசெய்யும் ஊழியர்களுக்கும் நன்மை இல்லை. அதிகார வர்க்கம் ஊதிப் பெருக்கவே இவை உதவுகின்றன.
- கூட்டுறவுகள் கூட்டுக் கொள்ளை நிறுவனங்களாகியுள்ளன. எந்தக் கூட்டுறவிலும் பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது இல்லை. நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் லஞ்ச, ஊழல் லாவண்யங்கள் தான் நடக்கின்றன.
- அரசு, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் நடத்துகிறது. அதிலும்கூட லாப வேட்டையாடுகிறது. மதுரை பல்கலைக் கழகத்திற்கு அஞ்சல் வழிக் கல்வியில் மட்டும் ஆண்டுதோறும் இரண்டு கோடி ரூபாய் நிகர லாபமாம்!
- பால், மீன், முட்டை, கறி இவற்றை மலிவு விலைக்கு மக்களுக்கு வழங்குவதாக நிறுவனங்கள் தொடங்கினர். ஆரம்பத்தில் மலிவாக இவற்றைத் தந்தார்கள்; இப்பொழுதோ 50 மில்லி சூடான பால் 75 காசு; 50 மில்லி இனிப்புத் தயிர் ஒரு ரூபாய்; 100 மில்லி குளிர்ந்த பால் ரூபாய் 1-20; 'டீக்கடை'க்காரனும், கசாப்புக் கடைக்காரனும்கூட இரக்கமுடையவனாக இருப்பானோ என்று சந்தேகமெழுகிறது.

இப்படி அரசு உற்பத்தித் துறையானாலும், சேவைத் துறையானாலும் கொள்ளை மோசடிதான் அதுவும் பல துறைகளில் ஏகபோக ஆதிக்கம் வகிப்பதால் அரசு சண்டப்பிரசண்டம் செய்கிறது. மக்களை ஏமாற்ற சில்லறைத்தனமான பொறுக்கித்தனமான சிலுமிச வேலையும் செய்கிறது.

தபால் கட்டணத்தை உயர்த்தி விட்டு '(ஸ்டேஷனரி)' தபால் செய்யும் பொருட் செலவு 5 பைசா என்று தனியே பிரித்து புதுப் பெயர் சொல்லி ஏய்க்கிறது.

உணவு விடுதியில், 'ரொட்டி விலை', 'குருமா' விலை என்று கூறி

> "அதிகார வர்க்க-இராணுவ அரசுப் பொறியமைவை அழித்தொழிப்பது மெய்யான மக்கள் புரட்சி ஒவ்வொன்றுக்கும் முன்னிபந்தனையாகும."
> [லெனின், 'அரசும் புரட்சியும்', பக்-55]

காசு பிடுங்கும் முதலாளியை விடக் கேவலமாக சில்லரைத் தட்டுப்பாடு என்று கூறி அடுத்த 50 பைசாவுக்கும், ரூபாயுக்கும் இரயில் கட்டணத்தைக் கூட்டியது; கட்டணத்தை உயர்த்தவில்லை. கூடுதல் கட்டணம் ("சர் சார்ஜ்") என்று சொல்லி புதுப் பெயர் சூட்டிப் பிடுங்கிக் கொள்கிறது. துரித வண்டியை வேகத்தையோ, வசதியையோ கூட்டாமல் அதிவேக துரித வண்டி என்று புதுப் பெயர் சூட்டி கூடுதல் கட்டணம் பிடுங்கிக் கொள்கிறது.

இரயில் நிலையத்துக்குள் வந்தாயா? அதற்கும் கட்டணம் என்றது. அதையும் கூட்டிக்கொடு என்கிறது. அரசு பஸ் நிலையத்திற்குப் போனால் காலியாக, பஸ்ஸில் இடமிருந்தாலும் 'பதிவுச் சீட்டு' பெறவேண்டும்; குறைவாக சுமை இருந்தாலும் எடை இரசீது பெறவேண்டும்; இப்படியும் இன்னும் பல வகையிலும் கொள்ளை.

இத்தனையும் போதாதென்று வரி போட்டு பிடுங்கிக் கொள்ளாத துறையோ, பொருளோ இல்லை. எம்.ஜி.ஆர். கு... காவலி சினிமாவில் பாடியது போன்று 'இட்லி வரி', 'சட்... வரி', 'ஆம்பிளை வரி, பொம்பிளை வரி' போடாததுதான் பாக்கி. சிறு நீர் கழிக்கவும், சைக்கிள் நிறுத்தவும்கூட ஏலம்போட்டு பறித்துக்கொள்கிறது.

## அரசு-தனிப் பெரும் சமூகக் கலாச்சார கேடுடைய நிறுவனம்

- அரசு,லாட்டரிக் குலுக்கல் நடத்தி நேரடிக் கொள்ளையில் ஈடுபடுவதுடன் மக்களை சூதாட்ட வெறியில் தள்ளுகிறது.
- அரசு,வரி வந்தால் போதுமென்று ஆபாச, அராஜக வன்முறைத் திரைப் படங்களை அனுமதித்து கொள்ளையடிப்பதோடு மக்களை காமக் களிவெறியில் மூழ்கடிக்கிறது.
- அரசு,மஞ்சள் பத்திரிகைகளுக்கு விளம்பரம், பிற சலுகைகள் அளித்து மக்களிடையே நஞ்சை விதைக்கிறது.
- அரசு,குதிரைப் பந்தயம் நடத்த அனுமதித்து வரிக் கொள்ளை அடிப்பதோடு மக்களை சூதாட்ட வெறியில் ஆழ்த்தி வைக்கிறது.
- அரசு,'கலை விழாக்கள்' என்ற பெயரில் ஆபாச நடன, சூதாட்ட விழாக்களை நடத்தி கொள்ளையடிப்பதோடு சமூக விரோத சக்திகளை காத்து வளர்க்கிறது.
- அரசு, நட்சத்திர விடுதிகள் நடத்தி சுகபோகங்களை முதலாளிகள் அனுபவிக்கவும், அதிகாரிகள் கூட்டுச் சேரவும், இதற்கு மக்களை மறைமுகமாக மாகக் கொள்ளை அடிக்கவும் உதவுகிறது. அந்நிய ஆபாசக் கலாச்சாரத்தையும் பரப்புகிறது.

ஆக, ஆபாசம், சாராயம், லாட்டரி, சூதாட்டம் என்று மக்களும், நாடும் எக்கேடுகெட்டுச் சீரழிந்தாலும் வருமானமே ஆதாயமாகக் கொண்டு சீரழிக்கிறது. அரசு,விபச்சாரம் நடத்தவும் தயங்காது என்ற நிலைக்குச் சென்றுள்ளது. ஏற்கனவே நட்சத்திர விடுதிகள், அழகு நிலையங்களில் விபச்சாரமே முக்கியத் தொழில் என்றறிந்தும் ('லைசென்சு') உரிமம் வழங்கி ஆசீர்வதிக்கிறது.

தனிப்பெரும் சமூக கலாச்சார சீரழிவு நிறுவனமாக உள்ள இந்த அரசுதான்—'சாத்தான்தான்' வேதம் ஓதுகிறது; 'குடி குடியைக் கெடுக்கும்', 'குடிப்பழக்கம் வீட்டைக் கெடுக்கும்', 'சிகரெட் பிடிப்பது உடல் நலத்துக் கேடு' என்று பிரச்சாரம் செய்வதை விதியாக்கியுள்ளது. இது எல்லாம் வேஷம்! தெரிந்தே செய்யும் மோசடியல்லவா இது?


## அரசு-தனிப்பெரும் சாதி, மத, இனவெறி நிறுவனம்

- அரசு,சாதிய முறையை ஒழிப்பதற்குப் பதில் ஒவ்வொருவரும் பதிவு செய்து முத்திரை குத்தி அங்கீகரித்து ஏற்கும்படி மக்களைக் கட்டாயப்படுத்துகிறது.
- அரசு,மத சார்பற்றதாகக் கூறிக் கொண்டாலும், மதங்களை ஆதரித்து, மத நிகழ்ச்சிகளை நடத்தி, மதச் சடங்கு பூர்வமாக இயங்குகிறது. அரசு நிறுவனங்கள் ஆயுத பூஜை நடத்துகின்றன. திரைப்பட விழாக்களும் பிற திறப்பு விழாக்களும், குத்துவிளக்கேற்றி நடத்துகிறது. கல்லணை திறக்கவும் கலெக்டர் சாமிக்குப் பூசை போடுகிறார்.
- அரசு,சிறிய தேசிய இனங்களை ஒருபுறம் ஒடுக்கியும், பெரும் தேசிய இனவெறியைத் தூண்டியும், மொழியைத் திணித்தும் இன வெறிக்குத் தூபம் போடுகிறது!
- அரசு,சாதி, மத, இனவெறிப் படுகொலைக் குற்றவாளிகளை எந்த வழக்கிலும் தண்டிக்காது மன்னித்து அடைக்கலமளிக்கிறது.
- அரசு,கல்வி நிறுவனங்களையும், அறக் கட்டளைகளையும், சாதி, மத, இன ரீதியில் நடத்துவதற்கு அனுமதியளிக்கிறது. அவற்றுக்கு விசேச உரிமைகளும், சலுகைகளும்கூட அளிக்கிறது.
- அரசு, சாதி, மத இனத் தலைவர்களுக்கு சிலை எடுக்கிறது. விழா நடத்துகிறது. போக்குவரத்துக் கழகங்கள், சாலைகள்,மாவட்டங்கள் போன்றவற்றுக்கு அவர்களது பெயர் சூட்டுகிறது.
- அரசின் முக்கிய அங்கமான ராணுவமே சாதி, மத, இன ரீதியாக பிரிக்கப்பட்டு இயங்குகிறது.
- அரசு அதிகாரிகள், வாரியத் தலைவர்கள், அமைச்சர்கூட சாதி மத, இன ரீதியில் நியமிக்கப்படுகிறார்கள்.

இத்தனையும் செய்துவிட்டு சாதி, மத, இன ஒற்றுமையைக் கடைப்பிடிக்கும்படி மக்களுக்கு போதனை அளிக்கிறது.

## அரசு-தனிப்பெரும் ஒடுக்குமுறை நிறுவனம்

- மக்கள் போராட்டங்கள்வெடிக்கும் எந்த பகுதியையும் கலவரப் பகுதியாக அறிவித்து, கண்டதும் சுடுகிறது அரசு.
- சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக முகாமிடும் இடங்களில் எல்லாம் கொலை, கொள்ளை,



இந்த துப்பாக்கி க...
வாகும்? அவன் எவ்வள...
மிராண்டித்தனமாகத் த...
கொடுத்தது?

கற்பழிப்பு, வெறியாட்டமாடு கின்றன, அரசின் பிரதான அங்க மான இராணுவமும், துணை இராணுவமும்.

- சிறை, காவல் நிலையக் கற்பழிப் புகள், கொலைகள் பெருகி வரு வதோடு 'காவல்' துறையினரே கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.
- அரசே கொலை, கொள்ளை கற்பழிப்பு நடத்திவிட்டுஅவற்றை மறைக்க சட்ட மீறல்கள் செய்வ தாக பலமுறை நிரூபிக்கப்பட்டு விட்டன.
- அடக்குமுறை ஆயுதங்களை வைத்துக் கொள்ளும் ஏகபோக உரிமை பெற்றது அரசு.
- அரசினால் தவறாகத் தண்டிக் கப்பட்டவர்கள், பாதிப்புக் குள்ளானவர்கள் நட்ட ஈடு பெற முடிவதில்லை.
- எழுத்துரிமை, பேச்சுரிமை, சங்கம் வைக்கும் உரிமை இன்னும் பிற அடிப்படை உரிமைகள் ஏட்டள ில் இருப்பதையும் பிடுங்கிக் கொள்வது அரசு.
- யாரையும் விசாரணை இன்றி சிறைப்படுத்துகிறது; எந்த இயக்கத்தையும் தடை செய் கிறது. எந்த இடத்தையும், உடமையையும் பறித்துக் கொள் கிறது.
- எந்த வழக்கிலும் மக்களுக்கு ஆதரவாக இருந்ததில்லை; முத லாளிகள், மிட்டாமிராசுகளுக்கே ஆதரவாக நிற்கிறது அரசு.
- அரசு நிறுவனத்தினரிடம் சாதா ரண மக்கள் பதில் பேசத் துவங் கினாலே "எங்கிட்டேயே சட்டம் பேசுகிறாயா?" "என்னையே எதிர்த்துப் போகிறாயா!" என்று கேட்டு தாக்குகிறது.
- அரசு நிறுவன ஊழியர்களுக்கே ஜனநாயக, குடியுரிமை மற்றும் பிற உரிமைகளை மறுக்கிறது. பல ஆண்டுகளாகியும் 6 லட்சம் தபால்- தந்தி ஊழியர்கள் இன்னும் பிற அரசு அலுவலக, ஆலை ஊழியர்கள் நிரந்தர மின்றியும், சட்ட விரோத மாகவும், சங்கம் வைக்க உரிமை இன்றியும் நசுக்கப்படுகின்றனர். இவ்வாறு எந்த வகையில் பார்த் தாலும் மிகப் பெரும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தேச விரோத நிறுவனம்தான் அரசு.


...ட அவன்மீது இறங்கினால் அவன் கதி என்ன ... பெரிய குற்றம் செய்திருந்தாலும் இப்படிக் காட்டு ...குவதற்கு எந்தச் சட்டம் இவர்களுக்கு அதிகாரம்

"அதிகார வர்க்கம்"—நாட்டின் நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள மேதைகள்.

"போலீசு"—நாட்டின் சட்ட ஒழுங்கு அமைதியின் காவலன்.

"இராணுவம்"-தேசத்தின் எல்லை களைக் காக்கும் புனிதம்.

"நீதி மன்றம்"-அக்கிரமங்களை வீழ்த்தும் நீதியின் நிலைக்களன்.

"சிறைச்சாலை" - குற்றவாளி களைத் திருத்தி நல்ல குடிமக னாக்கும் பட்டறை.

—இப்படி நம்ப வைக்க எத்தனை யோ முயற்சிகள் நடக்கின்றன. இந்த அரசு விசுவாசமே, அரும்பியதிலிருந்து அந்திமக் காலம் வரை இந்தியக் குடி மகனின் மண்டையில் ஏற்றப்படு கிறது.

"இரண்டு தனிநபர்களுக்கிடை யில், இரண்டு பிரிவுக் கூட்டத்திற் கிடையில், இரண்டு வர்க்கத்திற்கிடை யில் தனிநபர் ரீதியிலோ, சாதி, மத, இன ரீதியிலோ, வர்க்க ரீதியிலோ ஏற்படும் எல்லாத் தகராறுகளையும் தீர்த்து வைப்பதற்கானதுதான் அரசு; அல்லது சமரசப்படுத்துவதற்கானது அரசு. குடி தண்ணீர், சுகாதாரம், பாதை, கல்வி இன்னும் பிற பொதுக் காரியங்களை அனைத்து மக்களின் நலன் கருதி ஆற்றுவதுதான் அரசு.

"உள் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி நாட்டில் அமைதி நிலவச் செய்வதும் அந்நிய ஆக்கிரமிப்பிற் கெதிராக, தேசத்தைக் காப்பதும் அரசு. ஆகவே வரிபோடுவதிலிருந்து, தனக்குக் கட்டுப்படாத எந்த ஒரு நபரையும் சுட்டுக் கொல்வது வரை சகல அதிகாரமும் அதற்கு இருப்பது எந்த வகையிலும் நியாயமானதே. இவை அதற்குள்ள புனிதமான உரிமைகள். அரசாங்க நிர்வாகத்தி லுள்ள எம்.ஜி.ஆரோ, இந்திராவோ தவறு செய்யலாம்; அவர்களை கண்டிக்கலாம், விமர்சிக்கலாம், எதிர்க் கலாம். ஆனால் அரசை எதிர்ப் பதோ, விமர்சிப்பதோ அனுமதிக்க முடியாது. அது தேச துரோகம். சட்ட விரோதம்."

- இவைகள் கல்வி நிறுவனங் களில் நாளும் கற்றுத்தரும் பாடங் கள்.
- இவைதான் ஆளும் வர்க்க பிரச் சார பீரங்கிகள் முழங்கும்கோஷங் கள்.
- இவைதான் தேர்தல் அரசியல் கட்சிகளின் மேடைப் பிரசங்கங் கள்.

இல்லை; அரசு ஓர் அதிகாரத் திமிர் பிடித்த கொலை – கொள்ளைக் கூட்டம் என்றே மக்களின் அன்றாட அனுபவங்கள் காட்டுகின்றன. ஆனால் இவ்வளவு பெரிய அரசு அங்கேயோ,இங்கேயோ சில தவறுகள் நடக்கலாம். அதைச் சரி செய்து விட லாம்என்று முதலாளித்துவ சீர்திருத்த வாதிகள் மக்களுக்கு நம்பிக்கையூட்ட முயலுகின்றனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளோ, தாங்கள் தேர்தலில் வெற்றி பெற்று ஆளும் கட்சியாகி அரசாங்கம் அமைத்தால் போதும்; அரசு நல்ல பிள்ளையாகி விடும்; ஒழுக்க சீலனாகி உத்தம புத்திரனாகிவிடும்; முத லாளிக்கும்-தொழிலாளிக்கும், நிலப் பிரபுக்கும்-விவசாயிக்கும் ஏற்படும் தக ராறுகளில்கூட போலீசும் கோர்ட்டும் நடுநிலை வகிக்கிறது; முதலாளித்துவ கட்சிகள் ஆட்சி நடத்துவதனால் தான் அது தவறு செய்கிறது-என்று அந்த அரசாகிய வேசிக்கு முக்காடு போட்டு பத்தினியாகப் படம் பிடிக் கின்றனர்.

இவ்வளவு கடைகோடித்தனமாக கேடுகெட்ட அரசை நியாயப்படுத்தி, அது நீடிப்பதை இவர்கள் ஆதரிப்பது ஏன்?

இவர்கள் மறைமுகமாக தொண் டூழியஞ் செய்யும் ஆளும் வர்க்கங் களாகிய நிலப் பிரபுக்களின், தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நலன்களை காக்கும் பெரும் பணியாற்றுகிறது அரசு. அதன் வீழ்ச்சி ஆளும் வர்க்கங்களோடு அதன் அடிவருடிகளுக்கும் மரண அடி கொடுக்கும்.

எனவேதான் நமது நாட்டின் மிகப்பெரும் சுரண்டல் ஒடுக்கு முறை சாதி, மத, இனவெறி மற்றும் சமூக கலாச்சார சீரழிவு நிறுவனமான அரசை அதன் பிரதான அங்கமாகிய அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதிமன்றம், சிறைச்சாலை அடங்கிய அரசு அமைப்பைத் தூக்கி யெறிவது ஒன்றுதான் உண்மையில் புரட்சியாகும் என்று கம்யூனிஸ்ப் புரட்சியாளர்கள் பிரகடனப்படுத்து கின்றனர். ●

● ஆர். கே.

# சொந்த மண்ணுக்காக சிந்தும் குருதி

நாடு நாடாக உதைபட்டுப் பின்னங்காலைத் தூக்கிக் குரைத்துக் கொண்டே ஓடுகிறது வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியம். 1983ஆம் ஆண்டில் லெபனானில் பெரும் உதை பட்டது. உதைத்து அனுப்பியவர்கள் பாலஸ்தீனியப் போராளிகளும், விடுதலைத் தாகம் கொண்ட பாலஸ்தீனிய மக்களும்.

—1983 அக்டோபர் 23. அரசப் பரசலாகப் பொழுது விடிந்து கொண்டிருந்தது. லெபனானின் திரிபோலி நகரம் மெள்ள விழிக்கும் நேரம். ஒரு லாரி தடதடவென்று வெகுவேகமாக உள்ளே நுழைந்தது—நேரே அமெரிக்கக் கடற்படைத் தலைமை நிலையத்துக்குச் சென்றது. அடுத்து ஒருகணம் தான். என்ன நடந்தது என்று ஊர் அறிவதற்கு முன்னால் அந்த லாரியும், அதிலிருந்த போராளிகளும் பறந்து விட்டார்கள். அந்த நிலையம் தூள் தூளாகிப் புகையும் நெருப்பும் விண் முட்டக்கிளம்பியது.

'குண்டுகள் நிரம்பிய லாரி வந்தது, வெடிவைத்துத் தாக்கியது' என்று மகிழ்வோடு கதைகள் சொன்னார்கள் மக்கள். 'அமெரிக்க நிலையம் மட்டுமல்ல, பிரெஞ்சுக் கடற்படைத் தலைமையகத்தையும் தாக்கி விட்டார்கள!' என்று வேறு ஒரு செய்தியும் மக்கள் மத்தியில் காட்டுத் தீ போல பரவியது.

229 அமெரிக்கப் படை வீரர்களும், 56 பிரெஞ்சுக் கடற்படை வீரர்களும் ஒரே நாளில் கொல்லப்பட்டார்கள்.

—கொஞ்ச நாளில், அமெரிக்க ஏவல் எடுபிடி இஸ்ரேல் வெறியர்கள் லெபனான் பகுதியில் உள்ள போர் முக்கியத்துவம் வாய்ந்த சௌப் குன்றில் அடி உதை வாங்கிக் கொண்டார்கள. முஸ்லீம் ஆயுதப்படைக் குழுக்கள் அங்கே தொடுத்த தாக்குதல் அவ்வளவு வேகமாக இருந்தது.

மலைகளில், நகரங்களில் வாழும் டுரூஸ், ஷியாட் ஆயுதப்படைக் குழுக்கள் தொடர்ந்து அமெரிக்க, பிரெஞ்சுக் கடற்படை வீரர்களைச் சுட்டுக் கொன்றார்கள். ஜன்னி கண்ட லெபனான் ஜனாதிபதி நிலைமைக்கு ஏற்ப லெபனான்—இஸ்ரேல் படை வாபஸ் ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்தான்.

—இச் சம்பவங்களால் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பீதியடைந்தார்கள். ஜனாதிபதி ஜேமயாவின் (எடுபிடி) அரசாங்கம் கவிழ்ந்து விடுமே முஸ்லீம்களிடம் ஆட்சிவீழ்ந்து விடுமே என்று உளற ஆரம்பித்தார்கள்.

லெபனானில் அமெரிக்காவுக்கு என்ன வேலை? லெபனானில் இஸ்ரேலின் ஜியோனிய யூத வெறியர்களுக்கு என்ன வேலை? அமெரிக்கா மட்டுமல்ல, ரசியக் கரடியும் உறுமுகிறதே, காரணம் என்ன? லெபனானில் நடக்கும் போர் யாரை எதிர்த்து யாரால் நடத்தப்படுகிறது? வரலாற்றுப் பக்கங்களை நாம் 1900 வருடங்கள் பின்னால் தள்ளிப் பார்த்தால்தான் விளங்கும்.

இன்றைய இஸ்ரேல் 1900 வருடங்களுக்கு முன் எப்படி இருந்தது? அன்று அந்த இடம் பாலஸ்தீனம். மத்தியகாலச் சிலுவைப போர் இங்கேயும் பிரதிபலித்ததால், கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே மோதல் தொடங்கியது. கிறிஸ்தவர்களால் அன்று விரட்டப்பட்ட யூதர்கள் பல நாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். அதன் பின்னர், நபிகளின் ஏற்பாட்டிற்குப் பிறகு முஸ்லீம்கள் வாழும் நாடாகவே, அவர்களின் அருமைத் தாயகமாகவே பாலஸ்தீனம் விளங்கியது.

19ஆம் நூற்றாண்டில் யூத மத வெறியர்கள் 'ஜியோனிசம்' என்றழைக்கப்படும் மதவெறியை உருவாக்கினார்கள். அந்த மதவெறிதான் 'இஸ்ரேல் மீண்டும் எங்களுக்கே! என்ற கோஷத்தை வைத்தது.

அன்று ஜெருசேலத்தைச் சுற்றி ஒரு சிறு பகுதி மட்டுமே மிஞ்சிய யூதர்கள் வாழ்ந்த பகுதியாக இருந்தது. அதை மையமாக வைத்து யூதர்கள் வலுக்கட்டாயமாகப் பாலஸ்தீனத்தில் அத்துமீறி நுழைந்தார்கள். ஏகாதிபத்திய முதல் யுத்தத்தின்போது குடியேற்றம் மேலும் அதிகரித்தது; ஆங்கில, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட குடியேற்றத்தை ஊக்குவித்தன.

சொந்த மண்ணில் பாடுபட்ட தொழிலாளர்களை யூதர்கள் புறக்கணித்தார்கள்; ஜியோனிசப் பயங்கரவாதக் கும்பல்கள் அவர்களைக் கொன்று குவித்தன. தாயகத்தை விட்டுத் திரள் திரளாக பாலஸ்தீனிய மண்ணின் மைந்தர்களைத் துரத்தவும் ஆரம்பித்தார்கள்.

அன்றிலிருந்தே பாலஸ்தீனியர்கள் சொந்த தாயகத்திலிருந்து கட்டாயப்படுத்திப் பிரித்து எறியப்பட்டார்கள்.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்தது; எண்ணெய் வளம் மிக்க, இராணுவக் கேந்திரப் பகுதியான பாலஸ்தீனத்தில் தனது காவல் நாய் ஜியோனிச அரசை நிறுவ அமெரிக்கா முயன்றது. ஐ. நா.வை ஆதிக்கம் செலுத்திய அமெரிக்கா 1947-ல் பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிளந்தது. 30 சதவீத யூதர்களுக்கு 55 சதவீதப் பெரும் நிலப்பரப்பைக் கொடுத்தது. அதன் தூண்டுதலில் மதவெறியை அடிப்படையாக்கி 'இஸ்ரேல் அரசு' 1948ல் பிரகடனம் செய்யப்பட்டது. சில மாதங்களில் 9 லட்சம் அராபியர்கள் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டார்கள்; படுகொலை செய்யப்பட்டார்கள்.

அந்த நாளிலிருந்து இன்றுவரை இஸ்ரேல் விஸ்தரிப்புப் போர் மூலம் நிலப்பரப்பை அதிகரித்துக்கொண்டே வருகிறது. பாலஸ்தீனியர்களைத் தேசமற்ற அகதிகளாக அடித்துத் துரத்தி வருகிறது.

விடுதலை என்று முழக்கமிட எங்காவது முகாமிட்டுத் தாக்குவதற்கு ஒரு துண்டு நிலமாவது வேண்டாமா? அரபு நாடுகள் உதவ முன்வந்தன. ஆனாலும் அங்கேயும்கூட நிரந்தரமாக நிற்க முடியவில்லை—நாடு நாடாகத் துரத்தப்பட்டார்கள் அவர்கள். காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலும், மிரட்டலும் தான்.

பாலஸ்தீனியர்கள் நாடிழந்த நிலையில் தங்களை ஒன்று திரட்டிக் கொண்டார்கள். அதன் உருவாக்கம் தான் பாலஸ்தீன விடுதலை அமைப்பு. பி. எல். ஓ. முதலில் ஜோர்டானில் முகாமிட்டது. பி. எல். ஓ. 1970ல் அமெரிக்கத் தூண்டுதலின் பேரில் ஜோர்டான மன்னன ஹுசைன் பாலஸ்தீனியர்கள் மீது அடக்குமுறை தொடுத்துக் கொரில்லாக்களைக் கொன்று குவித்தான். அந்தக் 'கருப்பு செப்டம்பர் நிகழ்ச்சி'யைப் பாலஸ்தீனிய மக்கள் இன்றும் மறக்கவில்லை. பல்லாயிரம் பாலஸ்தீனியர்களை நாடுகடத்தினான் அக்கொடுங்கோல் மன்னன் ஹுசைன்.

அன்று வெளியே தள்ளப்பட்டவர்களுக்குப் புகலிடம் அளித்தது லெபனான்தான்.

லெபனானில் இன்றுள்ள நிலவரம் என்ன? சக்திகளின் அணிவகுப்பு எப்படி இருக்கிறது? மத அடிப்படையிலேயே மக்களைப் பிரித்திருக்கிறார்கள். கிறித்தவ மரோனைட்டுகளின் கட்சியாகிய ஃபளாஞ்சியக் கட்சி தலைமையின் கீழ் ஓர் ஆயுதப்படை. இது ஓர் பாசிச அடக்கு முறைக் கட்சி. செயல்படும் களம்: கிழக்கு, வடகிழக்கு லெபனான் பகுதி. மற்ற குழுக்களை அடக்கி அதன் தலைவர்களைக் கொன்று குவிப்பது இதன் வேலை. இது அமெரிக்க ஏவல் கும்பலாகும். இதுதவிர, முன்னாள் பிரதமர் ரஷீத் கராமு தலைமையில் ஓர் அமைப்பும், தேசீய தாராள வாதக் கட்சியும் கிறித்தவர்களிடையே உள்ளன.

முஸ்லீம் மக்களிடையே ஆயுதப் படைப் பிரிவினர் மும்முரமாகச் செயல்படுகிறார்கள்; இவர்கள் தங்களை 'மக்கள் தேசீய இயக்கம்' என்று

அழைத்துக் கொள்கிறார்கள். இன்னொரு பிரிவு ஷியாட் அமல் ஆயுதக் குழு. சிரியாவின் ஆதிக்கத்தில் உள்ள பெக்கா பள்ளத்தாக்கின் பால்பெக் நகரத்தில் செயல்படுகிறது. டுரூஸுக்குச் சிரியாவும், ஷியாட்டுக்கு ஈரானும் 'உதவி' செய்கிறார்கள். கிழக்கு லெபனானில் முஸ்லீம் குடியரசை நிறுவுவதே இவற்றின் நோக்கம்.

ஆக, தங்கள் தங்கள் எசமானர்களுக்காக இவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

லெபனான் மீது வந்து விழுந்த தாக்குதல்களை இனி பார்ப்போம்.

லெபனானிலிருந்து ஓடிப்போன மேஜர் சாத் ஹடடாட் தலைமையில் 1978ல் இஸ்ரேல் கூலிப்படை ஒன்று லெபனான் முஸ்லீம்கள் மற்றும் பாலஸ்தீனியர்களைத் தாக்கியது. இன்றும் தொடர்ந்து தாக்கிப் பீதியில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

லெபனானில் உள்ள குழுக்களிடையே 'சமாதானத்தை' உண்டு பண்ணுவதற்கென்று 1976-ல் அரபுக் கூட்டமைப்பின் வேண்டுகோளின்படி சிரியாப் படைகள் லெபனானுக்கு வந்தன. அவை வடக்கு, வடகிழக்குப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டன.

இது தவிர, பாலஸ்தீனக் கொரில்லாக்கள் லெபனானில் செயல்படுவதால் தங்களுக்கு ஆபத்து என்று கூறி 1982 ஜூனில் காட்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தி இஸ்ரேல் தெற்கு லெபனானை ஆக்கிரமித்தது.

லெபனானில் 'அமைதி சமாதானத்தைக் காக்க' ஊர் உலகத்துக்கு எல்லாம் அக்கறை. யார் யாருக்கு? அமெரிக்கா, ரசியா, பிரான்சு, மத வெறிக் கோமேனி இப்படி மக்களைச் சுரண்டும் கூட்டத்துக்கு; நாட்டைப் படுகுழியில் தள்ளும் பிற்போக்குக் கும்பலுக்கு. 'சமாதானத்தை உண்டாக்க' சிரியா வந்திறங்கியதும், போட்டா போட்டியாக அந்தச் 'சமாதானத்தைக் காப்பதற்காக' என்ற பெயரில் அமெரிக்க, பிரெஞ்சு, ஆங்கிலேயக் கடற்படைகள் லெபனானில் இறங்கின. இங்கே இருந்து கொண்டு சிரியாப்படை தங்கிய பகுதியைத் தாக்கின; வேவு விமானங்களை வைத்து உளவு பார்த்தன; சிரியா—ரசியாவிற்கு இடையே நடக்கும் செய்திப் போக்குவரத்துகளைச் சோதனை செய்தன.

ரசிய சமூக ஏகாதிபத்தியமோ சிரியாவைத் தனது ஏவுகணையாக வைத்துக் கொண்டு அமெரிக்காவையும், இஸ்ரேலையும் எதிர்த்துத் தனக்காகச் சண்டையிட வைக்கிறது.

அமெரிக்கா விரிவான திட்டம் தீட்டியது — இஸ்ரேலை அங்கீகாரம் பெற வைத்து மத்தியக் கிழக்கில் அதன் துணை வல்லரசு மேலாண்மையை நிறுவுவது; யூத வெறி இஸ்ரேலின் கொலைகார ராணுவத்தை ஏவி தனது நலன்களை ஈடேற்றுவது; பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழிப்பது அல்லது அரபு



இஸ்ரேலிய குண்டு வீச்சில் கருக்கப்பட்ட சிறுவனின் உடலுடன் ஒரு பாலஸ்தீன இளைஞன்.

அடிவருடிகளின் ஆதிக்கத்தின கீழ் ஜோர்டான் நதியின் மேற்குக் கரையில்ஒரு சிறு பாலஸ்தீன நாட்டை நிறுவுவது; இதற்காக—அரபு நாடுகளைப் பிளவுபடுத்துவது, அரபு—பாலஸ்தீன மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்துப் பாலஸ்தீன மக்களைத் தனிமைப் படுத்துவது ஆகிய அரசியல் சூழ்ச்சிகளில் ஈடுபடுவது; இவற்றுக்கு அடித்தளமாக சௌதி அரேபியா, ஜோர்டான், எகிப்து ஆகிய நாடுகளைத் தனது ஆணையின் கீழே வைத்தது; இப்போது லெபனானின் மீது அதன் பாய்ச்சல் திரும்பியிருக்கிறது.

அடிவருடி இஸ்ரேலின் மூலமாக அமெரிக்கா 1982 ஜூனில் லெபனான் மீது தாக்குதல் தொடுத்தது. நிராயுதபாணியான பாலஸ்தீனிய மக்களைக் கொன்று குவித்தது; மூன்று லட்சம் பேர் வீடில்லாமல் ஆக்கப்பட்டனர்.

இஸ்ரேலுக்குப் பயந்த சிரியா வாய்ச் சவடாலோடு நின்று கொண்டது; 21 அரபு நாடுகளின் கூட்டமைப்பு இஸ்ரேலின் கடுமையான தாக்குதலின் போதும் ஒன்றும் செய்யவில்லை — அதாவது, 1973 இஸ்ரேல் — எகிப்து யுத்தத்தின் போது அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் விற்பனைக்குத் தடைபோட்டதே, அந்த அளவிற்குக்கூட இப்போது செய்யவில்லை; அமெரிக்க நிதி நிறுவனங்களில் உள்ள பெருத்த பணத்தைத் திரும்பப் பெறும் எதிர் நடவடிக்கைகளையும் செய்யவில்லை.

எனினும் போர் விடாப்பிடியாகத் தொடர்ந்தது. நெஞ்சுரத்தோடு போரிட்ட பாலஸ்தீனியர்களுக்கு முன்னால் இஸ்ரேல் திணறியது. பாலஸ்தீனியர்களுக்கும் தன்னந்தனியாக நீண்ட நாள் போரிட முடியாத நிலை. நிலைமையை அளந்த அமெரிக்கப் பிணக் கழுகு ஒரு சமாதானத் திட்டத்தோடு உள்ளே நுழைந்தது. "லெபனானிலிருந்து எல்லாப் படைகளும் வெளியேற வேண்டும். லெபனானின் சுதந்திரத்தைப் பாதுகாப்போம்!" என்று வேதமோதியது இப்பெருஞ்சாத்தான.

பாலஸ்தீனிய, சிரியாப்படைகள் வெளியேற்றிவிட்டால், ஃபலாஞ்சியக் கிறித்தவப் பாசிசப் படைகளிடமும், மேஜர் ஹட்டாட் கூலிப் படையிடமும் லெபனானைத் தூக்கிக் கொடுத்து விடலாம் என்பதே அமெரிக்காவின நயவஞ்சகத் திட்டம். அவ்வாறே நடத்தியும் காட்டியது அமெரிக்கா.

பி. எல். ஓ. லெபனானை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது. சிரியா, ஜோர்டான், சூடான், டுனீசியா, வடக்கு—தெற்கு ஏமன் ஆகிய நாடுகளுக்குப் பாலஸ்தீனியர்கள் விரட்டப்பட்டார்கள். இஸ்ரேல் மட்டும் தெற்கு லெபனானை ஆக்கிரமித்துக் கொண்டு அங்கேயே தங்கியது. போலித் தேர்தல் நாடகம் ஆடப்பட்டு, இஸ்ரேலின் அடிவருடி ஏவல் நாய் பஷீர் ஜெமயால் ஜனாதிபதியாக்கப்பட்டான். அதன்பிறகு, 'கொடுத்த சுதந்திரத்தைக் காப்பாற்ற' உள்ளே நுழைந்தன அமெரிக்க, பிரெஞ்சு 'சமாதானப் படைகள்'. அமெரிக்காவின் திட்டம் ஒரு முழுச் சுற்று நடந்தேறியது.

பி. எல். ஓ.வின் தலைமையகம் டுனீசியாவிற்கு மாற்றப் பட்டது. நாடோடி வாழ்க்கையில் புதுப்படலம் தொடங்கியது. மறைமுகமாக நுழைந்த அமெரிக்காவை மறைமுகமாகத் தாக்கும் ரசியாவின் திட்டம் இப்போது தொடங்கியது. ரசியாவால் முழு ஆயுதபாணியாக்கப்பட்ட சிரியா வடக்கு லெபனானில் முதலில் நுழைந்து ஊன்றிக் கொண்டது. பின்னர் முஸ்லீம் ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு கொடுத்து மேலும் பலமாக அடித்தளம் போட்டது.

இருதலைக் கொள்ளி எறும்பு என்று சொல்வார்களே அதுபோல பாலஸ்தீனியர்களின் நிலை — போராட்டக் குழு பி. எல். ஓ.வுக்குள் பிளவும், சண்டையும்; மறுபுறம், ஆதரவு என்ற மயக்குப் போர்வையில் தனது ராணுவத் தலைமையின் கீழ் வரச் சொல்லி நிர்ப்பந்தம் செய்யும் சிரியா — இதுதான் இன்றைய பாலஸ்தீனியர்களின் நிலை.

இவர்களின் அவல நிலை இஸ்ரேலிய வெறியர்களுக்குத் தேனும் கள்ளும் சேர்த்து ஊட்டியது போல் இருக்கிறது. இஸ்ரேல் அப்படிப்பட்ட தாக்குதலை இவ்வருடம் அக்டோபர் முதல்நாள் பி. எல். ஓ. தலைமையகத்தின் மீது தொடுத்தது — செப்டம்பர் இறுதியில் சிப்ரஸில் பாலஸ்தீனியர்கள் மூன்று இஸ்ரேலிய சிவிலியன்களைக் கொன்றதுதான் முகாந்திரமாம்.

உண்மை வேறு விதம். அந்த மூவரும் இஸ்ரேலிய உளவு நாய்கள். உலகமே எழுந்து நின்று கண்டனம் செய்த போதும், கொள்ளைக்கார ரீகன் சொல்கிறான்: "பயங்கரவாதத்

துக்கு எதிராக அப்படித் தற்காப்புப் போர் நடத்துவது எல்லா விதத்திலும் சரியே!"

பாலஸ்தீனிய மக்கள் ஒரு முழுச் சொந்த மண்ணுக்காகக் குருதியைக் கொட்டிப் போராடுகிறார்கள். ஆனால் போராட்டம் விழலுக்கு இறைத்த நீராகிக் கொண்டிருக்கிறது. மதவாதப் பிற்போக்கு, வலது பக்கம் இழுக்கிறது; தனி நபர் தீவிரவாதம் இடது பக்கம் இழுக்கிறது; இப்படித் திசைகள் மாறிப் பறந்து கொண்டிருப்பது பாலஸ்தீனியர்களுக்கு மட்டுமல்ல, லெபனான் கிறித்தவ—முஸ்லீம் மக்களுக்கும், பொதுவாக அரபு மக்களுக்கே விடிவைத் தராது.

அரபு நாடுகளோ, (ஈரானைத் தவிர) ஏதாவதொரு மேல்நிலை வல்லரசுகளின் அடிவருடி அரசுகளாகவே இருக்கின்றன. சகோதரர்கள் இப்படிச் சாகிறார்களே என்று 'அழுது கண்ணீர் வடித்து அறிக்கை' வடுகிறார்கள்; ஆனால் கடைசியில் சொந்த நாட்டில் எந்த வல்லரசோடும் சேர்ந்து சுரண்டித் தின்னலாம் என்றே திட்டமிடுகிறார்கள்.

இதில் அமெரிக்கா மட்டுமல்ல, சிரியா மூலமாக, கம்யூனிச வேடம் தரித்துக் கபடநாடகம் ஆடும் ரசிய சமூக ஏகாதிபத்தியமும் பாலஸ்தீன மக்களின் விடுதலைக் கனவைப் பிய்த்து வீசி எறிந்து கொண்டிருக்கிறது. எடுபிடிச் சிரியா 1980-ல் ரசியாவோடு ராணுவ ஒப்பந்தம் செய்தது: ரசியா 1982-ல் சாம் 5 ரக ஏவுகணைத் தளம் அமைத்துக் கொடுத்தது; மொத்தம் 6000 ரசிய ராணுவ ஆலோசகர்கள் இன்று சிரியாவில் முகாமிட்டுள்ளார்கள்.

ஆக, ரசியாவின் சதித் திட்டமும் அமெரிக்காவுக்குப் போட்டியாக வளர்ந்து கொண்டு இருக்கிறது. உலகில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் வளமிக்க பகுதி மத்திய கிழக்கு நாடுகள். அதைக் கைப்பற்றிக் கொள்ளவே ஏகாதிபத்தியவாதிகள் நாய்ச் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

பாலஸ்தீனியர்கள் தனியாகப் போராடித் தங்கள் மண்ணைப் பெற முடியாது. அவர்களது நியாயமான போராட்டம் பி. எல். ஓ.வில் உள்ள அராஃபத் போன்ற ஊசலாட்டக்காரர்களை நம்ப முடியாது. அராஃபத்துக்கள் எந்நேரமும் ஏதாவதொரு வல்லரசின் சமரசத்துக்கும் பலியாகி விடுவார்கள்.

எனவே பாலஸ்தீனியப் போராளிகள் மத்திய மேற்கு அரபு மக்களின் விடுதலையோடு தங்களது விடுதலைப் போரைப் பிணைக்க வேண்டும்; அரபு மக்களின் ஐக்கியத்தைக் கட்டவேண்டும். புரட்சிகரச் சித்தாந்தத்தால் வழி நடத்தப்படும் ஓர் அமைப்பைக் கட்டி அதன் தலைமையில் பாலஸ்தீனப் புரட்சியை நடத்த வேண்டும்.

பாலஸ்தீன மக்களின் ஈராயிரம் ஆண்டுக் கனவை நனவாக்க பாலஸ்தீனப் புரட்சி நிச்சயம் வெடித்தெழும் — ஒரு சரியான பாதையிலே!

• இரணியன்

# உலகைக் குலுக்கிய நவம்பர் புரட்சி



செங்காவற் படைவீரர்களும் இராணுவத்தினரும் அலை எழும்புவது போல ஆர்த்து எழுந்தார்கள். பனிக்கால அரண்மனையை நோக்கிப் பாய்ந்தார்கள். வீரர்களின் அணிகள் மலைவெள்ளம் போலப் புரண்டு வந்தன. அக்கம் பக்கத்து வீதிகளிலிருந்து பீரங்கிக் குண்டுகள் பொழியலாயின. மெஷின்கள் சடசடத்தன.

அரண்மனையைத் தடுத்து நின்ற விறகுத் தடை அரண்கள் மீது நெருப்பு மாரி பெய்தவாறு அரண்மனைச் சதுக்கத்தில் பாய்ந்து முன் சென்றது கவச மோட்டார். இராணுவக் கல்லூரி மாணவர்கள் ஆயுதங்களை எறிந்து விட்டு அரண்மனைக்குள் ஓடினார்கள்.

செங்காவற் படைவீரர்களும் இராணுவத்தினரும், "ஹுர்ரா! தொழிலாளர் புரட்சி நீடூழி வாழ்க!" என்று வெற்றி முழக்கம் இட்டவாறு இராணுவக் கல்லூரி மாணவர்களையும் அதிகாரிகளையும் விரட்டிச் சென்றார்கள்."

— இது நவம்பர் புரட்சியின் ஒரு காட்சி!

இப்பூவுலகில் முதன் முதலில் ஒரு சோசலிச நாட்டை ரசியாவில் மலர வைத்த புரட்சி தொடங்கிய நாள் நவம்பர் 7, 1917ம் ஆண்டு!

இதற்குமுன் நடந்த புரட்சிகள் அனைத்தும் சுரண்டலாளர்களின் ஒரு கும்பல் இன்னொரு கும்பலைத் தூக்கியெறிவதற்காகத்தான் நடந்தன. 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்று முழக்கமிட்டு பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் நடந்த மாபெரும் ஜனநாயகப் புரட்சிகளிலும் இதுதான் நடந்தேறியது; ஆனால் நவம்பர் புரட்சியின் குறிக்கோளோ மனிதனை மனிதன் சுரண்டுவதையே முற்றாக ஒழிப்பதாகும்; சுரண்டலாளர்களின் கும்பலையே ஒழிப்பதாகும்.

ஆம்! வர்க்கங்களே இல்லாத, ஒடுக்குமுறையே இல்லாத ஒரு புத்தம் புதிய சமுதாயத்தைக் கட்டுவதற்கு கால்கோள் விழா எடுத்த நாளே நவம்பர் புரட்சி! இதற்காக இதுவரை வரலாற்றில் தோன்றிய ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிலேயே மிகமிக புரட்சிகரமான வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் அரசியலதிகாரத்தை — பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை - நிலை நாட்டியதுதான் நவம்பர் புரட்சியின் நிகழ்ச்சி நிரல்!

மனித இன வரலாற்றிலேயே முதன் முறையாக கூலித் தொழிலாளர் வர்க்கம், இதுவரை கொத்திக் குதறப்பட்டு, நசுக்கப்பட்டு வந்த வர்க்கம் ஆளும் வர்க்கமாகத் தன்னை உயர்த்திக் கொண்ட நாளே நவம்பர் புரட்சி நாள்! அகிலம் முழுவதுமுள்ள பாட்டாளி மக்களுக்கு வீர உணர்ச்சியையும் பெருமிதத்தையும் ஒரு தொடுவிளைவைப் போல உருவாக்கிய உன்னதமான புரட்சி இது!

எனவேதான் அனைத்துலகிலும் உள்ள அடக்கப்பட்ட மக்கள் இந்த நவம்பர் புரட்சியைத் தங்களது விமோச்சனத்திற்கான அடையாள சின்னமாகக் கண்டனர்; அதன்பால் தங்களது ஆதரவையும் அன்பையும் சொரிந்தனர்.

பெரிய முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாயிருந்த ரசியாவில் ஏகாதிபத்திய முதலாளிகளை ஆட்சிக் கட்டிலிலிருந்து தூக்கியெறிந்ததன் மூலம் உலக ஏகாதிபத்திய அமைப்பில் ஓர் உடைப்பை ஏற்படுத்தியது நவம்பர் புரட்சி!

சர்வதேச பரிமாணமும் வீச்சும் கொண்டது நவம்பர் புரட்சி! ஏனென்றால், உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த பழைய ஏகாதிபத்திய முதலாளித்துவ உலகிலிருந்து புதிய, சோசலிச

உலகை நோக்கி வரலாறு ஒரு புரட்சிகரமான திடீர் திருப்பத்தை நவம்பர் புரட்சி குறித்தது. முதலாளித்துவ உலகின் தலைவிதியை நிர்ணயிக்கிற புரட்சிகர திருப்பமாக அது இருந்தது.

உலகப் பாட்டாளி வர்க்கத்தினுடைய விடுதலைஇயக்க போராட்ட வரலாற்றில் ஒரு திடீர் மாற்றத்தைக் குறிப்பதாக அது இருந்தது. புவியெங்கிலும் உள்ள சுரண்டப்பட்ட மக்களின் சித்தாந்தம், பண்பாடு பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், அமைப்பு வடிவங்கள், போராட்ட முறைகள் யாவற்றிலும் ஒரு புரட்சிகரமான திடீர் திருப்பத்தை நவம்பர் புரட்சி நாட்டியது.

முதலாளிகள், நிலப் பிரபுக்களிடமிருந்த உற்பத்திச் சாதனங்களைப் பறித்து பொதுவுடமையாக்கியது நவம்பர் புரட்சி. முதலாளித்துவ தனிச் சொத்துடமை புனிதமானது, என்றென்றைக்கும் நீடித்து நிற்கக் கூடியது, தவிர்க்கவே முடியாதது என்று நிலவி வந்த கட்டுக் கதையை சுட்டெரித்தது.

அது, முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து அரசியலதிகாரத்தைப் போராடிப் பிடுங்கியது; முதலாளிகளின் அரசியல் உரிமைகளைப் பறித்தது; முதலாளித்துவ அரசுக் கட்டமைப்பைத் தட்டித் தகர்த்தெறிந்தது. மக்களுக்கான உண்மை ஜனநாயகத்தை வழங்கக்கூடிய சோவியத்துகள் எனும் புதிய அரசியலதிகார வடிவத்தை நிறுவியது.

ஆம்! முதலாளித்துவ ஜனநாயக வடிவமான முதலாளித்துவ நாடாளுமன்றத்திற்கு எதிராக, மாற்றாக பாட்டாளி வர்க்க ஜனநாயகமான சோவியத்துகளின் சோஷலிச ஆட்சியை ஓர் ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் மூலம் நிறுவியது. இதன் மூலம் நாடாளுமன்ற பாதை, அமைதி வழி மாற்றம் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் பசப்பி வந்த ஏமாற்றுவித்தையை, மோசடியை தோலுரித்துத் தொங்கவிட்டது. புதிய, சோசலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கும் பாதையில் நடைபோடத் தொடங்கியது.

நவம்பர் புரட்சியானது ஏகாதிபத்தியத்தின் மைய நாடுகளில் ஓர் குலுக்குதலை ஏற்படுத்தியதோடு, அதன் பின்புலம், விளிம்பு நாடுகள் என்று சொல்லப்படுகின்ற காலனி நாடுகள் மற்றும் பின் தங்கிய நாடுகளிலும் ஓர் அதிர்ச்சி கலந்த தாக்குதலைத் தொடுத்தது; அங்கே ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை சிறுமைப் படுத்தியது.

பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட ரசியாவில் நிலவிய காலனிய, தேசிய ஒடுக்குமுறையை நவம்பர் புரட்சி ஒழித்தது; இவ்வாறு தேசிய, காலனியப் புரட்சியை சாதித்ததன் மூலம் "உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்!" என்ற இலட்சியத்தை நடைமுறையில் சாதித்துக் காட்டியது.

நவம்பர் புரட்சியானது காலனிய, பின் தங்கிய நாடுகளில் புதிய ஜனநாயகப் புரட்சி என்ற புதிய சகாப்தத்தை தொடங்கி வைத்தது; ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு புது இரத்தத்தைப் பாய்ச்சி புத்துணர்வை ஊட்டி வீறுகொண்டு எழச் செய்தது. இனி கேள்விக்கிடமற்ற வகையில் காலனி நாடுகளை அடக்கி ஒடுக்கி சுரண்டி வந்த காலம் மலையேறி விட்டது. புரட்சியின் மேலாண்மை கொண்ட புதுயுகம் பிறந்தது.

வென்றடக்குவதன் மூலம் தேசங்களை ஒன்று சேர்ப்பதுதான் தேசியம் என்று இதுவரை சொல்லப்பட்டது. ஆனால் இது முதலாளித்துவ தேசியமாகும்; இதன் மூலம் தேசியப் பகைமைகள் அதிகமாயின; தேசங்கள் ஒன்றிடமிருந்து ஒன்று விலகித்தான் சென்றன. நவம்பர் புரட்சியில் இது தவறென்று நிரூபிக்கப்பட்டது; அது மட்டுமல்ல; சகோதரத்துவ அடிப்படையில், சமத்துவத்தின் அடிப்படையில், விருப்பத்தின் அடிப்படையில் தேசங்களை நவம்பர் புரட்சி ஒன்றுபடுத்தி பாட்டாளி வர்க்க தேசியத்தை உயர்த்திப் பிடித்தது.

'உலகம் வெள்ளையர்கள், கறுப்பர்கள் என்று இருபிரிவுகளாக பிளவுபட்டுள்ளது, இதில் கறுப்பு இனத்தவர் நாகரிகத்திற்கு சற்றும் ஏற்புடையவர் அல்லர்; அவர்கள் உழைக்கவும் சுரண்டப் படவுமே உருவாக்கப்பட்டவர்கள் ஆனால் வெள்ளையர்களோ நாகரிகத்தின் நடமாடும் உருவங்கள் என்று அதுவரை புகழப்பட்டு வந்த திட்டமிட்ட சதியை நவம்பர் புரட்சி வெட்டி சாய்த்தது.

தவிர்க்க முடியாமல் தனது உள் முரண்பாடுகளால் நெருக்கடிகளுக்குள் சிக்கி அந்திமக் காலத்தை நோக்கி போய்க் கொண்டிருந்த முதலாளித்துவத்தின் இறுதிப் பயணத்தை நவமபர் புரடசி துரிதப் படுத்தியது; ஏகாதிபத்திய அமைப்பின் அடித்தள மண்ணை வேகமாக அரிக்க ஆரம்பித்தது. நவம்பர் புரட்சியால் ஏகாதிபத்யத்தின்மீது ஏற்படுத்தப் பட்ட காயத்திலிருந்து என்றென்றைக்கும் அது மீளமுடியாது; அதன் நிலையற்ற தன்மை நிரந்தரமாகி விட்டது.

அது மட்டுமல்ல; முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டியதன் மூலம் நவம்பர் புரட்சியானது, உலகப் புரட்சிகர இயக்கத்திற்கு ஒரு தளப் பிரதேசத்தை உருவாக்கிக் கொடுத்தது. உலக முழுவதிலுமுள்ள புரட்சிகர மக்களின் அய்க்கியத்தை சாதிக்கிற போராட்ட மையமாக மாஸ்கோ விளங்கிற்று.

அகிலமெங்குமுள்ள ஒடுக்கப் பட்ட வர்க்கங்களின் பலம், துணிவு, போராட்ட தயார் நிலை ஆகியவற்றை நவம்பர் புரட்சியானது ஒரு கலங்கரை விளக்கத்தை அவர்களுக்கு அளித்திருந்தது.

முதலாளித்துவத்தின் இளமைப் பருவததின் 'ஜேகோபின்' என்ற வார்த்தையைக் கேட்டு நிலப் பிரபுக்கள் எவ்வளவு நடுநடுங்கினார்களோ, அதே போல, முதலாளித்துவத்தின் அந்திமக் காலத்தில், 'போல்ஷ்விக்' என்ற வார்த்தையைக் கேட்டு உலகம் முழுவதிலுமுள்ள முதலாளிகளை நடுநடுங்க வைத்தது நவம்பர் புரட்சி!

எழுந்து கொண்டிருந்த முதலாளித்துவ வர்க்கத்தின் புரட்சிகர பிரதிநிதிகளுக்கு பாரிஸ் எவ்வாறு பள்ளியாகவும் புகலிடமாகவும் துவங்கியதோ அவ்வாறு, எழுந்து கொண்டிருந்த பாட்டாளி வர்க்கத்திற்கு மாஸ்கோ பள்ளியாகவும் புகலிடமாகவும் துலங்க ஆரம்பித்தது.

ஜேகோபின் மீதான அவதூறுகளும் வெறுப்புகளும் நிலப் பிரபுத்துவத்தைக் காப்பாற்ற முடியவில்லை. அவ்வாறே போல்ஷ்விக்குகள் மீதான அவதூறுகளும் வெறுப்புகளும் இறுதி வீழ்ச்சியைத் தடுக்கவே முடியாது என்று நவம்பர் புரட்சிஅறைந்து சாத்தியது; ஆம்! உலக முதாளித்துவ வீழ்ச்சியின் சகாப்தத்தை நவம்பர் புரட்சி துவக்கி வைத்து விட்டது.

நவம்பர் புரட்சியானது அரசியல் சமுதாயத்துறைகளில் மட்டும் ஒரு புரட்சியை ஏற்படுத்தவில்லை. பாட்டாளி வர்க்கத்தின் சிந்தனையிலும் ஓர் புரட்சியை, அதன் சித்தாந்தத்திலும் ஓர் புரட்சியை ஏற்படுத்தியதொன்றாகும்.

மார்க்சியம் லெனினியம் என்ற பதாகையின் கீழ் பிறந்து வளர்ந்து ஜெயக்கொடி நாட்டியது நவம்பர் புரட்சி! எனவே, அது திரிபுவாதத்தை மார்க்சியம் வென்றதன் அடையாளமாகும்; நாடாளு மன்றப் பாதை என்ற சந்தர்ப்ப வாதத்தின் மீது லெனினியம் பெற்ற வெற்றியாகும்.

இவ்வாறு மார்க்சியத்திற்கும் திரிபு வாதத்திற்கும் இடையே கடக்கவே முடியாத ஒரு பள்ளத்தாக்கை உருவாக்கியது நவம்பர் புரட்சி.

தொழிலாளி வர்க்கத்திலுள் உள்ள முதலாளிகளின் ஏஜெண்டுகளாக, தொழிற்சங்க புரோக்கர்களாக திரிபு வாதிகள் செயல்படுகின்றனர்; இவர்களுக்கு ஒரு முடிவு கட்டாத வரை, முதலாளித்துவத்திற்கும் ஒரு முடிவு கட்ட முடியாது. எனவேதான், முதலாளித்துவத்தின் மரணம் என்பது தொழிலாளிவர்க்கத்திலுள்ள சந்தர்ப்ப வாதத்தின் மரணமாகும்; நவம்பர் புரட்சி உலகிற்கு இதை எடுத்தியம்பியதோடு, திரிபு வாதத்தின் மீது மார்க்சியத்தின் வெற்றி தவிர்க்க முடியாதது என்றும் நிரூபித்துக் காட்டியது.

அந்த நவம்பர் புரட்சியின் பாதையில் சீனத்திற்கே உரிய சிறப்பான நிலைகளுக்கேற்ப புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றார் தோழர் மாவோ; அதன் மூலம் மார்க்சியம்—லெனினியத்தை ஓர் உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தார்; மாசேதுங் சிந்தனையை தனது வழிகாட்டும் தத்துவமாகக் கொண்டு இந்திய நாட்டில் புரட்சியை முன்னெடுத்துச் செல்கின்றஇயக்கத்திற்கு மட்டுமே நவம்பர் புரட்சியைக் கொண்டாட உரிமையும் தகுதியும் உண்டு.

மற்றவர்கள் எல்லாம் போலிகள்; ஆளும் வர்க்கத்தின் காலிகள். இவர்களின் தோலுரிக்க, புரட்சிப் பாதையில் முன்னேறுவோம்! இந்திய நாட்டை 'புதிய ஜனநாயக' இந்தியாவாகப் படைப்போம்!! ●

● கணேசன்

# அணி திரள்கிறர்கள் அமெரிக்கக் கைக்கூலிகள்

ஒரு சாதாரணப் பத்திரிக்கையாளன் ஒரு மாநிலத்தின் முதல்வரையே பதவியிலிருந்து இறக்க முடியுமா? கோடிக்கணக்கான ரூபாய் ஊழலை அம்பலப்படுத்தி ஒரு நாட்டின் பிரதமரையே திக்குமுக்காடச் செய்ய முடியுமா? — என்று எல்லோரும் வாய் பிளக்கும் வண்ணம் இந்தியப் பத்திரிக்கை உலகில் சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர் ஒருவர் உண்டென்றால் அவர்தான் அருண்ஷோரி என்று பத்திரிக்கை உலகமே கொண்டாடியது. அவருடைய சாதனைக்காக மகஸேஸே விருது கொடுக்கப்பட்டது. உலகளவில் அவர் புகழ் பரவியது. ஜனநாயகம் பற்றி வாயால் பேசிக் கொண்டு, அடிமையாக வாழ்ந்து கொண்டிருந்த நடுத்தரவர்க்க அறிவு ஜீவிகளின் கதாநாயகன் அன்றைக்கு அருண் ஷோரிதான்.

அருண் ஷோரியாருக்கு பாடப்பட்ட திருப்புகழினூடே அருண் ஷோரி யார் என்று சிலர் அடையாளம் காட்டவும் செய்தார்கள். ஆனால் இந்த மேளதாளங்களின் சத்தம் அதை அமுக்கிவிட்டது.

வேஷத்தைக் கலைத்துவிட்டு சுயரூபத்தை ஏற்கனவே அவர் காட்டிவிட்டார். அஸ்ஸாம் பிரச்சினையில் தனது ஆர். எஸ். எஸ். ஆதரவு நிலைப் பாட்டிலும், கம்யூனிச எதிர்ப்பிலும் தெளிவாகவே தன்னை அடையாளம் காட்டிக்கொண்டார் ஷோரி. புரிந்து கொள்ளாதவர்களுக்காக முகத்தில் மிச்சமாக ஒட்டியிருந்த அரிதாரத்தையும் கலைத்து விட்டு இப்போது அரங்கேறி விட்டார்.

துக்ளக் 1-10-85 இதழில், 'எதிர்பார்த்ததை விட அதிகமாகச் செய்திருக்கிறார் ராஜீவ் காந்தி' என்று பாசிஸ்ட் ராஜீவுக்கு புகழாரம் சூட்டுகிறார் ஷோரி. 'சரியானதைப் பாராட்டுவேன்; தவறானதை விமரிசிப்பேன்' என்று மாபெரும் நேர்மையாளனைப் போன்று எழுதுகிறார்.

துக்ளக் படிக்கும் வாசகர்கள் சோ, கே. சீனிவாசன் போன்ற அமெரிக்க ஆதரவு பஜனை கோஷ்டி மொத்தமுமே ராஜீவ் புகழ் பாடுவதைக் கவனித்திருக்க முடியும். இதில் கடைசியாகச் சேர்ந்திருப்பவர் குல்தீப் நய்யார். இவர் இடம் பொருள் ஏவல் பார்த்து ஜால்ராவைக் கையிலெடுக்கக் கூடிய நேர்மையாளர்.

“அஸ்ஸாம், பஞ்சாப் பிரச்சினை தீர்வு, கட்சித்தாவல் தடைச்சட்டம், ஊழலை ஒழிக்க லோக்பால் மசோதா, புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய கல்விக் கொள்கை என்று உள்நாட்டில் தீவிர நடவடிக்கைகள். அமெரிக்க ரஷிய விஜயம், கலாச்சார திருவிழாக்கள், திம்பு பேச்சுவார்த்தை என்று சர்வதேச அரங்கில் சுறுசுறுப்பான தலையீடு' என்றவாறு பதவியேற்று ஒரு ஆண்டு முடிவதற்குள் ராஜீவ் முன்னேற்றப் பாதையில் நாட்டைப் புயல் வேகத்தில் கொண்டு போகிறார்” —என்ற பிரமை வலுவாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இங்கே உள்ள அமெரிக்க ஆதரவு தரகுமுதலாளிகளும், பெரும்பான்மையாக இருக்கக்கூடிய அமெரிக்க ஆதரவு பத்திரிக்கைகளும், அறிவு ஜீவிகளும் ராஜீவ் பிரச்சாரத்தை முழுமூச்சுடன் தொடங்கி நடத்துகின்றனர். காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போவதா என்ற ஆற்றாமையில், எப்படியும் ராஜீவைத் தன் பிடிக்குள் தக்க வைக்க வேண்டும் என்று சோவியத் பிரச்சார பீரங்கிகளும் ராஜீவின் புகழையே முழங்குகின்றன.

இதில் முதல் பிரிவைச் சேர்ந்தவர் அருண் ஷோரி. அதனால்தான் இவர் எழுதுகிறார், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்குமிடையே மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறதாம். கடந்த காலத்தைப் பற்றிய கூச்சலுக்குப் பதிலாக புதிய பொருளாதாரக் கொள்கை எந்தத் திசையில் இருக்க வேண்டும் என்பது பற்றிய விவாதம் நடக்கிறதாம். புதிய பொருளாதாரக் கொள்கைகள் சிலரால் ஏற்க முடியாதவையாக இருக்குமாம். ஆனால் அப்படிப் பட்டவர்கள் மிகச் சிலர்தானாம். மற்றவர்கள் ராஜீவைப் பாராட்டிவிட்டால் நம்மை தரக்குறைவாக எடைபோட்டு விடமாட்டார்களா என்ற அச்சத்தில்தான் பாராட்டாமல் இருக்கின்றனராம்.

ராஜீவின் புதிய பொருளாதாரக் கொள்கையின் சாராம்சம் என்ன? உற்பத்தியை, சந்தையை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்து விடுவது; இந்தியாவின் கனிவளங்களையும் உழைப்பையும் மலிவான விலைக்கு ஏலம் போடுவது. இந்தியாவை 21ம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்வதற்கு ராஜீவ் காட்டும் பாதை இதுதான்! இதைத்தான் மனம் திறந்து பாராட்டுகிறார் ஷோரி.

ஏற்கனவே அமலில் இருந்த கலப்புப் பொருளாதாரக் கொள்கையின் விளைவாக பொதுத் துறையில் சோவியத் ஆதிக்கமும், தனியார் துறையில் மேலை ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கமும் நிலவுகிறது. ராஜீவின் புதிய பிரகடனங்கள் பொதுத் துறையைப் பின்னுக்குத் தள்ளி, தனியார் துறைக்கு முன்னுரிமை தருகின்றன. 'சுதந்திரக் காற்றை சுவாசித்த ரீகன் ராஜீவுக்கு ஒரு சபாஷ் போட்டார். அமெரிக்கப் பத்திரிக்கைகள் பாராட்டின. தற்போது போது ஷோரி பாராட்டுகிறார். புரிகிறதா?

இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை வழியில் “சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தால் இ. காங்கிரஸின் பழைய பெருச்சாளிகள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், தொழிற்சங்கவாதிகள் போன்ற பலரும் கூட்டாகச் சேர்ந்து சோசலிசத்தைத் திரும்பக் கொண்டு வருகிறோம் என்று முனையக்கூடும்” என்று ராஜீவுக்கு வரக்கூடிய தடைகள் பற்றி எச்சரிக்கிறார் ஷோரி.

இவர் குறிப்பிடும் இந்த நபர்கள் யார் தெரிகிறதா? காங்கிரஸுக்குள்ளும், அதிகாரவர்க்கத்திலும், தரகு முதலாளிகள் மத்தியிலும் உள்ள ரஷிய எடுபிடிகளைதான். எவ்வளவு ஆழமான 'தேச'ப்பற்று? ரஷிய ஆதரவுக் கும்பலின் கையிலிருந்து அதிகாரத்தைப் பிடுங்கி அமெரிக்க ஆதரவுக்கும்பல் கையில் ஒப்படைக்க வேண்டும் என்பதில் எவ்வளவு கரிசனம்?

அஸ்ஸாம் பஞ்சாப் பிரச்சினைகளை ராஜீவ் கையாண்ட முறை பற்றி அருண் ஷோரி கோஷ்டி சொல்வது இதுதான்: “சீக்கிய மத வெறியர்களை ஊட்டி வளர்த்ததும், அஸ்ஸாமில் படுகொலைகளை நடத்தியதும் இந்திராதான். கடந்த தேர்தலின்போது சீக்கியர்கள் அனைவருமே தேசத்துரோகிகள் என்ற பாணியில் ராஜீவ் பேசியது உண்மைதான். டெல்லியில் சீக்கியர்கள் திட்டமிட்டே படுகொலை செய்யப்பட்டனர் என்பதும் உண்மைதான். ஆனால் அதையெல்லாம் மறந்து விடுங்கள். ராஜீவின் சமரச ஒப்பந்தத்தை மட்டும் பாருங்கள். தாயாரின் தவறுக்கு ராஜீவ் பிராயச்சித்தம் செய்து விட்டார்.”

இவர்களுடைய பித்தலாட்டத்தைப் பாருங்கள்! புற்று நோய்க்கு பூச்சு மருந்து போட்டுவிட்டு, புற்றுநோய் என்பதை மறந்து விடுங்கள். இப்போது வலி குறைந்திருக்கிறதா இல்லையா என்று கேட்கிறார்கள். மதவெறியின் அடிப்படைகள் இரு தரப்பிலும் இன்னமும் நீடிக்கும்போது பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகச் சொல்வது மோசடியல்லவா?

அஸ்ஸாம் மக்களின் நியாயமான போராட்டம் ரத்தவெள்ளத்தில் ஆழ்த்தப்பட்டது. அஸ்ஸாம் மக்களை திட்டமிட்டே மதரீதியாகப் பிளந்து மோதவிட்டார் இந்திரா. அந்தப் பிளவுகளில் முஸ்லீமகளுக்கெதிராக ஆர். எஸ். எஸ்-ஆன் கொடியைக் கையிலேந்தி களத்தில் நின்றார் அருண் ஷோரி. இவரது 'மதசார்பின்மை' அன்றே அம்பலமாகி விட்டது.

பஞ்சாப், அஸ்ஸாம் இரு பிரச்சினைகளிலுமே மிருகத்தனமான அடக்குமுறை என்பது முதல் உபாயமாகக் கையாளப்பட்டுவிட்டது. எஞ்சியிருப்பது சமரசம் என்ற உபாயம் தான். இதுதான் இப்போது கையாளப்பட்டிருப்பது. இந்த ஒப்பந்தம் பிரச்சினைகளுக்குத் தீர்வு அல்ல; நிலவுவது ஒரு தற்காலிக அமைதி மட்டுமே.



ராஜீவ் சொல்வதற்கெல்லாம் இந்திரா காங்கிரசார் ஆமாம் சாமி போடுவதாக 'துக்ளக்' கருத்துப்படம் போட்டிருக்கிறது. அடுத்த இதழிலேயே ராஜீவ் சொல்வதற்கெல்லாம் ஆமாம்சாமி போடத் துவங்கிவிட்டார்கள் அருண் ஷோரியும், 'சோ'வும்.

ராஜீவ், இந்திராவைப் போலில்லை; முற்றிலும் வேறுபட்டவர் என்று அடிக்கடி வலியுறுத்துகிறது இந்தக் கோஷ்டி. ஏற்கனவே பாசிச இந்திரா ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் எடுபிடியாக இருந்தார். தற்போது ராஜீவ் பொருளாதார ரீதியாக அமெரிக்க சார்பு நிலைப்பாடு எடுப்பது இவர்களுக்குச் சொல்லொணா மகிழ்ச்சியை அளிக்கிறது. அதனால்தான் அடிக்கடி ராஜீவுக்கு ஜனநாயகவாதி என்று பட்டம் சூட்டி மகிழ்கிறார்கள்.

எங்கே பழைய அரசு எந்திரத்திலுள்ள ரசிய ஆதரவுக் கும்பல் ராஜீவின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்டுவிடுமோ என்று அஞ்சி "அதிகார வர்க்கம் உங்களுக்கு ஒத்துழைக்க மறுக்கலாம். ஜாக்கிரதையாக இருங்கள்" என்று ராஜீவை எச்சரிக்கிறார் ஷோரி.

இந்திரா கும்பலைப்போல, ராஜீவைச் சுற்றியும் உருவாகியுள்ள கும்பலைப் பார்த்துக் கலக்கமடைந்து கும்பல் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அறிவுரை வழங்குகிறார்.

லோக்பால் மசோதா சுயநலத் தன்மை படைத்ததுதான். என்றாலும் ஒரு ஆரம்பமாவது செய்யப்பட்டிருக்கிறதே என்று புகழ்கிறார். பொதுவாழ்வில் லஞ்சம், ஊழலை ஒழித்துக்கட்ட மெத்தப்படித்த மேதாவிகள் அரசியலுக்கு வர வேண்டும் என்று அறைகூவல் விடுகிறார். ஆனால் இவரது ஆதர்ச பிரதமரின் ஓராண்டு ஆட்சிக் காலத்தில் அப்பட்டமான ஊழல் பெருச்சாளிகளும், கிரிமினல்களும்தான் ஆட்சிப் பீடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

காங்கிரஸ் சார்பில் கடந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் பீகாரில் 30 பேரும், உ. பியில் 12 பேரும் இன்னும் இராஜஸ்தான், ஒரிஸ்ஸா மாநிலங்களில் பலரும் கிரிமினல் குற்றச்சாட்டின் கீழ் உள்ளவர்கள். கேரளா, ஒரிஸ்ஸா முதல்வர்கள் மீது கோடிக்கணக்கான ரூபாய்க்கு ஊழல் குற்றச்சாட்டுகள் ஏற்கனவே உள்ளன. 'அவசர நிலை புகழ்' பன்சிலால் போன்ற கேடிகளுக்கு மறுவாழ்வு தரப்பட்டுள்ளது. இன்னும் ஏராளமாக அடுக்கிக்கொண்டே போகலாம். இதையெல்லாம் லோக்பால் விசாரித்து நீதி வழங்குமா?

இதையெல்லாம் அருண்ஷோரி யோசிக்கத் தயாராக இல்லை. எப்படியோ எதிர்பார்த்ததை விட அதிகமாகச் செய்திருக்கிறார் ராஜீவ்காந்தி என்று புகழ் பாடுகிறார். இப்போது பதட்டநிலை தவிர்க்கப்பட்டு வருகிறதாம். ஜனநாயக வழிமுறைகளில் மக்களுக்கு நம்பிக்கை அதிகமாகி வருகிறதாம். நக்சலைட்டுகளை மக்கள் புறக்கணிக்கத் தொடங்கி விட்டனராம்.

இவையெல்லாம் அருண்ஷோரியின் உள்ளார்ந்த விருப்பங்களாக இருக்கலாம். ஆனால் உண்மை நிலை அப்படி இல்லையே! இந்த போலி ஜனநாயக அமைப்பின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர் என்பதற்கான உதாரணங்கள்தான் திரும்பிய இடமெல்லாம் தெரிகின்றன. இதை நாம் சொல்லவில்லை. அருண் ஷோரி தலையில் தூக்கி வைத்து ஆடுகிறாரே பாசிஸ்ட் ராஜீவ், அவரே ஒப்புக்கொள்கிறார். இப்படி விழுந்துவிட்ட நம்பிக்கையைத் தூக்கி நிறுத்தத்தான் வானொலி, வானொளி போன்ற அரசின் அனைத்து பிரச்சாரக் கருவிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. லோக்பால் போன்ற பல புதிய கண் துடைப்பு வேலைகள் உருவாகியுள்ளன.

மக்களைப் புரட்சிக்கு அணி திரட்டும் நக்சல்பாரி புரட்சியாளர்களையும், சீக்கிய மதவெறியர்களையும் ஒரே தட்டில் வைத்து வன்முறையாளர்கள் என்று பட்டம் கட்டுகிறார் அருண்ஷோரி. கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் மீது அவருக்கு உள்ள அடாத வெறுப்புத்தான் அவரது எழுத்தில் தெரிகிறது.

ஆந்திரம், பீகார், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் புரட்சிகர அமைப்புகளின் கீழ் ஆயிரக்கணக்கில் மக்கள் அணி திரண்டு வருவது கண்கூடு. புரட்சியைக்கண்டு அஞ்சித்தான் பீகாரிலும், ஆந்திரத்திலும் விசேஷ போலீஸ்படை குவிக்கப்பட்டிருக்கிறது. புரட்சியாளர்களையும், ஏழை விவசாயிகளையும் வேட்டையாட பல கோடி ரூபாய்களை வாரியிறைக்கிறது பாசிச ராஜீவின் அரசு.

இறுதியாக, தான் சொல்ல வந்த விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறார் ஷோரி. "ஊர்வலங்கள், பந்த்கள் போன்றவற்றிற்கு இது நேரமல்ல. பாராளுமன்ற ஜனநாயகத்தின் அங்கங்களை வலுப்படுத்துவதே நம் முழு வேலையாக இருக்க வேண்டும்..." என்று ஒரு தன்னிலை விளக்கம் கொடுத்துவிட்டு, இந்திய வரலாற்றுக் களங்கமான காந்தியை மேற்கோள் காட்டி "தெய்வீக சட்டங்களுக்குப் பணிந்து போகிறவனுக்கு ஜனநாயக உணர்வு இயல்பாக வருகிறது" என்று ஜனநாயக உணர்வுக்குப் புது விளக்கம் கொடுக்கிறார்.

அருண்ஷோரி, சோ கும்பலின் அடிவருடித்தனம் பற்றி எழுதி மாளாது. இவர்கள் ஒரு முடிவுக்கு வந்து அதனடிப்படையில் பிரச்சாரம் செய்பவர்கள். அமெரிக்கப் பத்திரிக்கையாளர் ஜாக் ஆண்டர்சனுடன் இணைந்து 'ராஜிவின் இந்தியா' என்ற செய்திப் படம் ஒன்றைத் தயாரிக்கிறார் அருண்ஷோரி.

இவர்கள் சுயசார்பு பற்றிப் பேசுவார்கள். இத்தாலியக் கம்பெனியான ஸ்னாம் பெகாட்டியுடன் கோடிக்கணக்கான ரூபாய்க்கு ராஜீவ் ஒப்பந்தம் போடுவதைப் பற்றிக் கண்டு கொள்ள மாட்டார்கள். ஜனநாயக உரிமை பற்றிப் பேசுவார்கள். ஆந்திராவிலும், பீகாரிலும் நடக்கும் போலீஸ் வெறியாட்டம் பற்றி மூச்சு விட மாட்டார்கள். தேசபக்தி பற்றிப் பேசுவார்கள். போபாலின் குற்றவாளிகள் யார் எனச் சொல்ல மாட்டார்கள்.

ஆம்! இவர்கள் அறிவு ஜீவிகள். டாலர்களுக்காகவும், சுகபோகங்களுக்காகவும் சுயமரியாதையையும், மனச்சாட்சியையும் அடக்கு வைத்த அற்பப் பிறவிகள். வறட்சியும், வெள்ளமும், பஞ்சமும், கதவடைப்பும் விலைவாசி ஏற்றமும், துப்பாக்கிச் சூடும் இவர்களைப் பாதிப்பதில்லை. பாதிக்கப் போவதுமில்லை. கலர் டெலிவிஷனும், கம்ப்யூட்டர்களும்தான் இவர்கள் பார்வையில் முன்னேற்றம்.

உண்மைதான்! பாசிஸ்ட் ராஜீவ் "இவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே செய்திருக்கிறார்." இதையேதான் அமெரிக்க ஏகாதிபத்திய நிறுவனங்களின் முதலாளிகளும் சொல்கிறார்கள்.

* ● அஜீத்

எங்கும், எதிலும் நிறைவு! நிறைவை நோக்கி முன்னேற்றம்! முன்னேற்றத்தை நோக்கிய முதலடி! இவ்வாறு மின்னல் வேகத்தில் காரியங்கள் நடைபெறுகிறது இருந்தும் அவ்வப்போது தடைகள் குறுக்கே வந்து விழுந்துவிடுகிறது. எதிர்ப்பை சமாளித்து ஏறுநடை போட்டு வருகிறார்கள். மக்களை அரவணைக்க ஒரு கையும் மத்திய அரசுடன் மோத மறுகையும் பயன்படுத்துகிறார்கள். பார்ப்பவர்களுக்கே மனது சங்கடமாகி விடுகிறது. எட்டாண்டுகள் இப்படி உருண்டோடி விடுகிறது.

மேற்கு வங்க 'மார்க்சிஸ்ட்' மந்திரிகள் முதல் தமிழ்நாட்டுத் தலைவர்கள் வரை இப்படித்தான் சொல்கிறார்கள். 'மார்க்சிஸ்ட்' அரசாங்க விளம்பரங்கள் புத்தகங்கள் முதல் உள்ளூர் செம்மலர், தீக்கதிர் வரை இந்தக் கருத்தில்தான் 'அறிவார்ந்த' கட்டுரைகளைத் தாங்கி வருகிறது.

எட்டாண்டு சாதனைகள் என்று 'சலுகைகள்' சீர்திருத்தங்களின் பட்டியல் வேறு வெளியிட்டிருக்கிறார்கள்.

சட்டமன்ற கண்ணியம், நிலச்சீர்திருத்தம், விவசாயம், கிராமப்புற வளர்ச்சி, தொழிற்துறை, சமூகநலம், சிறைவசதி இவ்வாறு நாற்பத்தியொரு துறைகளில் அவர்களுடைய சாதனை நீளுகிறது.

'மார்க்சிஸ்ட்டு'களின் சாதனைகளின் கனபரிமாணங்களை நாம் பார்க்கும் முன் மற்ற மாநில அரசாங்கங்கள் எவ்வாறான சாதனைகளைச் சாதித்துள்ளன என்று பார்ப்போம்.

குறைந்த விலையில் உணவுப் பண்டங்கள், வேட்டி, சேலைகளை ஏழை விவசாயிகளுக்கு வழங்குகிறார் கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே.

கிலோ அரிசி ரூபாய் 2க்கு ஏழைகளுக்கு போடுகிறார் ஆந்திராவை ஆளும தெலுங்கு தேச முதலமைச்சர் என. டி. ராமராவ்.

16 வயது வரையுள்ள பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழங்குகிறார் தமிழ்நாட்டு அ. தி. மு. க. முதலமைச்சர் எம். ஜி. ஆர்.

ஏன்! ராஜீவே கூட, உணவுப் பொருட்களுக்கும், விவசாய உள்ளீட்டுப் பொருட்களுக்கும் பல கோடி ரூபாய் மானியம் தருகிறார்.

இவ்வாறு ஆட்சிக்கு யார் வந்தாலும் தங்கள் பதவி சுகத்திற்கு செய்வதுதான் இந்த சாதனைகள்.

அனைத்து முதலாளித்துவ காரியவாத கட்சிகளும், ஆளும் வர்க்கக் கட்சிகளும் சலுகைகள் கொடுத்து பேனை பெருமாள் ஆக்குகிறார்கள். 'ஓவென' காது பிளக்கும் பிரச்சாரம் செய்கிறார்கள். கண்ணைக் குருடாக்கும் விளம்பரம் எடுக்கிறார்கள். மின்சார அதிர்ச்சிக்கு உள்ளானவர் போன்று மக்களை பீதியுற வைக்கின்றனர். அற்ப சலுகைகளைக் ஊதி பெருக்குகின்றனர். இதையெல்லாம் பார்த்து 'பேய் அறைந்தவர்' மாதிரி மக்கள் இருப்பர். இந்த சமயத்தில் தேர்தல் வரும். ஓட்டு கட்சிகள் அப்போது ஓட்டு கோவணத்தையும் உருவமுயல்வர். இதைத்தான் மேற்கு வங்க மந்திரிகள் செய்கிறார்கள். 'மார்க்சிஸ்ட்' முகமூடி அணிந்தவர்கள். இன்று தாங்களே அதைக் கழற்றி எறிந்து நிற்கிறார்கள்.




இதன் மூலம், பன்னாட்டுப் பகாசுரக் கம்பெனி முதலாளிகளுக்கு சிவப்பு கம்பளம் விரிக்கிறார்கள். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தரகு முதலாளிகளுக்குக் கங்காணி வேலை செய்கிறார்கள். பண்ணை பிரபுக்கள் தொடர்ந்து உயிர்வாழ பேருதவி புரிகிறார்கள்.

ஆம்! மக்கள் விரோத தேச விரோத கூட்டத்தை மறைத்துவரும் பாராளுமன்ற சட்ட மன்றங்களின் அருகதைகளைத் தோலுரித்துக் காட்டவில்லை. மக்கள் அனுபவத் மூலம் உணர்ந்து வரும் ஆளும் வர்க்கத்தின் கோர முகத்தையும் சுந்தர வதனம் என்று சொல்லுகிறார்கள். தங்கள் பதவி சுகத்திற்கு பாராளுமன்ற ஜனநாயகத்தை நாளும் காத்து வருகிறார்கள்.

இதற்காக எதுவும் செய்வததெனத் தீர்மானித்து விட்டனர். அனைத்துக் காரியவாத சுயநலக் கட்சியின் நிலைக்குத் தங்களைத் தகவமைத்துக் கொண்டனர்

ஓட்டு வாங்குவதற்கு 'மார்க்சிஸ்டு'கள் மக்களிடம் 'தந்த வாக்குறுதிகளை மறைக்கிறார்கள். தங்களின் அரசியல் தீர்மானத்தில், மார்க்சிஸ்டுகள் சொல்கிறார்கள்.

"முதலாளித்துவ நுகத்தடியின் கீழ், கூலியடிமைத்தளையின் கீழ் நடைபெறும் தேர்தல்களில் பாட்டாளி வர்க்கம் முதலில் பெரும்பான்மை பெற்று, பிறகு அதிகாரத்தை வென்றெடுக்கவேண்டும் என்றுஅயோக்கியர்கள் மட்டுமே சிந்திக்க முடியும். பழைய அமைப்பில், பழைய அதிகாரத்தில் நடத்தப்படும் தேர்தல்கள் வர்க்கப் போராட்டத்துக்கும் புரட்சிக்கும் உதவியாக இருக்கிறது என்று கூறுவது அதீத முட்டாளதனமும் எதுவேலையுமாகும்."

—லெனின் ("திரிபு வாதத்திற்எதிராக.")

உலக பேங்குடன் சமரசம், சர்வதேசக் கம்பெனிகளுக்கு வரவேற்பு, நாட்டின் பொருளாதாரத்தைப் பிறரைச் சார்ந்திருக்கச் செய்தல் ஆகிய கொள்கைகளுக்கெதிராக விடாப்பிடியான போராட்டங்கள். அந்நிய ஏகபோகக் கம்பெனிகளை தேச உடைமையாக்க வேண்டும் என்றும், அந்நிய நாட்டுக் கடன்களைத் திருப்பித் தருவதை உடனடியாக ஒத்திப்போட வேண்டுமென்றும் இடதுசாரி சக்திகள் கோருகின்றன. மேலும் நம் நாட்டிற்குள் அந்நிய நாட்டு மூலதனமும், உலக பேங்கும் ஊடுருவுவதற்கு வசதியாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை எல்லாம் எதிர்கின்றன. (பக்கம் 67. ஆண்டு 78.)

மேலும் சொல்கிறார்கள்:

'புரட்சிகரமான அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தொழிலாளி வர்க்கத்தையும் இதர உழைப்பாளி மக்கள் அனைவரையும் தயார் நிலையில் நிறுத்த நாடாளுமன்ற நடவடிக்கையைப் பயன்படுத்தும்.'

—கம்யூனிஸ்டு இயக்கமும், நாடாளுமன்ற அரசியலும், இ. எம். எஸ்.

இதற்காக ஓட்டுப் பாதையைத் தேர்ந்தெடுத்தவர்கள் 'மார்க்சிஸ்டு'கள். ஆனால் அவர்கள் நாளும் செய்துவரும் 'போராட்ட' நடவடிக்கைகளை அவர்கள் வாயாலேயே கேட்போம் வாருங்கள்.

இடது முன்னணி 'மார்க்சிஸ்ட்' தலைவர் சரோஜ் முகர்ஜி கூறுகிறார்:

"இந்திரா காந்தி ஒரு ஜனநாயகவாதி. அவர் 'மார்க்சிஸ்ட்' கட்சியை ஒரு போதும் தாக்கியதே இல்லை. எப்போதும் முதல்வர் ஜோதி பாசுவை அனுசரித்தே போயுள்ளார்.

— தி டெலிகிராப் 30-4-85.

எவ்வளவு தைரியத்துடன் சொல்கிறார். மந்திரி பதவியில் இருப்பதால் மக்கள் ஒன்றும் பண்ண முடியாது என்று நினைக்கிறார் போலும்.

விவசாயத் துறையை 'வளர்ப்பது' பற்றி சொல்கிறார்கள்:

"......விவசாய வளர்ச்சி பற்றி நாம் பேசினால் கிராமப்புறத்துக்கு நிதி பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும்,"

— ஜோதி பாசு, 26-6-85,

(இந்துஸ்தான் லிவர் பேக்டரியை திறந்து வைத்து பேசியது.)

ஏனெனில் பண்ணை பிரபுக்கள் கூட்டம்தான் அனைத்தையும் அனுபவிக்கிறதாம். ஏழைகளுக்குப் போய் சேருவதில்லையாம். இவர்கள்தான், நிலத்திலே சீர்திருத்தம் செய்வதாகச் சொன்னவர்கள். அரசை வைத்துப் பண்ணைப் பிரபுக்களை அடக்க முடியவில்லை என்று வாக்குமூலம் தருகிறார்கள்.

தொழிற் துறையிலே, பன்னாட்டுக் கம்பெனிகளை எதிர்ப்பதாக சொன்னவர்கள் நிஜ வாழ்க்கையில் நடந்து கொள்வதைப் பாருங்கள்.

'...நான் ஒரு கம்யூனிட்டுதான். இருந்தாலும் மேற்கு வங்கத்திலே மூலதனம் போட்டு, தொழில் தொடங்க பன்னாட்டுக் கம்பெனிகளோ, பெரிய தொழில் குடும்பங்களோ முன்வரும் போது எதிர்ப்பு தெரிவிக்க நான் ஒன்றும் முட்டாள் அல்ல.'

...மேற்படி விழாவில் ஜோதிபாசு
26-6-85.

ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைக்கு ஓட்டுப் போட்ட மக்களைத்தான் முட்டாள்கள் என்று கூறுகிறார்.

தொழிலாளர் நலம் பற்றி கூறும் போது,

'தகராறுகளைப் பரஸ்பரம் தீர்த்துக் கொள்வதில் தனது அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.'

— ஜோதிபாசு, 14-8-85
தி டெலி கிராப்.

இவர் பேச்சை மீறி கல்கத்தா மெட்டல் பாக்ஸ் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது அதை ஜோதிபாசு கண்டித்தார்.

'தொழிற்சங்க உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் சி. ஐ. டி. யு. பாதுகாக்க வேண்டும்' என உத்தர விட்டார். சட்டத்தை மீறும் தொழிலாளர்களை சட்ட வரம்புக்குள் இழுத்துக் காயடிக்க வைக்கிறார்.

இவ்வாறு நாளும் உழைக்கும் மக்களுக்கெதிரான கொள்கையால் மேற்கு வங்கம் அனுபவிக்கும் வேதனைகள் பாரீர்.

மேற்கு வங்கம், ஹுக்ளி மாவட்டம் சோம்தானியிலுள்ள நார்த் புருக்சனல் ஆலை மூடப்பட்டுள்ளது. அந்த ஆலையில் 4500 தொழிலாளர்கள வேலை செய்தனர். இப்போது தெருவில் நிற்கின்றனர்—இரண்டரை ஆண்டுகளாக.



எட்டாண்டு போலிக் கம்யூனிஸ்டு ஆட்சிக்குப் பிறகும் மேற்கு வங்கத் தலைநகர் கல்கத்தாவின் நிலை இதுதான. வேறெந்த ஓட்டுக் கட்சிகள் ஆளும் நகரங்களைப் போலவே இதுவும் நீடிக்கிறது. கல்கத்தா பெருநகரில் 11 லட்சம் மக்கள் நடைபாதையில் வாழ்கின்றனர்.

பட்டினியாலும் ஊட்டச் சத்தின்மையாலும் இதுவரை தொழிலாளர் குழந்தைகள் 250 பேர் மடிந்துள்ளனர். உணவோ மருத்துவ வசதியோ இல்லாமல் நான்கு தொழிலாளர்களும் கூட மடிந்துள்ளனர் என்று மருத்துவ அதிகாரிகள் கூறுகின்றனர். தொழிலாளர்கள் பிச்சை எடுக்கின்றனர்; அல்லது சொந்த கிராமத்துக்கே ஓடுகின்றனர்.

1981 ஜுன் இறுதியில் மேற்கு வங்க சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கை 18,317 பேர். இதில் தண்டனைப் பெற்றவர்கள் 4700 பேர். மீதி உள்ளவர்கள் விசாரணை கைதிகள். நீண்ட காலமாக இவர்களுக்கு குற்றப் பத்திரிக்கை வழங்கப் படவில்லை. ஜாமீனில் விடவும் இல்லை. இன்னும் டம்டம் சிறை, மனித குல நாகர்கத்திற்கே சவால்!

* சிறையில் கடுங்குளிரிலும் துண்டு, துணியற்று நிர்வாணமாக காலம் கடத்தும் கைதிகள்.

* சிறையில் தாங்கள் என்ன குற்றத்திற்காக அடைக்கப்பட்டோம் என்பதையும் அறிந்துகொள்ள முடியாமல் 15 வருடத்தை கடத்திய கைதிகள்.

* சிறையில் தாங்கள் எவ்வாறு துன்பப்படுத்தப் படுகிறோம் என்பதையும் உணர்ந்து கொள்ள முடியாத மன நோயாளிகள்.

* சிறையில் கால் நடைகளும் தின்ன மறுக்கும், தரம் கெட்ட உணவுகள் கைதிகளுக்கு.

* சிறையின் செங்கல்லும் வாயைப் பிளந்து ரத்தம் குடிக்குமளவு அடித்து துவைக்கப்படும் நக்சல்பாரி புரட்சியாளர்கள்.

நாட்டிலேயே மேற்கு வங்கத்தில் தான் அதிகமான துப்பாக்கி சூடுகளும், சாவு எண்ணிக்கையும். ஆம்! துப்பாக்கி சூடு 248. இறந்தவர்கள் 62பேர். (லோக்சபை அறிக்கை '82.)

இவ்வாறு மொத்த மக்களையும் தன் திரிபுவாத விஷப்பல்லால் கடித்து குதறுகிறது மேற்குவங்க அரசாங்கம். 'மார்க்சிஸ்ட்டு'களின் வேதனை தாங்கமுடியாமல் மக்கள் காங்கிரஸின் புலிக் குகையில் திரும்பவும் சிக்கி வருகின்றனர்.

சென்ற தேர்தலில், 'மார்க்சிஸ்ட்டு'கள் கேரளத்தை மொத்தமாக கை நழுவி விட்டபோதும், மேற்கு வங்களத்தில்

காங்கிரஸ் அரித்து தின்ற போதும் 'மார்க்சிஸ்ட்டு'களின் தோல்விக்கு ஈ.எம்.எஸ். கூறினார்:

"காங்கிரசும், நமது கட்சியும் ஒரே முழக்கங்களை முன் வைத்து பிரச்சாரம் செய்தன. ஏனோ மக்கள் காங்கிரசைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்."

எவ்வளவு அயோக்கியத்தனம்!

1978 இல் அரசியல் தீர்மானத்தில்... 'மார்க்சிஸ்ட்டு'கள் கூறுகிறார்கள்.

"வரலாற்றில் மத்திய காலத்திற்கப்புறம், ஒரு பிரஜையை சிறையில் டைக்க, அங்கஹீனப் படுத்த, சித்திரவதை செய்ய, கொலையைக் கூடச் செய்ய, அதிகாரவர்க்கத்திற்கு இப்படியொரு முழுமையான அதிகாரம் என்றுமிருந்ததில்லை" (அவசர நிலை இந்திரா அரசாங்கத்தைப் பற்றி — பக்கம் 24.)

இவ்வாறு இந்திராவைப் பற்றி கூறி ஓட்டு வாங்கியவர்கள், இப்போது சொல்கிறார்கள்: இருவரும் ஒரே கொள்கையைத்தான் நடைமுறை அரசியலில் முன் வைத்திருந்தார்களாம். இவ்வளவும் கூறிவிட்டு, இன்னும் தைரியமாக அணிகளிடம் 'ஓட்டுப் பாதையைத் தேர்நதெடுத்தது புரட்சிக்கு மக்களைத் தயார் படுத்தவே' என்ற தங்கள் கந்தல் துணியை பதாகையாக உயர்த்திப் பிடிக்கின்றனர். சோர்வடைந்த அணிகளை நம்பிக்கையூட்ட முயல்கிறார்கள்.

ஆனால், ஓட்டு கட்சிகளின் அனைத்து சாக்கடைத்தனங்களும் சந்தி சிரிக்கின்றன. மக்கள் தாங்களாகவே உணர்ந்து ஓட்டுப் பாதையை புறக்கணிக்கின்றனர். உழைக்கும் மக்களின், தன்னெழுச்சியான எதிர்ப்பை சரியான திசை வழியில் நாம் எடுத்துச் செல்வோம்.

ஆம்! இன்று, இந்திய மண்ணில் தோன்றியுள்ள அரசியல் வெற்றிடத்தை பாட்டாளி வர்க்க கட்சியால் நிரப்புவோம்.

ஜீவனுள்ள மார்க்சியத்தை இந்திய மண்ணின் எட்டுதிக்கும் பரப்புவோம். ●

● **பச்சையப்பன்**

மீனவர்கள் : இவர்கள் வாழ்க்கைக்காக கடலுடன் மட்டும் போராடுவது இல்லை.

மீனவர்கள் : இவர்கள் விவசாயிகளைப் போலவே புறக்கணிக்கப்பட்டவர்கள்.

மீனவர்கள் : இவர்கள் தொழிலாளர்களைப் போலவே வஞ்சிக்கப்பட்டவர்கள்.

# கண்ணீர்க் கடல்

நாகப்பட்டினம் மீனவக் குப்பத்தில் தங்கி அவர்களது வாழ்வையும், தொழிலையும் பற்றி ஆய்ந்தறிந்து எழுதப்பட்ட கட்டுரை.

"வாங்க சார் வாங்க, வாங்கம்மா வாங்க! மடவா மீன், கொடுவா மீன், செங்கொடுவா மீன், திருக்கை மீன், வாலை மீன், கோளா மீன் கிலோ 10 ரூபாய், 15 ரூபாய்" என்று மீன் வியாபாரிகளின் குரல் நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. உயர்வகை மீன்களை பணக்காரர்களும், பிற சாதாரண மீன்களை உழைக்கும் மக்களும் வாங்கிச் செல்கிறார்கள்.

ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் அரை நிர்வாண நடனத்தை ரசித்துக் கொண்டே மதுவுடன் சேர்ந்து உயர் வகை மீன்களை உள்ளே தள்ளுகிறார்கள் பெரும் முதலாளிகளும் அதிகாரிகளும். பம்பாய், டெல்லி போன்ற பெரு நகரங்களிலும் மேல் நாடுகளிலும் பளபளக்கும் டினகளில் பதனம் செய்யப்பட்ட மீன்கள் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

எங்கோ கடலில் கிடந்த மீன்களை நம் சாப்பாட்டு மேசைக்குக் கொண்டுவந்து சேர்த்தது யார் என்று ஆளும் வர்க்கங்கள் சிந்திப்பதில்லை. ஆனால் உழைப்பாளி மக்களாகிய நாம் அவ்வாறு அக்கறையற்று இருக்க முடியாது.

மீனவர்கள் — இவர்களைப்பற்றி அரசாங்கத்தின் வானொலி இரு காரணங்களுக்காகப் பேசுகிறது. கடலில் மீனபிடிக்கச் சென்று காணாமல்போன மீனவர்களுக்காக ஒரு முறை; வானிலை எச்சரிக்கையின் போது இன்னொரு முறை. இவையில்லாமல் ஒவ்வொரு புயலுக்கும் கடலுக்குப் பலியான மீனவர் குடும்பங்கள் பற்றியும் ஆண்டு தவறாமல் தெரிந்து கொள்கிறோம். புயல், மழையின்போது மட்டுமல்ல; ஒவ்வொரு நாளுமே மீனவர்கள் கடலுக்குச் சென்றால் திரும்பி வருவது கேள்விக் குறிதான்.

கடலில் மீன்பிடிப்பது விளையாட்டல்ல; அல்லது திரைப்படங்களில் காண்பிக்கப்படுவதுபோல உல்லாசப் பொழுது போக்குமல்ல. அன்றாடம் காலை 3 மணிக்கு எலும்பைத் துளைக்கும் சில்லென்ற கடற்காற்றில் 20 அடி நீளம், 3 அடி அகலமுள்ள கட்டுமரப் படகைக் கரையிலிருந்து மூச்சைப் பிடித்துக்கொண்டு கடலுக்குள் தள்ளிச் செல்கிறார்கள் மீனவர்கள். கட்டுமரத்தை ஓட்டிச் செல்லவும், மீன் பிடிக்கவுமாக மொத்தம் 5 பேர் செல்கின்றனர். போகும்போது கையில் கட்டுச் சோறையும் எடுத்துச் செல்கிறார்கள். அந்த இருளில் ஆர்ப்பரிக்கும் கடலில் நெடுந்தூரம் உள்ளே சென்று நடுக்கடலில் வலையை வீசுகிறார்கள்.

வீசிய வலையை ஏறத்தாழ 15 நிமிடம் கழித்து இழுக்கிறார்கள். இது ஏதோ கிணற்றுத் தண்ணீரை வாளியால் இழுப்பதுபோலச் சுலபமல்ல. அலையில் தத்தளிக்கும் படகின்மேல் நின்று முழு பலத்தையும் செலுத்தி 4 பேர் வலையை இழுக்கிறார்கள்.

"நீங்கள் ஏன் மீன்பிடிக்கக் கடலுக்குப் போவதில்லை?" என்று மீனவப் பெண்களிடம் கேட்டேன். "கடல் கன்னி எங்களுக்குத் தெய்வம். நாங்கள் கடலுக்குப் போயிருக்கும்போது தீட்டுப்பட்டால் கோபித்துக் கொள்வாள்" என்றனர். "கடல் கன்னியும் பெண்தானே! அவள் தீட்டுப்பட்டால் என்ன செய்வது?" என்று திருப்பிக் கேட்டேன். வெகுளித்தனமாக கலகலவென்று அவர்கள் சிரித்தார்கள்.

இழுத்த வலையை கட்டுமரத்தின் மேல் வைக்கிறார்கள். வலையில் சிக்குபவை எல்லாமே மீன்கள் மட்டுமல்ல. நண்டு முதல் பாசி வகைகள் வரை அனைத்தும் சேர்ந்தே வருகின்றன. தேவையற்ற உயிரினங்களையும், மீன் குஞ்சுகளையும் மீண்டும் கடலில் எடுத்து எறிந்து விடுகின்றனர்—சிறு மீன்கள் நாளை வளர்ந்து பெரிதாகும் என்ற நம்பிக்கையில்.

காற்று ஒ்ரே சீராக இருந்தால் தான் மீன்பிடிப்பதே சாத்தியம். காற்றின் அழுத்தம் அதிகமானால் கட்டுமரம் ஒரே திசையில் செல்லுமாறு கட்டுப்படுத்த இயலாது. ஆளுயரத்திற்கும் மேலே எழும்பும் அலைகள் பல சமயங்களில் கட்டுமரத்தையே கவிழ்த்துவிடும். படகு கவிழ்ந்தவுடன் நீந்திப் போராடிக் கட்டுமரத்தைப் பிடித்துக் கொள்கின்றனர். சில சமயங்களில் நீண்ட நேரம் நீந்திக் கைகள் சோர்ந்து கடலுக்குப் பலியாவதும் உண்டு. நடுக்கடலில் அப்படித் தவிக்கும் மீனவர்களைக் காப்பாற்ற ஒரு நாதியும் இருப்பதில்லை.

விசைப் படகு மீனவர்கள் கட்டுமரக்காரர்களை விடக் கடலில் அதிக தூரம் சென்று மீன் பிடிக்கிறார்கள். ஆபத்திற்கு இவர்களும் விதிவிலக்கல்ல;' கட்டுமர மீனவர்கள் பிடிக்கும் மீனைவிட 5 மடங்கு மீனை இவர்கள் பிடித்து வருகிறார்கள்.

காலை 3 மணிக்குப் புறப்பட்டு இரவு 12 மணிக்கும் சில சமயங்களில் மறுநாள் காலையிலும் கரை சேர்கிறார்கள் மீனவர்கள். கடலில் சென்ற மீனவன் கரை சேர்ந்தால்தான் காத்திருக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் கஞ்சி உண்டு. கடலுக்குச் சென்ற கணவன் கரை திரும்பும்வரை கவலை தோய்ந்த முகத்துடன் கண்களைக் கடல் மேல் வைத்துக் காத்துக் கிடப்பாள் மனைவி. ஒவ்வொரு நாளும் பிழைப்புக்காகக் கடலில் சென்று வருவது — களத்திற்குப் போருக்குச் சென்று வருவதைப் போலத்தான். திரும்ப வந்தால்தான் நிச்சயம். கணவனின் உயிரைக் கடல் குடித்து விட்டாலோ அவனது பிணத்தைக்கூட மனைவி பார்க்க இயலாது. இதுதான் மீனவர்களின் வாழ்க்கை.

இங்கே வாழ்க்கைக்காக மீனவர்கள் கடலுடன் மட்டும் போராடுவதில்லை. இவர்களின் உயிரைப் பலிகொள்வது கடல் மட்டுமல்ல. உலகத்திற்குத் தெரியாமல் நடுநிசியில் உறுமும் கடலின் ஓசையினூடே பல கொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கொலைகளை விசாரிக்கச் சாட்சி கிடையாது; பிரேத பரிசோதனை கிடையாது. ஆம்! கால் வயிற்றுக் கஞ்சிக்கான போராட்டத்தில் ஏழைக் கட்டுமர மீனவர்கள் விசைப் படகு முதலாளிகளின் கைக்கூலிகளால் கொல்லப் படுகிறார்கள். இத்தகைய கொலைகள்

…ளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் …ருக்கின்றன.

மீனவர்களின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் கேள்விக் குறியாக்கியுள்ள பிரச்சினைகளில் முதன்மையானது இந்தப் பிரச்சினை. மீன் பிடிக்கும் தொழிலில் டிராலர்கள் (கடலின் வெகு ஆழத்திற்கு வலைகளை வீசி மீன் பிடிக்கக்கூடிய விசைப் படகுகள்) அறிமுகப்படுத்தப் பட்ட பின்னால் கட்டுமர மீனவர்களின் வாழ்க்கை இருண்டு வருகிறது. இரண்டாவது உலகப் போரின்போது கடல் கண்ணி வெடிகளை அகழ்ந்து எடுக்கத்தான் முதன்முதலில் இந்த டிராலிங் எனும் ஆழ்கடல் வலைவீச்சு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறை 1952இல் கேரளக் கடற் பகுதிகளில் நார்வேயின் கூட்டுடன் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப் பட்டது. இதில் கூர்மையாக கவனிக்கப்படவேண்டிய செய்தி என்னவென்றால் இந்தியாவில் இம்முறை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பே நார்வேயிலும் இன்னும் பல ஐரோப்பிய நாடுகளிலும் இது தடை செய்யப் பட்டுவிட்டது. இந்திய அரசோ முழு மூச்சாக இம்முறையை இங்கே அமல் நடத்துகிறது.

ஏற்றுமதிக்காகவும் அந்நியச் செலாவணிக்காகவும் சொந்த நாட்டு மக்களின் கோவணத்தையும் உருவத் தயாராக உள்ள அரசு வளம் கொழிக்கும் கடலைச் சும்மாவிடுமா? ஏறத்தாழ கடல்வளம் அனைத்துமே ஏற்றுமதிக்கு என்ற நிலை உருவாகியுள்ளது. பெரிய பெரிய ஏகாதிபத்திய நிறுவனங்களும், தரகு முதலாளித்துவக் கம்பெனிகளும் போட்டி போட்டுக் கொண்டு கடல்வளங்களை சலிக்கத் தொடங்கிவிட்டன.

**மீனவர் எதிரி 'டிராலிங்'!**

'டிராலிங்' முறை மீன் பிடிப்பது எவ்வளவு கேடு விளைவிக்கக்கூடியது என்பது உலக அளவில் நிரூபிக்கப் பட்டு விட்டது. வாயளவில் இதை நாங்கள் ஆதரிக்க மாட்டோம் என்று பேசிவரும் இந்திய அரசு அதற்கு நேரெதிராகச் செயல்படுகிறது. 25 மீன் பிடி விசைப் படகுகள் இந்தியக் கப்பல்கட்டும் துறைகளில் புதிதாகக் கட்டப்படவிருக்கின்றன. இவை கட்டப்பட்டவுடன் கடல் மீன் வளத் துறை கன வேகமாக முன்னேறப் போகிறது என்று அறிக்கைவிடுகிறது அரசு. டிராலர்களுக்கு 33 சதவீதம் மானியம் கொடுக்கவும் திட்டமிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 7 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன் ஏற்றுமதியால் கிடைக்கும் அந்நியச் செலாவணியை சம்பாதித்துக் கொடுக்கும் மீனவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே செத்து மடியும் போது நவீனமயமாக்கல் மூலம் மீன் வளத்துறையை முன்னேற்றுகிறதாம், அரசு.

அதி நவீன எந்திரப் படகுகள் கடலின் அடியாழத்திற்கே சொல்லத் தக்க வலைகளை வீசிப் பெரிய மீன்களில் தொடங்கி மீன் குஞ்சுகள், முட்டைகள் உட்பட அனைத்தையும் அரித்துக் கொண்டு வருகின்றன. மீன் குஞ்சுகள் உள்நாட்டுச் சந்தைக்குத் தள்ளி விடப்படுகின்றன. எறால் மற்றும் பிற உயர்ரக மீன்கள் ஏற்றுமதிக்கு ஒதுக்கப்படுகின்றன. மீன் குஞ்சுகள் வளரவிடாமல் அழிக்கப் படுவதால் தற்போது நெருக்கடி தோன்றியுள்ளது. இப்படி வரையறையின்றி எல்லாவற்றையும் வாரிக் கொண்டுவரும் டிராலர்களால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுபவர்கள் கட்டுமர மீனவர்கள்தான்.

> உடலெங்கும் மீன் நாற்ற மடிக்கக் கரை சேரும் மீனவர்களை வரவேற்பவர்கள் யார் தெரியுமா? 'சென்ட்' வாசனை மணக்க மடிப்புக் கலையாத உடுப்புடன் நிற்கும் ஏஜெண்டுகள்; ஏலம் கேட்க வந்த வியாபாரிகள்.

கட்டுமரத்தை வைத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குமேல் கடலில் செல்ல முடியாது. அதே பகுதியில் எந்திரப் படகுகளைக் கொண்டு மீன் பிடிப்பதால் நாள் முழுவதும் கடலில் இருந்தாலும் கட்டுமர மீனவர்களுக்கு கிடைப்பது ஒன்றுமில்லை. எனவே கரையிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவு வரை எந்திரப் படகைக் கொண்டு மீன்பிடிக்கக் கூடாது; மீன்கள் இனவிருத்தி செய்யும் பருவமாகிய மழைக்காலத்தில் எந்திரப் படகுக்காரர்கள் மீன்பிடிக்கக் கூடாது —என்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராடினர் கட்டுமர மீனவர்கள்.

10 கிலோ மீட்டர் எல்லைக்குள் எந்திரப் படகுக்காரர்கள்மீன்பிடிக்கக் கூடாது என சட்டம் இயற்றப்பட்டது. மழைக் காலத்தில் மீன்பிடிப்பது அரசுக் கடன் வாங்கிய எந்திரப் படகுக்காரர்களுக்கு மட்டும் தடை செய்யப்பட்டது. (அதுவும் படகு கவிழ்ந்துபோனால் கடனுக்காக ஜப்தி செய்யமுடியாது என்பதால்). ஆனால் இந்தத் தடைகள் பெயரளவிலானவைதான் இவை சர்வ சாதாரணமாக மீறப்பட்டு வருகின்றன. நீண்ட தூரம் கடலில் சென்று மீன் பிடிக்க வாய்ப்பிருந்தும் 10 கிலோ மீட்டருக்குள் டிராலர்கள் மீன் பிடிப்பதால் கட்டுமர மீனவர்களுக்கும் இவர்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. இந்த மோதலில் பலர் உயிரிழக்கின்றனர்.

கடலிலேயே கட்டுமரத் தொழிலாளர்களை சுட்டுக் கொன்றதோடு, நேரடியாகத் தாக்கிக் கொல்வது கரையிலும் நடந்ததை சென்னையில் சில ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தோம்.

கட்டுமர [illegible] மாகப் பயன்படுத்தக்கூடிய வலையின் விலை ரூ. 500 முதல் 5000 ரூபாய் வரை உள்ளது. கட்டுமரம் செய்வதற்கான மரத்தின் விலையோ நாள்தோறும் ஏறி வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெரும்பாலான மீனவர்களிடம் படகும் இல்லை, வலையும் இல்லை. படகையும் வலையையும் இவர்கள் வாடகைக்கு எடுத்துக் கொண்டுதான் செல்கின்றனர்.

மீனைப் பிடித்துக் கொண்டு கரை வந்து சேர்ந்தவுடன் அவர்கள் பிடித்து வந்த மீன் பங்கு போடப் படுகிறது. கட்டுமர உரிமையாளருக்கு 1½ பங்கு, வலை உரிமையாளருக்கு 1 பங்கு, கட்டுமரத்தில் சென்ற மீனவர்களுக்கு ஆளுக்கு ஒரு பங்கு. இதுவே விசைப்படகாயிருந்தால் விசைப்படகு முதலாளிக்கு 5 பங்கு, டிரைவருக்கு 1 பங்கு, மீனவர்களுக்கு ஆளுக்கு ஒரு பங்கு, விசைப் படகு உரிமையாளர் டிரைவருக்குச் சம்பளம் கொடுத்து விடுவதால் அவரது பங்கையும் தானே எடுத்துக் கொள்கிறான்.

உயிரைப் பணயம் வைத்துக் கடலில் செல்லும் மீனவருக்கு ஒரு பங்காம். எப்படியிருக்கிறது நியாயம்! கட்டுமரம் மற்றும் எந்திரப் படகு உரிமையாளர்கள் பெரும்பாலும் பண்ணைகள், லேவாதேவிக்காரர்கள், அதிகாரிகள் மற்றும் கள்ளக்கடத்தல் பேர்வழிகள்தான். ஏதோ ஒரு சில மீனவர்கள்தான் அரசுக் கடன் வாங்கி கட்டுமரத்தைச் சொந்தமாக வைத்துள்ளனர். எடுத்துக் காட்டாக, நாகப்பட்டினத்தில் மட்டும் 10,000 மீனவர்கள வாழும் மீனவர் குப்பத்தில் உள்ள 700 கட்டு மரங்களில், ஒரு சில மட்டுமே கடலில் செல்லும் மீனவர்களுக்குச் சொந்தமானவை.

ஒரு பகல் ஒரு இரவு முழுவதும் நடுக்கடலில் போராடிப் பிடித்த மீன்களோடு உடலெங்கும் மீன் நாற்றம் அடிக்க கரை சேரும் மீனவர்களை வரவேற்பவர்கள் யார் தெரியுமா? 'சென்ட்' வாசனை மணக்க, மடிப்புக் களையாத உடுப்புடன் நிற்கும் ஏஜெண்டுகள். பிடித்து வந்த மீனை ஏலம் கேட்க வந்தவர்கள், இந்த ஏலத்தைப் பார்த்தால் நெஞ்சில் ஈரம் உள்ள யாருக்கும் ரத்தம் கொதிக்கும்.

ஒரு கட்டுமரத்தில் பிடித்து வந்த ஏறக்குறைய 30 கிலோ மீனை 115 ரூபாய்க்கு ஏலம் விடுகின்றனர். இதில் பங்கு பிரித்தால் ஒரு மீனவருக்குக் கிடைப்பது 15 ரூபாய். இதில் ஏலம் விடும் ஏஜெண்டுக்குக் கமிஷன் வேறு இந்த ஏலத்தை நடத்துகின்ற முதலாளிகள் ஒரு கூட்டாக இயங்கி ஏலத் தொகையைக் குறைத்தே கேட்கின்றனர். பெரும்பாலான இடங்களில் கட்டுமர உரிமையாளர்கள்தான் ஏல முதலாளிகளும். இது ஒரு இருமுனைக் கொள்ளை.

/ஏஜெண்டுகளிடமிருந்து கைமாறி நகரங்களில் வியாபாரியின் கைக்கு மீன் வருகிறது. சந்தையில் மக்கள் வாங்கும் போது சராசரியாக மீனின் விலை கிலோ 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய்தான். கடலிலிருந்து மீனைக் கொண்டு வந்து சேர்ந்த மீனவனுக்கு கிடைப்பதோ. கிலோவுக்கு 3½ ரூபாய். இப்படி அடிமாட்டு விலைக்கு மீனவர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் . எஸ். மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு சைதாப்பேட்டை – சென்னை – 600015. அச்சிடுபவர் : எம். கே. சாமி, பிரேம் பிரஸ், 107–ஏ பெரியார் பாதை (மேற்கு)

களிடமிருந்து கொள்முதல் என்ற பெயரில் கொள்ளையிடப்பட்ட மீன்கள்தான் அந்நியச் செலாவணிக்காக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இதுதான் மீனவர்களின் வாழ்க்கை. மீனவர்கள், ஆண், பெண் வேறுபாடு இன்றி அனைவரும் உழைக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பமும் ஓர் உயிரையாவது கடலுக்குப் பலி கொடுத்திருக்கிறது. பெரும்பாலான மீனவர்களின் வாழ்க்கை 45-50 வயதுடன் முடிந்து விடுகிறது. காச நோய் இவர்களின் 'உடன்பிறப்பு'. இவர்கள் வாழும் சேரும் சக்தியும் நிறைந்த குப்பங்கள் நோய்களின் பிறப்பிடங்கள். சிறு வயது முதலே வயிற்றைக் கழுவ கடலில் செல்ல வேண்டியிருப்பதால் 100க்கு 80 சதவிகத்தினரும் மேற்பட்டவர்கள்எழுத்தறிவில்லாதவர்கள்.

இப்படி பல முனைகளிலிருந்தும் வஞ்சிக்கப்படும் மீனவர்களிடம், எஞ்சியுள்ளதை வட்டி லேவா தேவிக்காரர்கள் உறிஞ்சுகிறார்கள். மழைக் காலங்களிலும் பருவநிலை மோசமாக இருக்கும் காலங்களிலும் மீன் பிடிக்கச்



கிராமத்துச் சந்தையிலே மீன்விற்கும் மீனவப் பெண்கள் — 'உதட்டிலே சிரிப்பு — உள்ளத்திலே துயரம்'

செல்ல முடியாது. அத்தகைய நாட்களில் கால் வயிற்றை நிரப்ப வேண்டுமானாலும் கடன்காரர்களிடம் கையேந்தி நின்றுதான் ஆக வேண்டும்.

கடலையும், கடற்கரையையும் தாண்டி பெரும்பாலான மீனவர்கள் வேறெங்கும் செல்வதில்லை. பிறபகுதி மக்களுடனோ, நகர்ப்புற நாகரிகத்துடனோ இவர்களுக்கு எந்தத் தொடர்பும் இருப்பதில்லை. இதை நன்றாகப் பயன்படுத்தி கொள்கின்றன மத நிறுவனங்கள். குறிப்பாக கிறித்துவமத நிறுவனங்கள். வர்க்க ரீதியாக மீனவத் தொழிலாளர்கள் இயந்திரப்படகு முதலாளிகளை எதிர்ப்பதைத் திசை திருப்ப அவர்களை மதம் என்னும் ஒரு குடையின் கீழ்கொண்டு வருகின்றனர், கிறித்துவப் பாதிரிகள். மண்டைக் காட்டில் எப்படி இந்துமத வெறியர்களின் தரப்பில் ஆர். எஸ். எஸ் செயல்பட்டதோ அப்படி பாதிரிகள், கிறுத்துவ மதவெறியை மீனவர்கள் மத்தியில் தூண்டி விட்டனர்.

கேரளாவின் கடற்கரையில் கிறித்துவப் பாதிரிகளின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது. எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போட வேண்டும் என்பதைக் கூட இவர்கள் தீர்மானிக்கின்றனர். கடந்த தேர்தலில், காங்கிரஸுக்கு ஓட்டளிக்குமாறு நேரடியாகவே பிரச்சாரம் செய்தனர் பாதிரிகள். மீனவர்கள் தாங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடத் திரண்ட போதெல்லாம் "நீங்கள் இங்கே படும் அல்லல்களுக்காக இன்பமயமான வாழ்வு மோட்சத்திலே காத்திருக்கிறது. எனவே போராடாதீர்கள்" என நேரடியாகவே பிரச்சாரம் செய்கின்றனர். மீனவர்களிமிடமிருந்து நிதி வசூல் செய்து குப்பத்திற்குக் குப்பம் மாதா கோயில்களை எழுப்புகின்றனர். இதில் இவர்களுக்குள் போட்டி மனப்பான்மையை உருவாக்கி, அவர்களிடம் பணம் பிடுங்க வழி தேடுகின்றனர். கேரளத்தில் ஒரு கிராமத்தில் இப்படிக் கட்டப்பட்ட ஒரு மாதா கோயிலுக்கு ஆன செலவு 1 கோடி ரூபாய்!

மீனவர்கள் மத்தியில் இருக்கின்ற சங்கங்கள் அனைத்துமே பிற்போக்குக் கட்சிகளின் தலைமையில் உள்ளவை. தமிழகத்தில் குறிப்பாக அ.தி.மு.க. சங்கங்கள்தான் ஆதிக்கம் வகிக்கின்றன. புயலடிக்கும் நேரத்தில் வேட்டி, சேலை விநியோகம் செய்வதைத் தவிர இவை வேறெதுவும் மீனவர்களுக்குச் செய்ததில்லை.

மீனவர்கள்—இவர்கள் விவசாயிகளைப் போலவே புறக்கணிக்கப்பட்டவர்கள். விவசாயத்தைப் போலவே இந்த தொழிலும் பல நூற்றாண்டுகள் பழமையானது. தங்கள் அனுபவங்கள் மூலம் கடலின் ஒவ்வொரு அங்குலத்தையும் அளந்து வைத்திருக்கிறார்கள் மீனவர்கள். பருவ நிலை மாற்றம், அலைகளின் ஏற்ற இறக்கம், எத்தகைய அலைகளில் எத்தகைய மீன்கள் கிடைக்கும், எந்தெந்தப் பகுதிகளில் கடலின் ஆழம் எவ்வளவு — இப்படி கடல் பற்றிய இவர்களது கணிப்பும், கடலைப் போலவே பரந்தது.

இருப்பினும் அவர்களையும், நம்மையும் அடக்கி ஆள்கின்ற அரசைப் பற்றியும், அவர்களை ஏத்திப் பிழைக்கும், ஓட்டுப் பொறுக்கிகள் பற்றியும் அவர்கள் இன்னும் போதிய அளவு அறிந்து கொள்ளாததால் அவர்களை இன்னமும் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர். இதை அவர்கள் உணர்ந்து கொள்ளும் நாளில் அவர்களது கட்டுமரங்களில் மீன்கள் மட்டும் இருக்காது. புரட்சிப் போருக்கான ஆயுதங்களும் இருக்கும். ●

● கே. முத்து

## நரவேட்டையாடும் போலீஸ் வெறிநாய்கள்

"நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் காடெல்லாம் பறவையின் இறகு மட்டுமே மிஞ்சும்" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். ஆந்திரத்திலே என். டி. ராமராவின் ஆட்சி அப்படித்தான் நடக்கிறது. 'தீவிரவாதிகளுடன் மோதல்' என்ற பெயரில் புரட்சியாளர்களை, ஏழை உழைக்கும் விவசாயிகளைப் படுகொலை செய்து வருகிறது ஆந்திர போலீஸ் வெறிநாய் கூட்டம். 'தீவிரவாதத்தை எதிர்ப்போம்' என்ற பெயரில், நாளும் மக்களின் ஆதரவோடு வளரும் நக்சல்பாரிப் புரட்சி இயக்கத்தை ஒடுக்கிவிட அரசு வீண் கனவு காண்கிறது. சொல்லப்படும் அரசியல் சாசன உரிமைகளைக்கூட முறித்துப் போட்டு வருகிறது.

இதற்கொரு இரத்த சாட்சிதான், ஆந்திரப் பிரதேசக் குடியுரிமைச் சங்கத்தின் துணைத் தலைவர் டாக்டர் ராமநாதம் போலீசாரால் பட்டப்பகலில் கொல்லப்பட்ட கொடூர நிகழ்ச்சி!

வாரங்கல் பகுதியில் 'தீவிரவாதிகளை' ஒடுக்கும் அரக்கப்படையில் அங்கம் வகித்த சப்-இன்ஸ்பெக்டர் யாதகிரி ரெட்டி அண்மையிலே சுட்டுக் கொல்லப்பட்டார். கொன்றது யார் என்பது எவருக்குப் தெரியாது. ஆனால் 'தீவிரவாத நக்சலைட்டுகள் தான் கொன்றார்கள்' என்று கூறியது போலீசு! அத்துடன் நிற்கவில்லை. அந்த சப்-இன்ஸ்பெக்டரின் சவ ஊர்வலத்தின் போது வாரங்கல் பகுதி போலீஸ் பட்டாளம் வழியிலிருந்த டாக்டர் ராமநாதத்தின் மருத்துவ மனையைத் தாக்கி, தப்பி ஓடிய அவரை மறித்துச் சுட்டுக் கொன்று விட்டது.

வாரங்கல் மக்களே சாட்சியாக இருக்கிறார்கள்; மக்கள் போற்றிய மருத்துவத் தொண்டர் ராமநாதத்தை போலீஸ் கொன்றதைக் கண்டித்துப் பேசுகிறார்கள். தொடர்ந்து போலீசின் மிரட்டலுக்கு உள்ளாகிறார்கள சாட்சிகளும், மக்களும்.

டாக்டர் ராமநாதத்தின் மக்கள் உரிமைப் போராட்டங்களை பத்தாண்டுகளாக நாடு நன்கறியும்; உழைக்கும் மக்கள் நன்கறிவார்கள். ஒரு குரலாய் எழுந்து நிற்கும் இவர்களின் போர்க்குரல் வன்மையாக இந்த அரசு பயங்கரவாதத்தைக் கண்டிக்கிறது. நாமும் இதனை எதிர்த்தும் போராடக் குரல் கொடுக்கிறோம். அரசு பயங்கரவாதத்தின் விளைவாக நாடெங்கும் தோன்றியிருக்கும் தனிநபர் பயங்கரவாதக் குழுக்களை அரசு பயங்கரவாதத்துக்கு மாற்றுத் தீர்வாக வைக்க முடியாது என்றும் நாம் உறுதியாக நம்புகிறோம் மக்கள் திரளை இணைத்து நடத்தப்படும் புதிய ஜனநாயகப் புரட்சி சமர்தான் இதற்குப் பதிலடி கொடுக்க முடியுமென்றும் அறுதியிடுகிறோம்! ●